ஸ்ரீமஹாபாரதவிலாசம்
அர்ச்சுனன் தபசும்
தெய்வயானை கலியாணமும்

T.D. RC 3224
RR No 153-1-76

DIGITIZED

J;892 MKR;M
M79

115652

உ

கடவுள் துணை.

# ஸ்ரீமகாபாரதவிலாசம்

## அர்ச்சுனன்தபசும்

## தெய்வலோகசரித்திரமும்.

நாற்கவியிலும்-முத்தமிழிலுஞ்சிறந்த

ம-ா-ஸ்ரீ-இராயநல்லூர்

இராமசந்திரகவிராய

ரவர்களாலியற்றியது.

இஃது

ஸ்ரீவில்லிபுத்தூர்-இராமாநுஜசுவாமிகளால்

பிழையறபரிசோதிக்கபட்டு.

குத்தம்பாக்கம்.


ப-லட்சுமைய நாயுடு.

அவர்களது

இலக்ஷ்மிவிலாஸ

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

யுவஞூ மார்கழிமீ



அர்ச்சுனன்தபசுமரம்.

உ

கடவுள் துணை.

# ஸ்ரீமகாபாரதவிலாசம்.

## அர்ச்சுனன்தபசு.

### விநாயகர்துதி.

காப்பு.

வெண்பா-இராகம்-சங்கராபரணம்.

வீசுபுகழ்விஜையன்மெய்த்தவஞ்செய்திப்புவியில்
பாசுபதம்பெற்றநெறிபாடவே-பேசுமொரு
விக்கினமகற்றிநிறைவித்தைநலபுத்திதருங்
கக்கரிமுகத்தனருள்காப்பு.

இதுவுமது.

விருத்தம்.

எத்திசைதனிலுங்கீர்த்தியிலகியகுருகுலத்தில்
அத்தமகுணத்தின்மிக்கவுயர்ந்தபாண்டவர்களில்
சத்தியவிரதனானதனஞ்சயன் றமிழைப்பாட
வித்தகன்சென்னைதர்ம விநாயகன்காப்பதாமே

இதுவுமது.

திருமருவுநாயமதிகுலத்துதித் திவ்வுலகனைத்துஞ் செங்கோலோச்சும்,
குருகுலபாண்டவர்கள்நாயகனர்ச்சுனன்கைலைக்குன்றமேவி
பெருகதபஞ்செய்தசரித்திரமதைபரன்றமிழதனாற்பேசவீசன்
மருவுமலைமகள்புதல்வனைக்குஞ்சரத் தானைமுகன்மலர்த் தாள்காப்பாம்,

### சுப்பிரமணியர்துதி.

விருத்தம்.

தாரணியுந்தனஞ்சயன்சந்திரயௌவிதனைக்காணதனாட்கொண்டு,
ஏரணியுந்தலவேடம்பூண்டுலகவாஞ்சையைவிட்டேயென்பாய்

ஆரணியுஞ்சடிலனிட்டத்தனந்தவரம்பெற்றவருங்கர்தைபோத
காரணிதன்புதல்வனறுமுகவனிருசெஞ்சரணமலரினங்காப்பாம்

## கலைமகள் துதி.

### விருத்தம்.

மானிலமன்னவர்கள்தினம்பரவுமணிமுடிவிளையுமருவுகின்ற
வானிலம்விட்டகன்றுகயிலாசலச்சாரலேயடைந்துசாதல்நீத்து
ஞானிலமற்றெவையுமித்தையாமெனவே கழித்தியற்றுந்தபசைப்பாடு
ஏனமுருப்பிடைமருவுந்நாயகலேவாணியென்றுவிருந்துகாப்பாம்

## பரமேசுரர் துதி.

### விருத்தம்.

நற்குணநற்செய்கையினு வைரியோற்றும்வலியோற்று
கயம்பாலிக்கும்
பற்குனன்மாற்றலரைவெல்லும்படையேவேண்டிப்பெருந்தவஞ்செய்
பதுவலேர்த
அக்கரவமாலைபுனைந்தறலேந்திபெர்தாவினட்
மாடுகின்ற
முக்கணன்பொன்னடியிணையை யருச்சித்துப்பூசித்தென்
முடிமேற்கொள்வான்

## உமையவள் துதி.

### விருத்தம்.

அளிமுரலுஞ்சண்பகப்பூங் குழலுமைகாத்யாயினியா
மனோன்மணிதெ
நளினமலர்ச்சரணியபி ராமியெனுஞ்சனித்ரா
ரணியைப்போற்றி
கிளர்வயிரமணிமகுட மன்னியரசர்பணிசரணக்
கிரீடிசெய்பு
மிளிர்தபவிலாசமதைப் படைத்தமிழால்மேதினியில்
விளம்புவேனே



## மகாவிஷ்ணுதுதி.

### விருத்தம்.

அருதிப்பல ஸ்மிருதியுங்கஸ் ஹாரிபுஜுகொடுபெரிய
துள்வுஞ்சரக்து
மருவுமஷ்டா க்ஷரமூல மந்திரமுமணைக்குமரி
மலர்த்தாள்போற்றி
பாவுபுகழ் பார்த்தனருந் தவமியற்றிப்பரமன்றுட்
படைகள்பெற்ற
சரிதம்மதைப் புவியிலினி வருமகிழத்தமிழதனாற்
சாற்றுவேனே

## இலக்குமி துதி.

### விருத்தம்.

ஆதிநெடுமாலணியும் கவுஸ்துவமார்பினிலமர்ந்தில்
வதில்துளணோர்
கோதிலமராபதியோ ருரகர்பலதானவற்றுங்
குறைவிலாமற்
போததன தானியசம் பத்தளிக்குமிந்திரைபொன்
னடியைப்போற்றி
ஸ்ரீகிருட்டினன்தபசு நாடகத்தைப்பைந்தமிழால்
புகழ்த்துவேனே

## மங்களம்.

தரு-இராகம்-ஆகிரி-அட்டதாளசாப்பு.

### பல்லவி.

மங்களம் மங்களம்-ஜெயசுப-மங்களம்-மங்களம்.

### அநுபல்லவி.

மங்களம்வல்லபை மருவுமணாளர்க்கும்
மஞ்ஞையிலேறிவேல்கை லைக்குன்குறளர்க்கும் (மங்)

### சரணங்கள்.

மதிகதிர்முடியினில் வைத்திடுமையனுக்கும்
வாரோதயரையோட்டி வந்திடுமெய்யனுக்கும்

தமிழிலுகவிசெய்வா — யென்றநாவலருக்குத்
தலைகூர்ந்தருள்செய்யுந் — தாயாஞ்சரஸ்வதிக்கும் (முந்.

மைந்தர்கவலையைமாய்க்கும் — வரைமகட்கும்
மகத்தீஸ்வர்யகதா வந்த — திருமகட்கும்
சிந்தைபையோர்வழியிற் செலுத்தி — மாதவத்தினைச்
செய்துமெய்ப்போதத்தைச்சேர்க்க — முனிவர்கட்கும (முந்

இனியில்வுலகத்தில் யாருந் — தமக்கிணை
யில்லையென்றதுப்பிய பெருக — ளுக்குத்துயரை
தனையேசெய்துகாத் தருள்கோ — விந்தாவென்று
சாற்றும்பாண்டவருக்குந் தங்கள்ம — னையாளுக்கும் (முந்.

விநாயகர்வருகிற-பொதுவிருத்தம்.

இராகம்-பைரவி

முக்கணர்புதல்வனாயு முராரிமருகனாயுந்
தக்கன்வேள் வியைத்தவிர்த்த தனியானைமுகவனாயும்
பக்குவமடையஞானம் பகர்க்கெவருக்குமேலாய்
மிக்கவேவிளங்கும்வேத விநாயகர்வருகின்றாரே

விநாயகர்வருகிற-தரு.

இராகம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்

பல்லவி.

சென்னைவிநாயகர்வந்தார் — இதோ
சென்னைவிநாயகர்வந்தார்

அநுபல்லவி.

மன்றும்சாயகல்லூர் வாழும் — ராமச்சந்திரன்
வழுத்துநாடகத்திற்குமுன்னிற்கவே — சென்னை

சரணங்கள்.

சிரசிற்பொன்முடி — அலங்க-நுதலிற்
திவ்யவெண்ணீறுகரப் — பிலங்க
உரத்திற்முப்புரிநூலு — மசைய
ஒங்குபாசாங்குசகரத்தி — லிசைய-சென்னை
பத்தர்சித்தாடி — வணங்க வாம
பாகத்தில்வல்லபை — யிணங்க



சுற்றியண்டர்கள்புட்ப — மாரிதூற்ற
நாயவர்பணர்கள்வேதங்க — ளைச்சாற்ற (சென்னை)
சுவையிருமுக்கனி — புண்டு-கல்ல
தோசைவடையுட் — கொண்டு
எவனமர்னமூறிகத் — ளைதக்கூவி
இன்பமாகத்தானதின் — மீதில்மேவி (சென்னை.)

கட்டியக்காரன்வருகிற-பொது-விருத்தம்.

இராகம்-தோடி.

தருமத்தினிலையிற்சிந்தைதல்லனையெப்போதும்வைத்து
வருமன்பர்துயரைநீக்கிமகிழ்வுகொண்டாடச்செய்யுந்
திருமகள்கொழுனனுணசிதாள்பதத்தையெண்ணி
துரிதமாய்கட்டியக்காரன்சொகுசுடன்வருகின்றானே

கட்டியக்காரன்-வருகிற-தரு.

இராகம்-சங்காரபரணம்-அட்தாளசாப்பு

பல்லவி.

கட்டியக்காரன்வந்தான் — உதாரக்
கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி.

குட்டிச்சிங்கப்போல்குதி - குதித்துகெற்சித்துக்கொண்டு கட்டி.

சரணங்கள்.

தலையிற்சரிகைப்பாகை — மாட்டி-உயர்ந்த
தங்கத்தாராயதிற் — குட்டி
மலையுங்கெடுகிடேன்றே மருளுயிருதோளில்
மாணிக்கக்கிரீடியை-பருவும்படியாய்க்காட்டி. — கட்டி.
வண்டவர்மனங் — கலங்க-கையினிற்
கத்திகேட்ய — மிலங்க
மண்டலம்புகழ்ருந்தி மைந்தர்கள்வனவாசம்
வருஞ்சரிதையைச்சொல்ல - மகாசபைதுலங்க — கட்டி.
சல்லடங்கச்சை — துன்னா-காலினிற்
சதங்கைகலக — லென்ன
எல்லவரும்புக ழெம்பிரான் — பதம்மனே
இரவும்பகலுந்துதித் - திருப்புவனிவனென்ன — கட்டி,

கட்டியக்காரன் சொல்-வசனம்.

அதேதெப்படி யென்றால்- துரியோதனன்செய்த கபடமாகிய சூ தாட்டத்திலே-தங்களுடைய நாடுநகரம் சொக்க சோசன முதலாகி தாந் தோற்றுவிட்டுப் பாண்டவர்களும் துரோபதியும் வனவாசஞ் செய்ய வருகிறவிதங்காண்க

பாண்டவாள்வருகிற-பொதுவிருத்தம்.

புலிக்கூட்டஞ்சிங்கத்தைப்போல் - போர்க்களஞ்சுவீரரைப்போல்
எலிக்கூட்டம்பூனையைப்போல் இடிக்கஞ்சுங்காரைப்போல
கிலிக்கஞ்சுங்கருத்தைப்போல நீர்த்தியாம்பாண்டவர்கள்
பெலிக்கஞ்சிவிட்டாரை பெருந்தவருகின்றாரே

பாண்டவாள்வருகிற தரு.

இராகம்-தோடி-மிசுரதாளம்.

பல்லவி.

பாரோர்புகழுமதி பதிகளாகியபஞ்ச
பாண்டவரிதோவந்தார்

அநுபல்லவி.

சோர்ந்திடுந்தங்கள்தேசமுஞ்
சேதானகுதினிற் செலுத்திவனந்தனிற்குப்

செல்வமுக்
பாரே

சரணங்கள்.

ஓங்காரமாங்கொலுவை
நீரவீரமெல்லாந்
செங்கோற்கொண்டவ-ரிட்டதினிற்றருமருஞ்
சேருமென்றதும் பொய்தாப்போமோ வெனவுமெண்ணிப்

மறக்கு-தங்க
அறக்கு

பாரோர்

பெரியோருமவர்பக்ஷ
புரட்டுக்கே அணையாகிப்
சிறியோர்தென்றுசொன்ன-விகர்ணன்விதுராராஜன்
தங்கள் பேச்சையுந்தள்ளி-விட்டாரே

மானர் - சகுனி
போனர்

யென்று சொல்லி

பாரோர்.

ஆதிமூலமேபாக்
அடியார்க்கித்தனையாய
மாலட்சுமியை மார்பினில்வைத்திடும்
மாதவனேயுபய-பாதமேகதியென்று

தாமா-உந்தன்
ராமா

பாரோர்.



தருமர்-தம்பிமார்களுக்கும்

துரோபதைக்கும்சொல்-விருத்தம்.

என்னிட்டதம்பிமாரேயிலகுதுரோபதியேகேளாய்
அந்தநாட்டைவிட்டு அடவியில்வந்துசேர்ந்தோம்
மன்னுமிவ்வனந்தானென்மெத்த வளம்பெறவிருப்பதாலே
இன்னமில்லாமலிங்கே சிலகாலஞ்சஞ்சரிப்போம்.

வசனம்,

கேளும் என்னருமைத்தம்பிமார்களே - துரோபதையே - காங்களு தாடி நாடுநகரிழந்து இந்த ஆரணியத்திலவந்துசேர்ந்தோம் - ஆகிலு ம்இந்தவனம் நன்றாய்த்தழைத்து தடாகமுஞ்சோலைகளுமா யிருக்கிற படியினாலே இங்கேசிலகாலம்வாசம்பண்ணுவோம் தம்பிமார்களே,

தம்பிமார்கள்வரும்-தருமருக்குச்சொல்விருத்தம்.

தந்தையைநிகர்த்தவெங்கள் தமையனேபோற்றிநீர்தான்
சிந்தையிலநினைத்துசொன்ன திரு வாக்குக்கெதிர்வாக்குண்டோ
முந்திராம்வந்தயிந்தமுனிவர்வாழ்கானகத்தில்
சந்தமாய்சிலதுகாலஞ்சஞ்சரித்திருக்கலாமே.

வசனம்,

பிதாவுக்குநிகரான அண்ணாவே- தேவரீர்திருவாக்குக் கெதிர்வாக் குண்டோ-உம்முடைய மனோயிஷ்டப்படிக்கு இந்த திவ்வியமானவனத் திலே சிலகாலம்வாசம்பண்ணுவோம் அண்ணாவே,

வேதவியாசர்வருகிற-பொதுவிருத்தம்.

வனத்திலிவ்வாறுசப்பாண்டவர்கள்வாழ்ந்திருக்குநாளேர்
தினத்திலவரைக்கண்டுதிடதயிரியமுஞ்சொல்ல
மனத்திலேஎலாசைகொண்டுமறைகளோச்சிக்கருத்து
கனத்தைக்கொள்வேதவியாசர்காட்டுக்குவருகின்றாரே.

வசனம்,

அகோதெப்படியென்றால் - இந்திரப்பிரஸ்தத் திலேயிருந்த பாண் டவர்களை துரியோதனன் கபடமார்க்கமாயழைத்து மகாபாதகனான ச குனியைக்கொண்டு சூதாட்டச்செய்து சகலமுங் கெலித்துக்கொண்டுப ன்னிரண்டுவருஷம் வனவாசமும் ஒருவருஷம் அக்கியாதவாசமுஞ்செ ய்யச்சொல்லி பாண்டவர்களைக் காட்டுக்கு அனுப்பி விட்டபோது அ வரிடத்திற்கு வேதவியாசர்வருகிற விதங்காண்க.

வேதவியாசர்வருகிற-தரு.

இராகம்-பரசு-ஆதிதாளம்.

பல்லவி

வியாசர்வந்தாரே இதோவேத
வியாசர்வந்தாரே

அநுபல்லவி.

பாசவினையெள்ளள வில்லாத
பாண்டவமகத்துவான போதர் வியாசர்

சரணங்கள்.

மேதினிவாழ்வை வெறுத்தோர்-சதுர்
வேதங்களைச்சிக் கறுத்தோர்
நாதவிழ்கமலாலயத்துறை
சதுர்முகப்பிரம்மாவை சேர்ந்த வியாசர்
கமண்டலக்கெண்டு மெய்த்த-இடையிற்
காவிவஸ்திர முடித்து
விமலமானமெய்ஞ் ஞானமல்லாமல்
விளங்குமாய்கையஞ்ஞானம் விடுத்து வியாசர்
சுகரையளித்த வைவர் - ஞானத்
துறையறிந்திடு மெய்யர்
பெரும்வனத்தி லிருந்து மெலியும்
பாண்டவர்களைக் காத்தருள் செய்ய வியாசர்

பாண்டவர்கள்-வியாசருக்குப்,

போற்றி-விருத்தம்,

சுருதியோர்நாலுஞ்சொன்ன தூயமாதவரேபோற்றி
கருதியபொழுதில்வந்துகாக்குமுத்தமரேபோற்றி
குருகுலம்விளங்கவந்த குற்றமற்றவரேபோற்றி
திருவளர்வியாசரேயுன்றிருவடிபோற்றிபோற்றி,

வியாசர்-பாண்டவர்களுக்கு

வாழ்த்து-விருத்தம்.

பத்தியிலுயர்ந்தவெங்கள்பாண்டுமைந்தர்களேவாழி
குற்றமில்லாதயிந்த குந்திமைந்தர்களேவாழி
இத்தலத்தபரேசெங்கணுசீர்வாதத்தால்
உற்றவிவ்வுலகில்நீங்களொருகுறைவின்றிவாழி.

இதுவும்வியாசர்சொல்-விருத்தம்.

நாட்டுனைசலத்தில் வாழுந்தாமரைதனைப்பிடுங்கி
வாட்டிடக்கரையில்போட்டவாறுபோல்மைந்தரேநீர்



நாட்டினிலிருந்தநீங்கள்கல்லெரலர்மிழுந்தேயிந்த
காட்டினில்மெலிந்துநின்றகாரணமென்னசொல்வீர்

வசனம்,

கேளுங்கள் என்னருமைப் பிள்ளைகளே, ஜலத்திலிருந்த தாமரையைப்பிடுங்கி கரையினிற்போட்டாற்போல உங்களிருப்பிடமான நாடு நகரத்தைவிட்டு இந்த ஆரணியத்திலேவந்து மிகவுந்தளர்ச்சியாய்சஞ்சரிக்கவேண்டிய காரணமென்ன சொல்லுங்கள் மைந்தர்களே.

தருமர்-வியாசருக்குச்சொல்-விருத்தம்

கண்டகன்துரியனேதோகபடத்தைமனதிலெண்ணி
மண்டபமொன்றுண்டாக்கி மகிழ்ச்சியாய்வரவழைத்து
தண்டகன்கொடியபாவிதுயர்தருஞ்சகுனிதன்னால்
விண்டசூதாடச்செய்துவிளைவித்தவிதியீதையா.

வசனம்,

கேளுஞ்சுவாமி வேதவியாசரே-மகாபாவியான துரியோதனன் ஒருமண்டபஞ்செய்து துரோகியான சகுனியைக்கொண்டு சூதாடச்செய்த காரணத்தினாலே வந்தயிடையூறுகள்சுவாமி.

வீமன்-வியாசருக்குச்சொல்-விருத்தம்,

எங்களையழைத்தவாறுமிறையவன்சகுனிகர்னன்
தங்களுக்குள்ளேதாங்கள்கற்பனைநினைத்தவாறும்
வங்கணாதாலெங்கள்வாழ்வெலாம்பறித்தவாறும்.
இக்கதையெழுதவென்றாலேட்டிடங்கொள்ளாதையா.

வசனம்.

கேளுஞ்சுவாமி வேதவியாசரே - எங்களைக் கபடமாயழைத்ததும், அந்தத்துரியோதனன்- சகுனி- கர்னன்- மூன்றுபேரும் உள்ளுக்குள்ளே உபாயகற்பனைகள்நினைத்து சொக்கட்டாடி எங்கள் கஜேந்திரபாக்கியமெல்லாம் பறித்துக்கொண்டதும் இதுகளெல்லாம்சொல்லவும் ஏட்டிலேயெழுதவுமுடியாது சுவாமி.

அர்ச்சுனன்-வியாசருக்குச்சொல்விருத்தம்,

வில்லுண்டுகணைகளுண்டுவிசயனென்றொருபேருமுண்டு
சொல்லுண்டுமேலுமந்தத் தூயகாண்டீபமுண்டு
கல்லுண்டமனத்தோர்தம்மைக்கனவிட்டபஞ்சுசெய்வேன்
மல்லுண்டவெங்களண்ணன்மறுத்ததால்பொறுத்தேனையா.

வசனம்,

கேளுஞ்சுவாமி வேதவியாசரே- அவர்களுடையசதிகற்பனைக்குப் பயப்பட்டவன் நானல்ல- ஏனென்றால் என்கையிலே பிரசண்ட

காண்டீபமொன்றுண்டு- அதிகோரமான பாணங்களுமுண்டு- இக்குவிசயனென்று எனக்கொரு பேருமுண்டு- மேலும் உம்முடைய கருணாகடாக்ஷம் பூரணமாயுண்டு - ஆனபடியினாலே அந்த துரியோதனாதிகளை நிமைப்பொழுதிலே மித்யாதி படலமாயடித்து போடுவேன். எங்களண்ணன் தர்மபுத்திரர் தடுத்ததினால் பொறுத்துக் கொண்டிருக்கிறேன் சுவாமி.

நகுலன்-வியாசருக்குச்சொல்-கவி.

பெரியவனென்றிடும்பெரிதகப்பனதாயும்
துரியன்சகுனி துச்சாதனன் கர்ணனும்
எரியெழுகெருப்பெனவெழுந்தானன்விய
விரிவைகளெனென்னென் றியம்புவேனையா.

வசனம்,

கேளுஞ்சுவாமி வேதவியாசரே- பெரியவனென்று சொல்லப்பட்ட எங்கள் பெரியதகப்பனான திருதராஷ்டிரனும், துரியோதனனும், சகுனியும், கர்ணன்- துச்சாதனனும், எங்களுக்குவந்த தாழ்வைக் கண்டு அவர்கள் எழுந்து துள்ளின கொண்டாட்டங்களை நானெவ்வளவென்றுசொல்லுவேன்சுவாமி.

சகாதேவன்-வியாசருக்குச்சொல்-விருத்தம்.

கோவில்நகராதிகொண்டாலதுபோகட்டும்
தீவினைநூறுகோடிசெய்தாலதுபோகட்டும்
தாவியமன்னாகுலநங்கையைநாவில்லிருந்திழித்தப்
பாவையைப்பக்கட்டமானபங்கமுஞ்செய்தாரையா

வசனம்,

கேளுஞ்சுவாமி வேதவியாசரே- எங்களுக்குண்டான நாடுநகரங்களைப் பறித்துக்கொண்டார்களே அதுவும் போகட்டும், அல்லதுநூறுகோடி பொல்லாங்குகள் செய்தாலும் அதுவும் போகட்டும், தன்மானம் பிறந்தமேல் தென்னரசன் துரோபதியைச்சபையிலே இழுத்து துகிலுரிந்து மானபங்கமுஞ்செய்தார்களே அதற்கிடல்லவே யிதுகளெல்லாஞ்சுவாமி.

துரோபதை புலம்பல்-தரு,

எருக்கலேகாம்போதி - ஆதிதாளம்,

கண்ணிகள்.

பாவிதுரியோதனன்செய் பங்கந்தனையென்னசொல்வேன்
முனிநாதா — அந்த
பஞ்சமன்னர் நூற்றில் மன்றாம்வினை யாருமறியார்
முனிநாதா



நேராமாபோர்மண்டபஞ்செய்தழைப்பித்தார்களையா
முனிநாதா — அதில்
சூதர்களெல்லாமிருக்கும் தேசகாலம்போருதென்றார்
முனிநாதா
கொடியன்சகுனிராசன் குதிகுதித்தெழுந்துநின்று
முனிநாதா — ஒகோ
சொற்றவர்க்கெதிர்த்தரு வித்தையைபாட்லாமென்றான்
முனிநாதா
பிடியென்றென்றும்தர்மர் மிவைஞ்சயமித்தாரிடு
முனிநாதா — தனது
மித்திரர்களையுந்தோர்த்து விட்டுடனேதானுந்தோர்த்தார்
முனிநாதா
எல்லாங்கெலித்தப்பின்பு யென்னைக்குறித்தாட்சொன்னார்
முனிநாதா — இது
யெத்தென்றறியாமலே வைத்தாடித்தோர்த்துவிட்டார்
முனிநாதா
பொல்லாத்துரியனப்போ புன்னகையிட்டுக்கொண்டே
முனிநாதா — தம்பி
போய்த்துரோபதைச்சிகையைப்பிடித்திழுத்துவாவென்றான்
முனிநாதா
ஓரகத்திமாருடனே யுட்கார்ந்திருந்தேனப்போ
முனிநாதா — இந்த
வுளவையவர்களனைக் குறைத்திட்டாமப்போனார்கள்
முனிநாதா
வீரத்துடன்வந்தவன் விளம்பியதையென்சொல்வேன்
முனிநாதா — பின்னும்
வின்றுயென்னைத்தள்ளிவந்து சொன்னதையானென்னசெல்வேன்
முனிநாதா
காந்தாரியென்மாமியைப்போய்க் கட்டிக்கொண்டழுதேனையா
முனிநாதா — அந்த
கள்ளவஞ்சகியுங்கூடத் தள்ளிவிட்டாளென்னையப்போ
முனிநாதா
பாந்தமுறும்பாஞ்சாலன் பாக்கியவதியென்றும்
முனிநாதா — சற்றும
பாரமறுமூத்தவன்பாரியாளென்றென்றுமெண்ணும்
முனிநாதா

மயிரைப்பிடித்தென்னை மண்மேலிழுத்தானையா
  முனிநாதா ஒரு
வையபுரவாப்பில்லர்மற் செர்தபமாயிருந்தானைய்யா
  முனிநாதா
வைரிதுரியோதனன் வன்சபைக்கிழுத்துவந்தான்
  முனிநாதா எந்தன்
வஸ்திரமுரியச்சொல்லி மன்னவன்றுள்ளினனையா
  முனிநாதா
அஷ்டஞ்துச்சாதனனெந்தன் துகிலையுரிந்தானையா
  முனிநாதா அந்த
துகிலுக்குட்டுடனேருதரவெனக்களித்து
  முனிநாதா
திஷ்டமானத்தைக்காக்க கிரீடிகளுமெச்சியே
  முனிநாதா எந்தன்
கீர்த்தியைக்கொண்டாடியதைக்கேட்டிருந்திருப்பீரே
  முனிநாதா
கொல்லைத்தம்பையைச்சிரங்கொண்டபாஞ்சோதியை
  முனிநாதா நிதம்
குறித்துவிதிபாய்க்கரங் கூப்பித்தொழுதுவந்த
  முனிநாதா
அன்றைக்கும்நீ இன்றைக்குநீ என்றைக்குநீ துணையையா
  முனிநாதா எம்மை
ஆதரித்துக்காக்கவந்த வேதவித்தாயவந்தபெங்கள்
  முனிநாதா

வியாசர்-பாண்டவருக்குச்சொல்விருத்தம்.

இளகியமனத்தாளை யென்கண்ணின்மணிகள்கேளீர்
தளர்வதுமிகவுங்கொண்டுசெஞ்சலப்பட்டாரேகண்டீர்
வளமிகுமுலகிற்சக்ரவர்த்திகளாயிருந்த
ளளரிச்சந்திரன்பட்டகற்குறையறிந்திலீரோ

வசனம்,

கேளுங்கள் மிகவும்இளமையுள்ள மைந்தர்களே-நீங்கள்மிகவும்த ளர்ச்சியாய் சஞ்சலப்படவேண்டாம்- சுகதுக்கங்க ளானது எல்லோரு க்கும் உண்டு- இந்தகடல்சூழ்ந்த பூமிக்கெல்லாம் சக்கிரவர்த்திகளான நளன்- அரிச்சந்திரன் பட்ட துன்பங்களைப் போல் இனி ஒருவர்படப் போறார்களா- கொஞ்சநாளிலே உங்கள் துயரமெல்லாம் நீங்கிப்போ



கும் நீங்கள் விசனப்படவேண்டாம் மைந்தர்களே.

தருமர்-வியாசருக்குச்சொல்-விருத்தம்.

அடவியில்பன்னிரண்டு அஞ்ஞாதவாசமொன்று
திடமுடன்பதின் மூன்றாண்டு சென்றபின்வரவேசொல்லி
அடல்மிகுபீஷ்மாதி யனைவருஞ்சொன்னவார்த்தை
கடனெனச்சிரசிலேந்திக் காட்டில்சஞ்சரித்தோமையா

வசனம்,

கேளுஞ் சுவாமி வேதவியாசரே- ஆரணிய வாசம் பன்னிரண்டு வருஷமும், அஞ்ஞாதவாசம் ஒருவருஷமும் சஞ்சரித்து வந்தால் எப் போதும்போல் அவரவர் நாடுநகரம் அவரவர்களே அநுபவித்துக்கொ ள்ளலாமென்றும், இடைநடுவிலே கண்டால் மறுபடியும் இந்தப்படிக் குச் சஞ்சரிக்கவேணுமென்றும், சொன்ன பீஷ்மாதிபெரியோர்கள் வா ர்த்தையைத் தள்ளாமல் வந்து இந்த ஆரணியத்திலே யிருக்கிறோஞ் சுவாமி.

வியாசர்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

கடந்துபோனதனையெண்ணிக் காரியமென்னகண்டாய்
அடர்திடும்பயத்தினாலே யவருமக்கிணங்கமாட்டார்
திடக்கருசிவன்கையுற்றதிகழ்பாசுபதத்தைப்பெறரால்
விடக்கருபகைவர்தம்மை வென்றினிதிருக்கலாமே

வசனம்;

கேளுங்கள்பாண்டவர்களே- நடந்துபோன காரியத்துக்கு ஆலோ சனைசெய்து ஆகவேண்டியதென்ன- நன்மையில் அவர்கள்உங்களுக்கு இணங்குகிறதில்லை அப்படிப்பட்ட சத்துராதிகளைச்சாதிக்கும் படியாய் ப்பரமசிவன்கையிலிருக்கிற பாசுபதத்தைப் பெற்றாலொழிய அவர்களை வெல்லக்கூடாது- ஆகையினால் அதற்கு வேண்டின சாக்கிரதை படவே ணும் மைந்தர்களே.

தருமர்-வியாசருக்குச்சொல்-விருத்தம்.

வேதமோர்நாலுஞ் செய்தவேதாந்தவித்தேபுத்தன்
பாதமென்சிரசிற்கொண்டு பணிந்தனனொருவிண்ணப்பம்
ஓதுமுன்திருவாக்காலே யொருவரைக்குறித்துச்சொன்னால்
ஏதமில்தவமேசெய்யயிக்ஷணநடக்கின்றோமே

வசனம்,

கேளுஞ்சுவாமி வேத வியாசரே ஒருவிண்ணப்பம், தேவரீர் திரு வாக்கினாலே இந்த ஐந்துபேரில் ஒருவரைக்குறித்து இன்னார் போய்த் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெறவேணுமென்று சொன்னால் அப்ப டியே நடந்துக்கொள்ளுகிறோஞ்சுவாமி.

வியாசர்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

உங்களைவருத்துவிக்கவுணர்வுள்ளவிஜயனானால்
கங்கணங்கட்டிக்கொள்வனைக்கைலாசமலைக்குப்போவான்
சங்கரன்றனைநோக்கித்தவத்தையுஞ்செய்வானந்த
பங்கயில்லர்பாசுபதத்தையும் பெறுவான்கண்டாய்

வசனம்,

ஆனால் உங்கள்ளுக்குள்ளேயிலே இந்த அர்ச்சுனராஜனானவன் கைலா சத்துக்கும்போவான்- தவமுஞ்செய்வான் பரமசிவன் வரவையுங்காண்பான் பாசுபதாஸ்திரத்தையும் பெறுவான்- ஆகையால் இந்தஅர்ச்சுனராஜனை தபசுக்குபோகவேண்டியது.

தருமர்-வியாசருக்குச்சொல்-விருத்தம்,

மனச்சித்தமாரியிக்கவனத்திலுக்கனுப்பிவிட்டான்
தனச்சித்தப்படியேகாட்டில்தவிக்கின்றோம்தளருகின்றோம்
எனச்சித்தமினிவேறுண்டோவெங்களைகாக்கவந்த
உனச்சித்தமெங்கள்பாக்கியமுன்மொழிப்படியேசெய்வோம்

வசனம்,

துரியோதனன் மனதுமாறி எங்களைக்காட்டுக்கு அனுப்பினான்-நாங்களும் இக்தவனத்திலே யிருக்த பிரயாசைப் படுகிறோம- ஆகையினாலே தேவரீர் சித்தமெப் படியோ அப்படியே கேழ்க்கக் கட்வோம் சுவாமி.

வியாசர்-அர்ச்சுனனுக்குச்சொல்லுமிற்

உபதேச-விருத்தம்.

ஓங்கமோகமெவாயா உமாபதிருலபாணி
ஓங்கமோகிதைண்டா நம்பரஞ்சேசதிவாவா
தானென்னும்பொருளோவெந்தன் றவத்திருக்கொங்கிவக்து
பானுபோல்விளங்கும்பாசு பதாஸ்திரத்தருவாயே

அர்ச்சுனன்-வியாசருக்குச்சொல்-விருத்தம்.

தந்தையாய்தாயாய்வாழ்ந்ததருமாரிங்கேவந்து
சிந்தையில்மகிழ்கொடுக்ததேசிகாநின்றான்போற்றி
மந்திரம்பெற்றேன்பெற்றேன்வாழ்வெலாம்பெற்றேன்பெற்றேன்
தந்திரம்பெற்றேன்பெற்றேன்சமஸ்தமும்பெற்றேனையா



வியாசர்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

வடதிசையிமயச்சாரல் மலையருகினிலேசென்று
திடமுடன்சிவனைநோக்கித் திருத்தமாய்த்தவத்தைச்செய்து
படையினிற்பெரியபாசு பதத்தையும்பெறுவதல்லாற்
கடவுள்தன்னருளும்பெற்றுக் கடிதினில்வாராயப்பா

வசனம்.

கேளாய் அர்ச்சுனா, கைலயங்கிரிக்குப்போய்தபத் தைச்செதாய்ப்பரமசிவன் அனுக்கிரகத்தினாலே பாசுபதாஸ்திர த்தைப்பெற்றுச் சீக்கிரம் வருவாயப்பா.

அர்ச்சுனன்-வியாசருக்கும்-தருமருக்கும்சொல் - விருத்தம்.

அப்படிதானேசென்று ஆதியாஞ்சிவனைநோக்கித்
தப்பிலாத்தவத்தைச்செய்து தரும்படைபெற்றுவாரேன்
ஒப்பிலாமுனியேபோற்றி யுயர்ந்தவென்னண்ணாபோற்றி
மெய்ப்புடனெந்தனுக்கு விடையதுதருகுவீரே

வசனம்.

கேளும்சுவாமிவேதவியாசரே- அப்படியேபோய் ஈஸ்வரனைநோக்கித்தவஞ்செய்து பாசுபதாஸ்தரம்பெற்றுவருகிறேன்சுவாமி

வியாசரும்-தருமரும்-அருச்சுனனுக்குச்சொல்-வாழ்கவி

பகைபாளிகள்வருவார்
புருபோர்வலுவினையா
திருக்கண்ணெறியுடனே
சுகமாய்ப்போய்வருவாய்

வியாசர்-பாண்டவருக்கும்-துரோபதிக்கும் - விருத்தம்.

அருமைமைந்தர்களேகேளீர் அம்மாதுரோபதியேகேளாய்
வருகலம்துன்பம்ரண்டும் வருவதுநம்மாலல்ல
கருதியநல்லோருக்குக் காடுநாடாகும் நீங்கள்
தருமநன்னெறிதப்பாமற் சஞ்சரித்திருங்கள்வாரேன்

வசனம்.

கேளும் பாண்டவர்களே அம்மாதுரோபதியே சுகமும் துக்கமும் நம்மால் வருகிறதல்ல ஊழ்வினைப்படிக்கு நடக்கும் நல்லோர்களுக்குக் காடேநாடாகும் ஆகையால் நீங்கள்சுகமாயிருங்கள் நான் என்னுடைய தவவனத்திற்கு அதிக சீக்கிரமாய்ப் போகவேணும் செலவுகொடுங்கள் மைந்தர்களே.

தருமர்-வியாசருக்குச்சொல்-வசனம்.
சாளைஞ்சரணம்-அப்படியேபோய்வாருங்கவாமி.

பொருவிருத்தம்.

சடைமுடிதரித்துமெய்யிற் றவளவெண்ணீறுபூசி
இடையினிற்காவிவஸ்திர மெழிலுடனுடுத்திநல்ல
வடிவுளருத்திராக்ஷ மாலையுமணிந்துகையில்
அட்டலம்புவில்லுங்கொண்டு அருச்சுனன்வருகின்றனே

வசனம்

அகோதெப்படியென்றால்-வேதவியாசர்சொற்படிக்கு அருச்சுனன் தவஞ்செய்யநடக்கிறவிதங்காண்க.

அருச்சுனன்தவஞ்செய்யவருகிற-தரு-இ-ம்-தோடி - மிசாதாளம்.

பல்லவி.

தவஞ்செய்யநடக்தானே - அர்ச்சுனராஜன்,
தவஞ்செய்யநடக்தானே

அநுபல்லவி.

சிவசிவாசிவசிவென்று தேவாமிர்தமுண்டு
தவநில்லாதமெய்ய தபசுசெய்யக்கொண்டு-தவஞ்.

சரணங்கள்

மெய்யெங்கும்விபூதி தரித்து - வேத
வியாசர்சொன்னமந்திர முச்சரித்து
ஐயன்விடையிலேறுந் தாய்பங்கைலையைநாடி
செய்யமுனிவன்பாதஞ் சிரசின்மீதிற்சூடி தவஞ்

நீண்டசடைக ளிலங்க - அந்த
கெடியசிலைகையிற் றுலங்க
பூண்டமறைமுனிவர் பொருந்துமிடங்கள் தாண்டி
பெருப்புவில்லையேந்தும் புராதனருள்வேண்டி தவஞ்

உலகவாழ்க்கையெல்லா மறந்து - தன்
னுடன்பிறந்தாரையுந் துறந்து
இலகுந்தமக்கருவந்த இடர்களெல்லாம்நீங்க
ஈசன்கையிலிருந் தெழிற்பாசுபதம்வாங்க தவஞ்

மோகினிவருகிற-பொருவிருத்தம்.

மினிவிழுமெய்மறந்து சித்தினைசெய்யுமெல்ற
கனவிலுமதிபோகக் கருதிடவொண்ணாதென்று



தனஞ்சயன்சபதங்கூறித் தபசியாய்நடக்கக்கண்டு
வனஜெகன்மோகனப்பெண் மயல்கொண்டுவருகின்றாளே

வசனம்.

அகோதெப்படியென்றால் பரமசிவனிடத்திலே பாசுபதாஸ்திரம்பெறவேணுமென்று அர்ச்சுனராஜன் தவஞ்செய்ய ஒருதபசியாய் வேடங்கொண்டு கைலாசகிரியைத் தேடிக்கொண்டுபோகும்போது மோகினி வருகிறவிதங்காண்க.

மோகினிவருகிற-தரு-இ-ம்-அசாவேரி - தாளம்-ஆதி-

பல்லவி.

வித்தைபரியள-பதுமவதனிய-விலாசமோகினிவந்தாள்,

அநுபல்லவி.

மகபதியுலகினில்-மருவும் அரிவையர்கள்
வர்ணனைமெனவிந - முக்குதிபுரிந்து
வித்தையிலிலகிக-சுந்தரமிகவுள வித்

சரணங்கள்.

பாரிலரிதாமிய ளங்கம் -நல்ல - பத்தரை மாற்றுப்பசுந் தங்கம்
சேருங்காமரசவில்லங்கம் -எல்லாந்-தேர்ந்துளமன்மதப்பிரசங்கம்
அரும்பிரமிக்குமழ காணுமிந்த பொங்கம்
அங்கஜன்சாஸ்திரங்க ளடைந்திடும் பெருமங்கம்
அண்டர்முனிவர்மையல் கொண்டுதவநெறிகள்
விண்டுபிரம்மையிலுருகு தெண்டனிடு மிகிய வித்

மிக்கபெருத்தஸ்தன பாரம் - நல்ல - விச்சித்திர மாகிய சிங்காரம்
தக்கநடந்திடுமொய்யாரம் - மதன் - சாரும் படிக்குயலங் காரம்
பக்குவமானநல்ல பருவமதில்கெம்பீரம்
பருகப்பருகயின்பம் பயக்கு மமிர்தசாரம்
பன்னுமுரிசைமிகு கன்னலெனவுமொழி
மின்னலெனவுமெருகு தன்னயமுடனிதோ வித்.

மெச்சுமொழிகள்வளம் பேச-கிளிகள் - மேலதைக்கேட்டுவாய்கூச
பச்சிலைமஞ்சள்வாசனை வீச - நல்ல - பருவ ரதிபோலும்பிர காச
இச்சையெவர்க்குமுண்டு பெய்துமகாப்பிரயாச
மேருவுலகும்விலை யிட்டெழுந்து முலாச
இசைமலரணிகவ ரசமுள்ளகுமரி
இசையிந்துகமழும்வில்விலில் விநாயகபச்சருமணிமில் வித்,

மோகினிசொல் - கொச்சகம்.

காதல்கொடுக்கவந்த காமனேரோவைவருந்தி
வேதன்படைத்தருப்பும் வித்தாரோமெல்லியலார்
போதமனங்களிக்கப் போகிக்கும்புண்ணியரோ
மாதவரில்மன்மதரோ வந்ததவமுனிவே.

வசனம்.

ஆ-ஆ-ஸ்திரீகளுக்கு ஆசையை அபரிமிதமாகக் கொடுக்கப்பட்டவரோ, அல்லது பிரம்மதேவன் மெய்வருந்தி அற்புதமாகச்செய்யப்பட்ட திருவுருவமோ, ஆ-ஆ-எவ்வளப்பெண்கள் மனதிஷ்டப்படிக்கு ஆசைதீர அநுபவிக்கும் சற்புருஷரோ, ரிஷிகளுக்குள்ளே இவர்தானோமன்மதன்.

மோகினிசொல்-சிங்காரபத்தியம்-இ-ம்-கல்யா-ர.

மோனிக்கிரியோ மன்மதசொரூபமோ
மாதவஞ்செய்திடும் மன்னரிவரோ
பூரணச்சந்திரனோ புகழுதயசுந்தரனோ
பூவையர்க்கிசைந்திடும் புருஷனிவரோ
சூரியப்பிரகாசனோ சுபகைலாசனோ
சுந்தரமாய்த்தவஞ்செய்யுஞ் சித்தரிவரோ
அழகானயிந்திரனோ அபிராமசுந்தரனோ
அடவியிலேநின்ற அரசரிவரோ

அருமைதவமுனிவருக்கெல்லாமிவரையோ
பருவமுதாவைபெண்ணின்மேல் ப்ரேமையிலையோ
மருகாமலர்ப்பதும் மகாரிஷிகளிலேயோ
உருகாதமனதோரையிந்த வுலகத்தில்கண்டதிலையே.

மோகினி-அர்ச்சுனனைக்கேட்கும்-விருத்தம்.

எழில்பெறுமுனிவரீர் தானெங்கிருந்திவிடம்போந்தீர்
ஒழிவிலுள்ளமுறைப்போல வுலகெல்லாங்கண்டதில்லை
விழியிரண்டாலுன்னைக்கண்டேன் மிதமில்லாமோகங்கொண்டேன்
தழுவியேயெனதுமோக தாபத்தைத்தீர்த்துப்போவீர்

வசனம்.

மகத்தான அழகைப்பெற்ற தவமுனிவரே-நீர் எங்கிருந்துவிவ்விடம்போந்தீர் - உம்மைப்போல் சௌந்தரியமான புருஷனைநானெங்குங் கண்டதில்லை அதனால் உம்மைக்கண்ட மாத்திரத்திலே அபரிமிதமான ஆசைகொண்டேன் ஆசையால் என்னைத்தழுவி என்மனோதாபத்தைத் தீர்த்துப்போவீர் வாரும்.



அர்ச்சுனன்சொல்-விருத்தம்-இ-ம்-நீலாம்புரி.

மறைமுடிவினிலுதித்தோனே மாதொருபாகத்தோனே
கறைமிடற்றனைகால்காலனே கண்மூன்றோனே
பிறைமுடிசடையோனேயென் பெம்மானேபித்தனேநல்
இறைவனேயீசனேநீ யென்னைச்சோதிக்காதே

வசனம்.

அரகரா-காலகண்ட சிரிசேத்திர சடாமகுட-சகார்ப்பூரகபாலி பார்வதிசமேதா- என்னை சோதனையில்- பிரவேசிக்காமல் முன்னிற்க வேணுங்கர்த்தனே.

மோகினிசொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

நில்லும்நில்லும்முனிவே-நானும்வாரேன்
நில்லும்நில்முனிவே

அநுபல்லவி.

கல்லையுருக்குமுன்-பல்லழகைக் கண்டேன்
அல்லதுனைக்கூட-ஆசைமெத்தவும் கொண்டேன்-நில்லும்

சரணங்கள்.

பேசாமல்போவது தர்மமோ - இந்தப்
பேதைமீதில்முனிவன் வர்மமோ
ஆசைகொண்டபெண்ணை-அபலையென்னாதே
ஐயையோயிவ்வேளை - அட்டிநீ பண்ணாதே நில்லும்.

காமலாகிரியில் வாடுதே - மாமக்
காய்ச்சலால்தேகம் வேகுதே
இமைப்பென்றுஞ்சற்றும் - இச்சையிற்கொள்ளாதே
சித்தினிகாமனைக்கண் - சிந்தையைத்தள்ளாதே நில்லும்.

கனிவாயிதழ்த்தேனை ஊட்டுவேன்-நீபோய்க்
காலுங்கரமுமியக்கை - காட்டுவேன்
முனிவரேநான்சொன்னது - மொழிதனைத்தடுக்காதே
முன்வந்தவென்னைவிட்டு -மௌனமாய்நடக்காதே நில்லும்.

அர்ச்சுனன் சொல்லிக்கொண்டுபோகிற-விருத்தம்.

காசிக்குப்போகும்போது கருமமுந்தொடர்ந்ததேயது
பேசியகதைபோலாச்சு பெண்ணேபாவசெய்தபாவம்
ஆதுமதலத்தைச்செய்ய அடவியில்நடக்கும்போது
மாசுறுமாயையென்முன் வருவதேன்சிவசிவாவே

வசனம்,

அரகரா - காலகண்டபிரிநேத்திரா- கரியோத்திரை போர்த்தவன்பி ன்னே- கருமுருந்தொடர்ந்ததென்ற கதைபாச்சுதா- நான்செய்தபாவ ம்- உலகவாழ்க்கையைநீக்கிநீ தவஞ்செய்யப் போகையில் பொல்லாத மாய்கைவந்து- என்னுடன்போராடவேணுமா- அரகரா மகாதேவா.

மோகினிக்கும்-அர்ச்சுனனுக்கும்-சம்வாத-தரு.

இ ம்-தோடி-தாளம்-ஆதி.

மோகினிசொல்-தரு.

கூடிவர்வாரும் பிரக்யாதா சுகக்
தேடிவமெய்யினை யாவிநிமே கொஞ்சிக்-கூடி

கொங்கைக்குடமிரண்டு மீறி மத்தன்
கோவயமிதழ்ந்து ஊறி இப்போ
கோதைநானுந்தனைக் கோறி- உம்மைக்
கூடவந்தேனினி வாறீர்

இங்கேநானுந்தயக் கென்சொன்னாலுஞ்செவிக்
கேராலேயாசையல் பிரலேயாயின்று-கூடி

அர்ச்சுனன்சொல்-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

கெட்டவராகநீபோடி- என்சொற்
தட்டாதேயுன்சொற் கட்டாதேயென் கிட்ட.

சட்டக்கல்விகள் பேசாதே-மோகம்
தவமுனிவோர்க்குப் பொல்லாதே-உந்தன்
சமர்த்தெல்லாமிங்கே செல்லாதே- அடி
தையலேயென்முன்னில் தாதே

அட்டத்தனஞ்சொண்டு கிட்டக்கிட்டவந்து
அள்ளாதடிமோகம் கொள்ளாதடி பிசி கிட்ட.

மோகினிசொல்-தரு.

கன்னியாள்வெரு பாவி-உம்மைக்
கண்டதேயென்மனத் தாவி-சித்தம்
கலங்கியேவுருநெகா றேவி-மனம்
களித்திருவோருங் குலாவி
உன்னிதமாயிரு ஸ்தனியத்தைத் தொட்டு
உல்லாசமாயின்று சல்லாபமாய்க் கொஞ்சி-கூடி



அர்ச்சுனன்சொல்-தரு.

மாமுனிக்குமோக மேனு-அடி
மங்கையேயிதென்ன வாது-யான்
மனம்பார்த்துத்தள்ளின் கோது-உன்னை
மருகவுமனதுவொப் பாது
பூமியிலேயாரும்பெண்ணாசை தள்ளினேன்
பேதையினைவுகொண்ட மாதேயுந்தனை வேண்டேன்-கிட்ட.

மோகினிசொல்-தரு.

உன்மனதிற்றுறை யேதோ-பெண்கள்
வுணர்வுதன்னுஞ்செறி யேதோ-போகம்
உமக்கனையந்தெரி யாதோ-யான்
உரைத்தமொழிப்படி யாதோ
என்மனதின்படியணைந்திரே யாமானல்
யேருவனேமோகந் திருவனே ஆ-ஆ கூடி.

அர்ச்சுனன்சொல்-தரு.

வல்லாளக்கண்டிநீ போடி-யான்
வள்ளல்பதந்தனைத் தேடி-திவ்விய
வர்சமலர்களைச் சூடி-நெஞ்சில்
வகையுடன்தியானத்தை நாடி
எல்லையிலேதவஞ் செய்ய நடக்கின்றேன்
என்னைத்தடுக்காதே யின்னம் மடக்காதே-கிட்ட.

மோகினிசொல்-தரு.

ஐயையோயித்தனைக் கோபம்-என்மே
லாகாதுகாண்மனல் தாபம்-உன்மேல்
ஆவல்கொண்டேன் மோகசோபம்-நீர்
அணையாவிட்டால் வெகுபாபம்
மையல்கொண்டேன்மீதில் மனமிரக்கந்தேயின்று
மருகுவீரோசுகந்தருகுவீரோ ஆ-ஆ கூடிவ.

அர்ச்சுனன்சொல்-தரு.

மங்கையேவாது பண்ணாதே-அடி
மாதங்கமனப்பா ழுண்ணாதே - உன்னை
மருகுவேனென்று யெண்ணாதே-என்முன்
மல்லாடிநிற்க வொண்ணாதே
சங்கைகொள்ளாமலே யின்னந்தடுத்திட்டால்
சாதிப்பேனேவுன்னை வாதிப்பேனே போபோ கிட்ட.

இதுவும்-அர்ச்சுனன்-மோகினிக்குச் சொல்-விருத்தம்

ஆவலாய்த்தவத்தைச்செய்ய அடவியில்நடக்கின்றேன்
கேவலமெதிரேவந்து தெரிசிச்செப்பவேண்டாம்
மேவியேயின்னமின்ன மேல்விழுந்துரைத்தாயானால்
தாவியேபிக்கலர்க்கும் தையலேகெடுத்திடாயே.

வசனம்.

கேளாய் வஞ்சகமோகினி நான் ஈஸ்வரனை நோக்கி நிர்த்தான தவசுசெய்யப்போகிறேன் நீ என் தவத்துக்குவிக்கினஞ்செய்வாயேயா கில் உன்னைச்சபிப்பேன் வேண்டாம்விலகிப்போ.

மோகினிபோனபின்பு-அர்ச்சுனன்சொல்-தோத்திர-தரு.

இராகம்-கண்டா-ஆதிதாளம்.

பல்லவி.

அரகரசிவசிவ மகாதேவா-உந்தன்
அருள்விழிபுரிசிவ மகாதேவா

அநுபல்லவி.

கருதவரியகர கபாலர் செழுங்
கருணைக்கடலேகர கபாலா அரகர

சரணங்கள்.

சிவசிவசங்கரகிரி சூலா உந்தன்
திருவருள்புரிந்திடு திரிசூலா (அரகர)

நற்றையருக்கிய நாதா காளி
நாணமடைஞ்செய்த பாதா (அரகர)

இமையவரன்புதல்வி மணாளா எந்தன்
இடர்கெடியாளவேணும் நிர்மையபாலா (அரகர)

அர்ச்சுனன்சொல்-தோத்திரம்-ஆனந்தக்களிப்பு.

அரகர சிவசிவ சம்போ சம்போ
அரகரசிவசங்கர சம்போ (அரகர)

திங்களணிசடை யாளா-பாருந்
தேடரிதானசெழும்விடை யாளா (அரகர)

பங்கயம்போன்றபொ ற்றாளா-என்னைப்
பரிவித்தருள்செய்யும் பரம தயாளா (அரகர)



சொங்கலர்தாரணி தோளா-அன்பர்
குறித்தவரத்தைக்கொடுக்கும் குணாளா- (அரகர)

மங்களமானகங் காளா-என்முன்
வந்தளித்திடவேணுமங்கை பங்காளா- (அரகர)

மூத்தர்கள்கருத்தூற்ற நாதா-ஞான
மூர்த்திகள்தமக்கருள் செய்யும் விநோதா (அரகர)

சித்தஜனையெரித்த - போதா- இயமன்
திடுக்கிட்டலறிவிழ வுதைத்திட்ட பாதா- (அரகர)

சத்திமகிழும்பாக்கி யாதா- முத்தி
தாரினைத்திடுஞ்சாக்ஷாத்காரமனோ நீதா- (அரகர)

வெற்றிமிகுத்த வீரா- - இந்த
வேலையடிமையைவைத்தாளத் - தகாதா- (அரகர)

இதுவும் அர்ச்சுனன்சொல் - நடை - தரு.

இரா - நீலாம்புரி - தாளம் - ஜம்பை.

சண்முகனையீன்றெடுத்தசங்கிரசடாதரனே
சந்திரிடம்பாகம்வைத்தசம்போசங்கரனே
விண்ணவர்கள்முனிவர்தொழும்விடையேறுநாதா
விளங்கும்வெள்ளிமலைதனிலேவீற்றிருக்கும்போதா

பாவைவருமுலகந்தொழும்பரனேகன்பாராய்
பரிவுடனேயெனையாளப்பண்பாய்வாராய்
அரவமதைத்தானணிந்த ஆதிசெம்பிரா
ஆதரவாய்வந்துயெந்தனல்லல்தனைத்தீராய்

திரிபுரத்தைநகைத்தெரித்ததேவாநுகூலா
தேன்மொழியைச்சிரத்தில்வைத்ததிகழுந் திரிசூலா
கிருஷ்ணமறைநான்குதிக்கும்காரணவிசாலா
கண்ணப்பன்றனக்குவரமளித்தசீலா

அன்னபூரணிக்கிசைந்தமுகவிலாசா
ஐங்கரனையீன்றெடுத்தஆதிபரமேசா
உன்னையாதரிப்புமுழுவேதும்பிரகாசா
இமையவர்கள்தொழுதேற்றுமென்றன்செகதீசா

பொது - வசனம்.

அகோதெப்படியென்றால் - இந்தப்பிரகாரம் அர்ச்சுனன்தோத்திர

ஞ்செய்துக்கொண்டு நடக்கும்போது காட்டினில்வாழுங்கண்டு போன்ற டி வருகிற விதங்காண்க.

பேரண்டிவருகிற - பொது விருத்தம்.

கொண்டல்கக்குலேப்பழிக்கும் குழல்மாது தாரமங்கே
அண்டர்கள்முனிவர்சித்தரியாவருந்தியக்கல்கொள்ள
கண்டவர்மனங்கலங்க கன்னியின்ஸ்தனங்குலுங்க
மண்டலம்புகழ்பேரண்டமயிலினிவருகின்றளே

இதுவுமது - கட்டளைக்கலிப்பா.

இந்திரலோகத்திலோர்த்தமைபோலவே
யிடையிலாடையொட்டியாணமிலங்கவே
சந்திரகாந்திமுகமுந்துலங்கவே
சவ்வாதணிந்திடுங்கொங்கைகுலுங்கவே
வந்தையாய்மல்லிமுல்லைகள்வீசவே
விநோதமாகவுல்லாசமதாகவே
சுந்தரமானாதிபோலும்பேரண்டி
சோலைகுழும்வனமதிலேவந்தாள்

பேரண்டிவருகிற - தரு - இம் - அசாவேரி . தாளம் . ஆதி.

பல்லவி.

பரிமளமிகவுள்ள . விகசிதபேரண்டிப்
பதுமக்கிளிமொழிப்பெண்வந்தாள்.எழில்
பலகலைமுனிவர்களுலகில்மயங்கிய.பதுமக் கிளிமொழி

அநுபல்லவி.

திரிலோகமுனிவர்க்கும் தேவாளையோருக்கும்
தேன்மொழிதனைக்கண்டால்திகழ்சித்தமேயுருக்கும்
திட்டமுள்ளாதியிட வடிவுள்ளயட்டயில்
தீர்க்காதத்தின பொற்கொடிலீலையில்
தேர்ந்தசித்தினி ஜாதியினுச்சித . பரிமள

சரணங்கள்.

கொண்டலையுங்குலைத் தண்டலையுமாலைக்
கோவைக்காய்வென்ற குழற்சொருக்கும்
கொடிப்பூமணச்சந்திர விம்பந்தனைப்பழிக்கும்
கோதைநுதல்பிறை போலிருக்கும்
வண்டையும்வாளுந்தேற் கெண்டையுமாவடிவும்
வடிவேலைவென்றவிழித் திருக்கும் - கன்னம்
வன்னக்கண்ணாடிகர்தாசிக் குமிழைவெல்லும்



வள்ளற்கொடிபோல் செவிமூக்கும்
செண்டுமுலைகுலுக்கும் சேயிழையின்பலுக்கும்
சித்தஜனைக்கலைக்கும் செகதலமும்மலைக்கும்
செம்பொற்கலையணி யிடைபிடிவாழைத்
தம்பத்தினையொத்திடுமிருதுடையந்தச்
சூகமதிலிலகியமுனிவர்கள்பிரமைகொள்ளும்
கதனமதுலவிய சுரர்முதல்மயல்கொள்ளும் பரிமள

பேரண்டிசொல் கொச்சகம்.

அங்கசன்போல்கானகத்திலம்புவில்லுமேயெடுத்து
சங்கரன்போற்சென்னியின்மேல் சடாமகுடமுந்தரித்து
திங்கள்முகச்சந்திரமும் திருவுருகும்தான்படைத்து
பொங்குமுடனேதிரில்வந்தோர் போகிக்கும்புண்ணியரோ

இதுவும்பேரண்டிசொல்-சிங்காரபத்தியம்-இ-ம்-கண்டா.

மாரனேவழகானவீரனோதெரியாது
மகம்மேருபுசமதற்கேர்ப்பதாமோ
, எழிலானவுருவமோவிழியினிடபுருவமோ
எல்லையில்மதன்வில்லுக்கேர்ப்பதாமோ
மாசிலாச்சொர்ணமோமன்னனெவ்வர்ணமோ
மாணிக்கவர்ணமும்மதியதாமோ
சிங்காரமாயனோசிருட்டிக்கும்ஆயனோ
செய்கையறியேனிதம்ப்பவழமாமோ
செகமதிலிவ்வழகைப்படைத்ததாரோ
நகமுகப்பிரமனோசொல்லுகினோரோ
அகமகிழ்ந்தென்னையிவரணைகுவாரோ
சுகலீலைசெய்யும்பரிசுத்தனிவரோ

அர்ச்சுனன்-சொல்லிக்கொண்டுபோகிற-விருத்தம்.

அரியயனமரர்போற்று மரவணிந்தவனேபோற்றி
கரியுரித்தவனேசெங்கைக் கபாலருத்திரனேபோற்றி
திரிபுரமெரித்தாய்போற்றித்திங்கள்சூடியவாபோற்றிப்
பரிவுடன்சோதியாதே பார்வதிபங்காபோற்றி

பேரண்டிசொல்-விருத்தம்,

செம்பொன்மேருவைப்பழிக்கும் செழித்ததிண்புயனேகேளாய்
அம்புவிதன்னிலுன்ற னுண்மையுமழகுஞ்சந்திர
விம்பமும்விழியாற்கண்டு விருப்பமோகங்கள்கொண்டேன்
சம்பிரமாயனைக்குசென்றல்சகாயமிதுனக்குமன்றே

வசனம்.

கேளும்சுவாமி இராசரிஷியே - உனதுரூப சவுந்தரி யத்தைக்கண்டு யான்மிகவும் விருப்பங் கொண்டேன் ஆகையால் நீர் என்னைச்சேர்ந்தணைத்து போமீர் வாரும்மாதவரிஷியே

அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

பாலைகுழலொரு பாமனைக்காண்பதற்கு
மாவுரியுடுத்தியிருமாதவஞ்செய்யப்போறேன்
விரகங்கொண்டென்ற வந்தைவிக்கிலஞ்செய்யவேண்டாம்
திருமுடன்தடுத்திடாமற் செய்யாய்ப்பெண்ணே

வசனம்.

ஆரம்மா இக்கானகத்திலென்னைநோக்கி யின்று பல் விருதாவாய் மோகங்கொண்டு வழிமட்டக்கவந்தாய் கானகத்தை நோக்கித்தவஞ்செய்யநாடுகின்றேன் விலங்கிகில்லும் என்னைம்மையே

பேரண்டிசொல்-கொச்சகம்.

சந்தனமுஞ்சண்பகமுஞ் சம்பங்கிச்சாலைகளும்
சுத்தமாம்புன்னைகளுஞ் சூழ்க்கிருக்குஞ்சோலைக்கும்
நித்தமல்லிமுல்லைகளு மிருவாட்சிமலர்சொரியும்
அந்தமிருமிவ்வனத்தி லலையலாம்மன்னவனே

வசனம்.

கேளும்மகா அழகைப் பொருந்திய ராசரிஷியே சந்தனம், மல்லிகைமுல்லை இருவாட்சி பாரிசாதஞ்சூழ்ந்த வனத்திலேகாமிரு வருங்கூடி விளையாடுவோம் வாரும்மன்னவனே,

அர்ச்சுனன்சொல்-கட்டளைகலிப்பா.

சங்கரர்சிவசம்பே சதாசிவா
சர்வசிவதயாபரமூர்த்தியே
திங்கள்சூடியசெஞ்சடையானனே
தேவனேயுன்திருவடிநம்பினேன்
மங்கையைப்பாகம்வைத்த மனோகரா
மாதுவக்குமறிப்பதாம் ரிஷியோ
ஐங்கரன்றனைபெற்றிடும் கர்த்தனே
ஆதியேயிந்தச்சோதனைக்கென்செய்வேன்

பேரண்டிசொல்-கட்டளைக்கலிப்பா.

கொடிசூழிமக்காத்திலைப்போலவே
கொண்டைசூடியன் போதும்லைக்கண்டுமே



நாடியேயின்றுவந்தாயல்கொண்டேன்
நன்மையாகவேமன்மதலீலையைத்
தேடியேகொரும்மோகமதாகவே
தேவனேயென்றனிஞ்ரமடங்கவே
கூடிகாமிருவோருக்குலாவியே
குணமதாகமருகவருகுவாய்

அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

வட்டவாள்விழியினுள்ளே வனிதையேசொல்லக்கேளாய்
கிட்டவந்தணையுமென்றாய் கிளிமொழியுன்றன்பேரை
பொட்டெனவுரைக்கவேணும் பூவைக்கிங்கலுவலென்ன
சட்டமாய்வனத்தில்வந்த சரித்திரம்விளம்புவாயே

வசனம்.

ஆரடியடிபெண்ணே- இந்தவனத்திலே எங்கேயே விருந்தாய்வி ருப்பங்கொள்ளவந்தாய் உன்னுடையநாமதே யென்ன தெரியச்சொல்லடிபெண்ணே திருட்டுகள்ளி.

பேரண்டிசொல்-விருத்தம்.

நாட்டினையாளும்வேந்தே நவரத்னமகுடஞ்சென்னி
சூட்டியபூபாயின்று சொல்லுவேன்கேளுமிந்த
காட்டினில்வாழுகின்ற கன்னிபேரண்டியென்பேர்
தாட்டிகமாகவும்மைத் தழுகவேவந்தேனையா

வசனம்.

கேளும்மகாராஜனே உம்மைக்கண்ட மாத்திரத்திலேயாம் மிதமில்லாத விருப்பங்கொண்டு சேர்ந்தணையவந்தேன் என்பேரோ பேரண்டன்பெண்ஜாதி பேரண்டியென்று சொல்லுவார்கள் ஆகையால் கூடுவம்வாரும் மகாராஜனே

அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

மருக்கொழுந்தைநிமுடித்த மையலாய்மருகவென்னை
பெருக்கமாய்கம்பிவந்த பேரண்டப்பெண்ணேகேளாய்
உருக்கமாத்தவஞ்செய்வோர்க்குபுலகினில்மாதராசை
யிருக்காதுபோம்போம்பெண்ணே யிவ்விடம்விட்டுத்தானே,

வசனம்.

ஆ-ஆ-கேளும் பேரண்டப்பெண்ணே என்னைமருகவென்று மென்று கம்பியரலாகுமா மாதவஞ்செய்வோர்க்கு மன்மத காமமோ இந்த மாய்கையை நீக்கிவிட்டோர்கள் கலவி நும்பெண் ணாசையை நினையார் நடந்திடும் பெண்ணே பேரண்டி,

போரண்டிசொல்-விருத்தம்,

சந்தனச்சோலைகளும் சவ்வாதுபுனுகுவீசும்
செந்தாமரைபசோருபுன்னை செண்பகத்தருக்கள்சேர்ந்து
விந்தையாய்ப்பாரிசாதம் விளங்குநல்வாசம்வீச
யிந்தவனத்தில்போகம் யிஷ்டமாய்கட்டத்துவீரே

வசனம்.

சாருங்கஸ்வாமி தவமுனியே- பரிமளமான புஷ்பவனத்திலேயும் குளிர்ந்த வாடையிலேயும் மனமு புண்ணாருதுமருக்கியரும், எனது அபரிமிதமான ஆசையைத்தீரும் மாமுனியே.

அர்ச்சுனன்சொல் கொச்சகம்

அஷ்டதிசையோர்புகழு மாதிபராபரகட்டரே
இஷ்டமதாயிருதயத்தி லெவ்வாறுதவஞ்செய்வோர்கள்
நிஷ்டைதெரிபுள்ளவர்கள் நிலைதவறுமாதவர்கள்
துஷ்டப்புத்திதானில்லையர் தூரவில்லும்பெண்ணாசே

வசனம்.

ஆ-ஆ-கேளும் பெண்மணி போரண்டி ஆதிபரம்பரப்பொருளை இருதயத்திலெண்ணித் தவஞ்செய் வோர்கள் ஸ்திரிகளாசை வேண்டுவதில்லை வீணாகவாதுசெய்யாதே கடந்திடும் பெண்ணே போரண்டி.

போரண்டிசொல்-விருத்தம்.

முன்னாலேவிசுவாமித்திரன் மேனகைதனையணைந்து
சன்றாகிரிமுகந்த சகுந்தலைப்பெண்ணைப்பெற்றான்
என்றாலேயுன்றவத்துக் கேதொன்றுமிடர்வாராது
மன்றாயென்மோகத்திர மனமகிழ்ந்தணைகுவாயே

வசனம்.

கேளும்ஸ்வாமி தபஸ்வியே- முன்னாலே விஸ்வாமித்திரன் தெய்வ மேனகையைச்சேர்ந்து சகுந்தலையென்கிற பெண்ணைப்பெறவில்லையா நீரென்னைச்சேர்ந்தணைந்து போவீர்வாருமையனே

அருச்சுனக்கும்-போரண்டிக்கும்-சம்பாத-தரு,

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

அர்ச்சுனன்சொல்-தரு.

தையலேநீதூர நில்லடி-உன்னைத்
தழுவவும்நீயோ சொல்லடி



ஐயமில்லாமலடுக் கிறாய் - சற்றும்
அஞ்சாமலேதாசக் தொடுக்கிறாய் - இந்த
அடவியிலேவழி தடுக்கிறாய் - எந்தன்
அருந்தவத்தைச்சும்மாய்கெடுக்கிறாய்

மையல்கொண்டேன்றனைதிரோகவேநின்று
மசக்குகின்றாய்வீணாய்ப் பசப்புகின்றாய்ச்சீச்சீ தையலே

போரண்டிசொல்-தரு ௸-இ-ம்-தாளம்.

தவமுனியேகிட்ட வாருமே என்னை
தழுவியொருமுத்தந் தாருமே
அவனிபுகழும்பிராண நாதனே - என்னை
அன்பாகச்சேரும்பிரக் யாதனே - சித்தம்

அலையுதேவருகுவாய் வேதனே - ஆதி
அரன்பாதம்போற்றுஞ்சந் போதனே
குவலயந்தன்னிலிருவோருமேகொஞ்சி
கூடுவமேவிளையாடுவமே ஆகா தவமுனி

அர்ச்சுனன்சொல் - தரு.

ஆரடிநீபொல்லா நீலியோ - இந்த
அடவியில்வாழ்மந்திர சர்லியோ - உந்தன்
ஆணுவத்தால்செய்யுங் கேலியோ - அடி
அறிவையேயிதுவென்ன ஜோலியோ

போராடச்செய்யத்துடிக்கிறாயிப்போது
போதிக்கிறாமையல்சாதிக்கிறாய்ச்சீச்சீ - தையலே

போரண்டிசொல் - தரு.

மாணிக்கமகுட கெம்பீரனே - என்னை
மருவியணைகுவாய் தீரனே - புவி

மன்னவருக்குப காரனே - மாது
மையல்தீரும்ஜெக வீரனே

பாணிக்கிரகணமென்னைப்பண்ணினாற்போலவே
பார்க்கலாமேசுகந்தீர்க்கலாமே-ஆ-ஆ தவமுனி

அர்ச்சுனன்சொல் - தரு.

கிட்டகிட்டவந்து குலைக்கிறாய் - உந்தன்
கீர்த்திகளோன்சும்மாய் பறக்கிறாய் - அடி

செருவங்கொண்டிங்கேநீ தருக்கிறாய் - இலவங்
கிளி பார்ப்போலென் னுடல்மலைக்கிறாய்
பொட்டெனவேயிந்தப் பாவம்வுன்னைவிட்டுப்
போகாதடியையாலகாதடிசிச்சீ தையலே

பேரண்டிசொல்-தரு.

மச்சுமுனிபோனையால் நீருமே - உந்தன்
மாமதவங்களை மிடேறுமே - என்னை
மருகவுள்ளிருகன்றால் பாருமே - நித்தம்
வையகாமலே மினிச்சேருமே

பூமிப்புகழுமே காமிருவோமாய்ப்
போமிக்கவசந்தகம் பாவிக்கலாமகா தவமுனி

அருச்சுனன்சொல்-தரு.

அரக்கிமோதங்கியே யாரடி-சற்றும்
சந்தோமற்செப்பிறாய் போரடி-என்றன்
அருகினில்வைத்ததைக் கூறடி-உன்னை
ஆக்கிறேனெடிக்குள்ளே - பாரடி

மயக்கிறாவழிதன்னை - மாதங்கியேயுன்னை
மருகேனடிசுகக்தருகேனடிபாவி தையலே

பேரண்டிசொல் - தரு.

மண்டலம்போற்றும் வில்வாசனே - இன்று
மருகுவாயெனை மகாசனே - நித்தம்
மயங்குதேஜெகதப் - பிரக்யாதனே - மோக
மாய்கையைத்தீர்த்திடும் போசனே

செண்டுஸ்தனமிரண்டும் - விம்மியேமிறுதா
சேர்க்கிடுவீர்களிகூர்ந்திடுவீர்சுவாமி தவமுனி

அருச்சுனன்சொல் - விருத்தம்.

ஆரடி பெண்ணேகேளாயரக்கியோதங்கியேபாவீ
போரடிசெய்யவந்தாய் பெலக்கின்றுங்கள்வீதாறே
ஓரடியாகவன்றுவேரடிறுத்தெழுந்தாப்போலாய்
பாரடியுன்றலைக்குப்பானையியான்றெடுக்கின்றேனே

வசனம்.

அரடியாடிபெண்ணேபேரண்டி நீ பெலக்கின்றுங்கள்வியோபோசாமே தெரியாமல் இதோகளை தொடுக்கிறேன் உன்றலையைத்காப்பாறிக் கொண்டோடிப் பிழைத்துப்போடி அறிவுகெட்ட பேரண்டிப்பெண்ணே



பேரண்டிசொல்-விருத்தம்.

வல்லமையிருந்தகோலே வனந்தனில்மருகேனென்றாய்
நல்லதுயெனதுபிராண நாயகன்றனக்குச்சொல்லி
வில்லிறனுனதாயிரை விருடன்வதைத்தேயின்று
கொல்லுறேன்பாராயுந்தன் கொழுப்பையுமடக்கிறேனே

வசனம்.

ஆகாகா-கேளுங்காணும் ஓய்மகாரிஷியே,என்னைச்சேர்ந்தனைநாப்போ காமல்நடக்கின்றபடியினாலே எனது பிராணநாயகருடனே சொல்லிஉன து கெருவத்தை யடக்கிறேன் ஆகட்டும் ஆகட்டும் ஓய் மாதவமுனியே.

பேரண்டன்வருகிற-பொதுவிருத்தம்.

அண்டமுங்கிடுகிடென்ன வமரர்கள்மனமொடுங்க
எண்டிசைநடுநடுங்க இயாவருந்திடுக்கிட்டேங்க
அண்டர்களிரண்டாய்த் தண்டிக்கும்வீரனான்
கண்டிதபுகழ்பேரண்டன் களமியில்வருகின்றானே

வசனம்.

அகோதப்படி யென்றால் அருச்சுனராஜன் தபஞ்செய்யநிற்கும் போது கானகத்திலே வாழுகின்ற பெண்டபேரண்டன் தேவலோகமும் பூலோகமும் அதிரும்படியாய்க் கெர்ச்சனையிட்டுக் கொண்டு காந்தி னிலம்புவில்தும்பித்து வருகிறவிதங்காண்க.

பேரண்டன்வருகிற-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

மண்டலம்புகழ்கொண்டபேரண்டராகுந
மகாபலசாலிவீரனானே-திகழ்
சுரரையும் நரரையும்-திறமுடன்வென்றிடு - மகாப்ரசார்வீ

அநுபல்லவி.

எண்டிசையுமெனதுவிரலாலெற்றிப் போடுவேன்
ஈரேழுலகமிருகரத்தால் செண்டாடுவே
கண்டகரைச்சதைப்பேன் சதைப்பேன்-கால
காலனையும் வதைப்பேன் - வெகு
காதகமுடனை வேதனைசெய்திடும்
பாதகசிரசை ஆவலாய்க்கொய்திடும் மண்டலம்.

சரணங்கள்.

அண்டரண்டநவகண்டமண்டலத்தோர்க
ளியாவருமேநடுங்கத் தாக்குவேன்-நல்ல

அட்டதிசைமலைகளெட்டையுங் கைபாற்றெட்டு
கெடிதிறலதைவெத்தித் தாக்குவேன்
மண்டலத்தனிற்கவி வாணர்தமைப்பழிக்கும்
மடையப்பசகள்மனிக்குட்டலைக்கையாற்கிழிக்கும்
மல்லிலெனக்கிணையில்லையேயெல்லையில்
வல்லவீரவாகொல்லுவேன் வெல்லுவேன் (மண்டலம்)

துஷ்டரிட்டமதத்தைக் கண்டவுடனேநெஞ்சை
அளைந்தரத்தனதவாரிக் குடிப்பேன் - பொல்லா
அஷ்டராட்சதப்பூதப் பிரேதப்பிசாசுகளைத்
தூக்கிப்போட்டேபொடியாய்ப் பொடிப்பேன்
ஓடையுமியானையுமியேரோடே வெட்டுகொள்ளுவேன்
ஓராயிரங்கரிசைச் சாதங்கூடத்தள்ளுவேன்
ஓர்பதினாலுலகங்களில் பேர்பெறும்
வீரனெனக்கிணை பார்தனிலில்லையே (மண்டலம்)

சண்டப்பிரசண்டவுத்தண்டகெண்டையெல்லாம்
சமர்த்திறலேவெட்டி வாட்டுவேன் - பொல்லாச்
சதிசற்பனைகள்செய்யும் சண்டாளர்முடனை
சட்டமாயெமலோக மோட்டுவேன்
வண்டானபேர்க்குவாக் கடிவாளமிட்டு
வாகனமாகவேறி வருகுவனேயாகட்டும்
வஞ்சகதுஷ்டர்கள்னெஞ்சையிளக்கியவர்
வாட்டுவனென்பிலங்காட்டுவனேயினி (மண்டலம்)

பேரண்டன்-பேரண்டிக்குச்சொல்-விருத்தம்.

என்னுயிர்க்குயிராய்வாழு மென்பிராணசகியேகேளாய
மின்னலிடையிருளே மெய்யிளைத்திருப்பதென்ன
அன்னமேநீதான்பூண்ட வாடையாபரணமெல்லாஞ்
சின்னபின்னங்களான சேதியைச்சொல்வாய்பெண்மணே

வசனம்.

ஆ-ஆ-கேளும் என்பிராணசகியே உனதுதேகமெல்லா மிளைத்திருப்பதென்ன-நீ பூண்ட ஆடையாபரணமெல்லாம் பொடிப்பொடியாய்ப் போவதென்ன ஒரேவக்கமாய் வியசனங்கொண்டிருக்குங்காரணத்தைச்சொல்லுமென்றுலைசக்கண்மணியே.

பேரண்டிசொல்-விருத்தம்.

சொல்லுவேன்கேளாயென்றன் சுந்தரமுடையபிராண
வல்லபாவுனதுபாதம் வணங்கியால்பயனிந்தேன்தேவர்



இல்லாதவேளைதன்னிலிங்கொருரிஷியும்வந்து
மல்லாடியணையுமென்றுமானமுங்குலைத்தானையா

வசனம்.

கேளும்என்பிராணனுக்குப் பிராணனாயிருக்கும் பிராணநாதா-நீ வரிரிவ்வனத்திலே வேட்டையாடப் போனபின்பு இங்கொரு மகாரிஷி வந்து பேசாததெல்லாம்பேசி என்னைமானபங்கஞ் செய்தான்மருளைவ வாரா.

பேரண்டன்சொல்-விருத்தம்.

மானமுங்குலைந்ததென்றாய்மட்டதையேசொல்லக்கேளாய்
கானகந்தன்னிலுன்னைக்கற்பழித்திட்டபொல்லா
ஈனனைக்கணையாலின்றுயிருடனைத்துணிப்பேனுரானி
போனதெல்லாவழியேகாணென் பெண்ணேநீயுரைசெய்வாயே

வசனம்.

ஆ-ஆ-கேளும்என்னருமைப் பெண்ணரசே இந்தசோலை சூழ்ந்த கானகத்திலே உன்னைச் சேர்த்தணைந்த பஞ்சமாபாதகனை நெஞ்சைப்பிளந்து எனதுகாண்டபத்துக்கு இரைகொடுக் கிறேன் அவன்போனவழியைக்காட்டும் பெண்ணரசே.

பேரண்டிசொல்-சரு-இ-ம்-கொண்ட-ஆதிதாளம்.

கானகத்திலமாமுனிவன்தானுரைத்ததென்னசொல்வே
மன்னவனே என்னைக்

கண்டவுடனேவிரகங்கொண்டணையுமென்றுரைத்தான்
மன்னவனே அந்த

மானுமிமானமில்லாயினனென்மேல்விழுந்து
மன்னவனே அடி

மங்கையேநீவாடியென்றுகொங்கைதனையவன்பிடித்தான்
மன்னவனே அந்த

மாயக்காரமாமுனிக்குநாயமெல்லாமென்றுரைத்தேன்
மன்னவனே என்னை

மருகாடியென்றுவெத்தலிருகரம்பிடித்திழுத்தான்
மன்னவனே ஆ-ஆ

ஆயன்செயலென்றுபரன்மாயவன்பாதம்நினைத்தேன்
மன்னவனே எந்தன்

ஆடையும்பணிசெய்வாரின்வாடையுமவன்கலைந்தான்
மன்னவனே ஏன்னே

மல்லாடியென்னைமருகச்செல்லாதகாவலியென்றேன்
மன்னவனே என்ன

மருனேசன்றானிருந்தால்வெருமோசம்வருமென்றேன்
மன்னவனே அந்தப்

பாவியவன்மேல்விழுந்தாவியெனைத்தானணைந்தான்
மன்னவனே அவன்

அன்புடனேயிவ்வனத்திற்றென்புடனேதானடைந்தான்
மன்னவனே

பேரண்டன்சொல்-விருத்தம்.

அடிமடமயிலேவுன்னையணைந்தவன்சிரசைப்பஞ்சாய்ப்
பொடித்திடாவிட்டாலியானும்பிடித்தவுவில்லாதல்ல
அடித்தாக்கிபுலம்பவேண்டாந்தவடனேயான்போய்வென்று
கொடித்தவில்வருவேன்மிந்தைகோதாமகேருந்திடாயே

வசனம்.

ஆ-ஆகேளும் பெண்ணேபேரண்டி. உன்மீதில் விருப்பங்கொண்ட
வன்சிரசை ஆயிரஞ்சுக்கலாய்ப் பிளக்கவடிக்காவிட்டால் என்பேர் பே
ரண்டனல்ல இதோ வென்று வருகிறே னஞ்சாதே யிரும் பெண்ணே.

பேரண்டிசொல்-விருத்தம்.

மட்ந்தையானுன்றனக்குமனையாளுமவதானால்
அடர்ந்திடுமவனத்தில்வந்தருந்தவமுனிவனைவென்று
அடர்ந்தவீரவன்சிரத்தைத்தறித்திடச்செய்துவந்த
வீட்டதனில்வந்தாலன்றோவெனக்குநீர்புருஷன்றானே.

வசனம்.

கேளுமென் பிராணநாயகா- என்மேல்விருப்பங் கொண்ட பஞ்ச
மர்பாதகனைச்சிரசாக்கினை செய்துவந்தாலல்லால் யானுனக்குப்பெண்சாதி
அதுவரைக்கும் நீயெனக்குப் புருஷனல்ல உமக்குப் பாரிசனல்ல மன்
னவனே.

பேரண்டன்சொல்-விருத்தம்.

சற்றவர்வார்ந்தைச்செம்பொற்றடயாரகீர்த்திகொய்கை
பொற்கொடியுன்னைச்சேர்த்தபொல்லாதவன்றன்னை



தங்கைச்செய்தவனைவிடாதவனைத்தறித்தயாது
யிக்கணம்வாரேன்பெண்ணே யிவ்விடமிருப்பாய்மன்னே

வசனம்.

ஆ-ஆ-கேளுமென்னருமைப் பெண்ணரசே உன்னை மானபங்கம்பு
ண்ணின மர்தவமுனியைக்கண்டு யுத்தஞ்செய்து வருகிறேன் இவ்வன
த்திலே பதவமாயிரும்பெண்ணே பிராணசகியே.

அர்ச்சுனன்போகிறதைப் பேரண்டன்பார்த்து.

சண்டைசெய்தல்-விருத்தம்.

ஆரடாகிழிவயேநீதா னடவியிலேனைத்திரும்பிப்
பாரடவுனதுவீர பராக்கிரமமறியவேணும்
போரடர்செய்யவந்தேன்புத்திகெட்டவனேயாடா
கூறடாவுன்றன்மனைக் குடலைப்புமெடுக்கின்றேனே

வசனம்.

ஆரடா அடாகிழிவயேஇந்த ஆரண்யத்திலே என்குமாரியாளைமரு
ஙிப்பேசாமல் நடக்கின்றாய் நல்லதாகட்டும் இப்போதிருவரும் யுத்தஞ்
செய்யலாம்வாடா அறிவுகெட்டமாதவிழிவியே.

அருச்சுனன்-பேரண்டனுக்குச்சொல் - விருத்தம்.

குடல்தனையெடுப்பேனென்றுகொக்கரித்திடும் பேரண்டா
சடலதுவுடைந்தாற்பாற்பாரிற் கனியியனைகளாமோ
அடல்பெரும்வனத்திலென்மே டாமிந்தையோடவந்தாய்
விடவிடப்பேசவேண்டாம் விலகியப்புறம்நீபோடா

வசனம்.

ஆரடா அடாகெண்டபேரண்டா சமுத்திரமானது உடைந்தால்ம
லைகளணைகளாகப் போகுமா இந்த சோலைருந்தகானகத்திலே என்மே
ல் அடாமிந்தைபேசவந்தாய் போடாபோபுத்திகெட்ட பேரண்டா.

பேரண்டன்சொல்-விருத்தம்.

போடாவென்றுரைக்கவந்தாய் போசானல்லகண்டாய்
தாடாண்மையானவென்றன் தாரத்தைவிரும்பலாமோ
மூடாவுன்றனையிப்போது முறிக்கின்றேன்மோசமில்லை
வாடாவென்னெதிரில்சந்திர வாள்கொண்டுகெடுக்கின்றேனே

வசனம்.

ஆ - ஆ - ஆரடா அடா வேலை மெனக்கிட்ட ஆண்டிப் பயலே
நீருவன் பெண்சாதி ஒருவனுக்குத் தாயாச்சுதே அப்படி யிருக்க அ

டா நீயெப்படி யென்பெண்சாதியை மருவிடச்சென்ருய் உன்னையெனது சந்திராயுதத்துக்கு இரைகொடுக்கிறேன் பாரடாமாதவா.

அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

பெண்மொழிகேட்போரெல்லாம்பேயனென்றுரைப்பார்பாரில்
தன்மையாலென்சொன்னுலுந்தவித்துப்போர்செய்யவந்தாய்
வன்மைசேருன்பெண்சாதி வார்த்தையைநம்பவேண்டாம்
கண்மூடியுயிரைமாய்க்கக் கடிக்துகொள்ளாதேபோடா

வசனம்.

ஆரடா அடாபோண்டா பெண்சாதிவார்த்தையைக்கேட்டு என்னுடனேபோராடவருகுமா. பெண்மொழி கேழ்க்கப்பட்டபேயனை இன்று தான்கண்டேன் அடாகாட்டிலேதிரியும் போண்டப் பயலே.

போண்டன்சொல்-விருத்தம்.

அறிவுகெட்டவனேயென்ற னரிவையைப்புணர்ந்ததல்லால்
மொழுதிருய்செலறியனைப்போல் மொழிகளைப்பகறவேண்டாம்
கெழுவுக்கொண்டவனையின்று கொல்கிறேனொடிக்குளுன்னை
கழுவருத்திடகான்வந்த கனவீரனறிகிலாயோ

வசனம்.

அடாவடா வெறிகெட்டாக்குடியனே உனது கெழுவத்திலேவீறுதரவாய்ப் பேசவேண்டியதில்லை நீயும்நானும் ஒருகைப்பார்ப்போம் சாமர்த்தியிருக்குமேயாமாகில் யுத்தஞ்செய்யலாம் வாடாமடையனென்னுமாதவா.

அர்ச்சுனன்சொல் - விருத்தம்.

கற்புள்ளசீதையாலே தசக்ராவணனுமாண்டான்
வற்புதவிவேகவாலிவனிதைதாரையால்மாண்டான்
அற்பனெனுமனையாளான வரிவைதன்மொழியைநம்பி
இப்புவிதனிலுன்பேர் விழப்பறுகிறாரோ.

வசனம்.

கேளடா அடா போண்டமூடா சீதையாலே ராவணன்மாண்டான் தாரையினாலே வாலிமாண்டான் அதுபோலவுன் பெண்சாதிமொழியினாலே நீமாளப்போகிறாய் பேசாதே ஓடிப்போடா மடையனென்னும் போண்டப்பயலே.

போண்டன்சொல்-விருத்தம்.

மாதவஞ்செய்வோருக்கு மன்மதகாமமேது
பூதலமாய்கையேது பூவையேல்விருப்பமேது



பாதகாயென்றாரத்தைப் பரிவுடன்புணர்ந்துபோக
நீதியோவுனக்கிப்போதுநிர்ணயந்தானேசொல்வாய்

சவனம்.

ஆ-ஆ-ஏன்றுயிருக்குது அல்லடா அடாமாதவஞ் செய்வோர்களுக்குத் தாரணிமாய்கையேது இதைநீக்கிவிட்ட பெரியோர்கள் கனவிலும் பெண்ணாசையைநினையார்களே நீ நினைக்கலாகுமா சொல்லடா அடா மாதவா.

அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

எத்தனையான்சொன்னாலு மென்னையேகூடுமென்றாள்
பெற்றதாயாச்சேயென்றன் போண்டாமூடாகேளாய்
சித்தினிச்சிறுக்கியென்மேற் சிக்கிரம்விழவேவந்தாள்
கர்த்தனைத்துதித்துநின்றேன் கானகந்தனிற்சென்றாளே.

வசனம்.

அடாவடாகெண்டபோண்டா உனதுபெண்சாதிக்கு அனேகவிதத்திலேயுஞ் சொன்னேன் பெற்றதாயென்றுஞ் சொன்னேன் மேல்விழுந்தணையவந்தாள் ஈசனைத்துதித்துநின்றேன் இந்தக் கானகத்திலே மறைந்துபோய்விட்டாள் போடா புத்திகெட்டவனே.

போண்டன்சொல்-ஆசிரியவிருத்தம்.

போடாவென்றுரைத்துநிற்க முனியேகேளாய்
பொற்கொடியென்பெண்சாதி பொய்சொல்லாளே
தாடாண்மைநீயுரைத்தா லெனக்கொப்பாது
தப்பாமலிப்பொழுதேயுனைச்சோதிப்பேன்
மூடாகேளுன்றனக்குமுகத்தில்மீசை
முளைக்கட்டே தானிருந்தா லென்முன்பாக
வாடாநீயுன்னுரையென்கைவாளால்
வாட்டுகிறேனெமலோகம் வோட்டுகிறேனே

அருச்சுனன்சொல்-ஆசிரியவிருத்தம்.

வோட்டுகிறேனெமலோகமென்றுசொன்ன
வுணர்த்திகெட்டகாதகனே நீதானென்னை
வாட்டுதற்குத்திராணியுண்டோ போடாவுன்றன்
வல்லமைதானென்னிடத்திற்செல்லாதோடா
ஆட்டுமயிர்தன்னிலுரைபிருனாலே
வசக்கவுந்தான்திறமையுண்டோவடாமூடா
காட்டுக்குள்ளேதிரியும் போண்டாயென்
கைக்கணைக்கேயிரையாகக்காலமாச்சே

பேரண்டன்சொல்-ஆசிரியவிருத்தம்.

கெட்டகாதகனேநீகெருவங்கொண்டாய்
கெருடன்முன்னேபாம்புதான்வெல்வதுண்டோ
பொட்டனவேவுன்னெஞ்சைப்பிளப்பேன்கண்டாய்ப்
போராடவுலகத்திலெனைப்போலுண்டோ
துட்டனேயெனைச்செயிக்க வொருவருண்டோ
துண்டிப்பேனுன்சிரசையிரண்டுதுண்டாய்ச்
சட்டமுனியான்பிடித்த வில்லினாலே
சாதிப்பேனுன்னுயிரை வாதிப்பேனே

அர்ச்சுனன்சொல்-ஆசிரியவிருத்தம்.

வாதிப்பேனென்றுசொன்ன பேரண்டாகேள்
வாய்மொழியினாற்பந்தலிடவேவந்தாய்
ஆதித்தன்தனைக்கண்ட பனியில்லாது
ஆளியின்முன்மதயானை யதுவெல்லாது
சாதிப்பேனியானுன்னை யறிந்திலர்யோ
சங்கைகெட்டகாதகனே வாத்தேன்சும்மாப்
போயித்தாலவதென்ன வுனதுமண்டைப்
பொடிப்படவேயிளக்கடிப்பேன் பிழைத்துப்போடா

பேரண்டனுக்கும்-அருச்சுனனுக்கும்-தர்க்க-தரு.

இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

போடாபோடாவென்று புகலுவதென்னடா
போர்செய்துயிக்ஷணம் வெல்லுவேன்-அடா
மூர்ச்சையாய்தட்சணம் கொல்லுவேன்-இந்த
நாட்டாண்மைபேசாதே போடாருடகேடா
தப்பாமற்சாதிப்பேன் மாதவா

அர்ச்சுனன்சொல்-தரு-ஷை-ராகம்-தாளம்

தப்பாமற்சாதிக்க வொப்பானாயிப்போது
தாக்கிறேனுந்தனைப் பாரடா-பஞ்சா
யாக்கிறேனைப்புறங் கூறடா-எனக்
கொப்பாதவார்த்தையைச் செப்பாதேயுன்றனைக்
கொல்லுதேன்பார்கெண்டபேரண்டா

பேரண்டன்சொல்-தரு.

கொல்லுதேன்வெல்லுதேனென்றென்னவினாக்
கொக்கரித்தேய்சும்மாமலைகிறாய் வெறி



குக்கனைப்போலிங்கேகுலைக்கிறாய்-அடா
மல்லுக்குநில்லுநீசொல்லும் பெலம்பார்ப்போம்
மடையனேவெல்லடா மாதவா,

அர்ச்சுனன்சொல்-தரு,

மடையனென்றெண்ணாதே கடையனேயுன்றனை
மடிக்கிறேனொடிக்குள்ளே வெல்லடா-வில்லரி,
வடிக்கிறேன்றுடிக்கவே நில்லடா-உந்தன்
அடையுமிடையுமார்புந் தடையில்லாமலொடிய
அளக்கிறேன்பார்கெண்ட பேரண்டா

பேரண்டன்சொல்-தரு.

அளக்கிறேனென்றெண்ணவியிக்காரமாய்ச் சொல்லித்
துர்ப்புத்தியாலேநீ யுருட்டுறாய்-அடா
நிர்ப்பயோநீயென்முன் மிரட்டுறாய்-தேகம்
கலக்கவேயுன்மண்டைபிளக்குறேன்பொடியாகக்
கணைவிட்டேன்பாரடா மாதவா,

அர்ச்சுனன்சொல்-தரு.

கணைவிட்டிருலென்கைக்கிணையாவையோபோடா
காட்டில்வாழுங்குடி கேட்டனே-பெண்
டாட்டிச்சொற்கேட்டிடும் மூட்டனே-சும்மா
யனைக்கேனுன்றன்பெண்டைப் புணர்ந்தே வெற்றென்று
ஆகட்டுமாகட்டும் பேரண்டா தே

பேரண்டன்சொல்-தரு.

வீரமாயாகட்டும்போகட்டுமென்றுதே
வில்லினாலுன்றலை பிளப்பேன்-தேகம்
சல்லடைக்கண்களாய்த் துளைப்பேன்-வேகு
ளாவீரனைவிஸ்தாரமாய்ப்பேசாதே
சொன்னேன்சொன்னேனடா மாதவா,

அர்ச்சுனன்சொல்-தரு,

பனங்காட்டுநரிசலப்புக்கஞ்சாதென்று
பார்த்திருக்கும்வீணாய் பேசுறாய்-உந்தன்
சாஸ்திரங்களெல்லாம் வீசுறாய்-இந்த
வனமதிலுன்னுயிர் க்ஷணமதில்போகவே
வருகுதுபார்கணை பேரண்டா

பௌண்டன்சொல்-விருத்தம்.

அப்பையோர்தெய்வமே யாளுமியாமற்றூக்கொடுத்தேன்
உய்யவேகணைகள்மார்பில்லுறத்துதாயென்னசெய்வேன்
மெய்பெற்றும்பழுதகருப்பபோ மெல்லியையருகெற்காளேறும்
கைவல்பாகனவேயுன்றன் காலிணைத்தருகுவாயே,

சபையோர்சொல்-பொதுவிருத்தம்,

வாரிருமூலகந்தன்னில் வள்ளலேக்காணநெஞ்சில்
கோரிபேதவத்தைச்செய்ய கொற்றவனடக்கும்போது
வீரியமிகும்பௌண்டன் விஜயனால்மடிந்தபோது
பாரினிலவன்போண்டி பதறுவாள்கதறுவாளே.

வசனம்.

அகோகேளுங்கள்சபையோர்களே-அர்ச்சுனனுடைய பாணத்தினாலே கெண்ட பௌண்டன் மூர்ச்சையாய் விழுந்தபோது போண்டிபார்த்துப் புலம்புகிறவிதங்காண்க.

போண்டிசொல்-விருத்தம் இ-ம்-கானடா,

பட்டதோபிராணநாதா பாணமுக்துளைத்ததோதான்
எட்டுதிக்கதிர்ந்துபோக வென்னமாய்விடுக்கிட்டாயோ
கட்டுடன்கனமாயன்பால் கனமுடன்வாழ்ந்தவென்னை
விட்டெிர்ப்பிரியபிரமன் விதித்தவாக்கிணையிதாமோ

போண்டிபுலம்பல்-தரு,

இ-ம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி,

எப்படிப் பிழைப்பேன்-பிராணநாதா
என்னமாய்ப் பிழைப்பேன்

அநுபல்லவி.

இப்படியாயினமுடிவிருப்பாரோ
எனைமாயம்மைவிட்டு பிரிப்பாரோ (எப்படி)

சரணங்கள்.

கர்த்தனேமுனி கணையாலடித்தாரோ
கர்ணகத்தன்னிலுன்னை மடித்தாரோ
வித்தாரதேகம்பஞ்சாய்ப் பொடித்தாரோ
வில்விஜயக்தன்மார்பி லடித்தாரோ -எப்



எப்படியெப்படிவிட்டுப் பிரிவேனோ
யேழையைப்போலவேயேங்கித் திரிவேனோ

இப்படிவருமென்றுயானு மறிவேனோ
யிட்சணமெனதுடல்கொய்து மெரிவேனோ -எப்

மருனைவிட்டுமென்மேற் படுப்பேனோ
மாபாவியென்னுயிர்மாள விடுப்பேனோ

சுபுர்தமானவென்வாழ்வைக் கொடுப்பேனோ
அரோகியென்றும்பேர்பாரினி லெடுப்பேனோ -எப்

போண்டிசொல்-விருத்தம்.

பழியுண்டோமுன்னாட்செய்த பாவமோபிராணநாதா
எழில்பெறுமுனிவருன்மே லெய்திடுங்கணைகள்பட்டு
விழிகள்பஞ்சடைந்தபிரானன் விட்டதேதெய்வமென்னை
முழுதிலுங்கெடுத்ததையோமுதல்வனையென்றுகாண்பேன்.

இதுவும்-போண்டி-புலம்பல்-தரு.

இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பாவிமுன்ஜென்மத்திலென்னவினைசெய்தேனோ ஐயோ
பிரம்மதேவா யான்

பாதகியெனதுபிராண நாதனைப்பறிகொடுத்தேன்
பிரம்மதேவா

மேவிமண்மீதில்விழுந்தென்னுவிளையொழிப்பேனோதான்
பிரம்மதேவா இந்த

மேதினியளந்ததேவன் ஆதிமால்செயலிதுவோ
பிரம்மதேவா

முற்பிறப்பிற்செய்தபழி-யிப்பிறப்பில் மூண்டதோதான்
பிரம்மதேவா அந்த

முக்கணனார்தன்செயலோ-மைக்கண்மாதாயர்ன் புலம்
பிரம்மதேவா

இப்படியென்சென்னிதன்னில்-எப்படியெழுதினையோ
பிரம்மதேவா ஐயோ

இந்தசேதியெந்தனுக்கு வந்தவிதிதானோவிதா
பிரம்மதேவா

பேரண்டிசொல்-விருத்தம்-இ-ம்-சௌராட்டி;

எப்படியென்னசெய்வே னென்றுயிர்ப்பிராணநாதா
இப்படித்தலையிலாபம்யெழுதினவிதியிதானோ
முற்பிறப்பினிலேசெய்த மூண்டதினிலே போலவோ
எப்படியுனைப்பிரிந்து யெல்லையிலிருப்பேன்பாவி

இதுவுமது-தரு-இ-ம்-கெண்டா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஐயையோநானென்னசெய்வேனினிஐயோ-பிராணநாதா-அன்று
ஆயனொருதினமாயமிதுதானோ பிராணநாதா
மையமெல்லாம்பேய்பாவிலையாகத்திருந்தோ பிராணநாதா-இப்பேர்
தாள்மன்னர்மார்முருளத்தலைவிதியோ பிராணநாதா
சுத்தனேயென்வயிற்பத்திபெரியுதே பிராணநாதா
கட்டைப்போலுத்தனைவிட்டாப்போலாக்கினாய் பிராணநாதா
கற்றவருனிக்கென்னகுற்றஞ்செய்தாயோ நீ பிராணநாதா
நாட்டாத்திவெய்யிலேக்கைவிட்டாயோஐயோபிராணநாதா-இன்று

இதுவுமது-பேரண்டிசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

என்றுயிர்ப்பிராணநாதா வெப்படிமனத்துணிந்து
உன்னையும்பிரிந்து நான்றுலையில்யாங்கிருக்கலாமோ
மின்னிலக்தன்னிற்பெண்கள் வெம்போதும்பாவியில்லை
அன்னவர்கண்த்தோனிட்ட ஆக்கினையறியேனோ

இதுவுமது-தரு-இ-ம்-நீலாம்புரி-ஐம்பைதாளம்,

கண்ணிகள்.

அருமையிவர்விடுத்தகணைஐயனோயுன்மார்பிற்பட்டு
அடவிதனில்மடியவிதி அயனும்விதித்தாரோ
ஒருநாளும்பிரியாதமணவாளன்றனைப்பிரிந்து
ஓரியாய்த்திரியவிதி அயனும்விதித்தாரோ
திருவுளத்தின்செயலிதுவோதிகழ்வனிதையாளுந்தாத்
திகைத்தழுகத்தலையில்விதி அயனும்விதித்தாரோ
மருகனிருவோருமிங்குமகிழ்ச்சியுடன் வாழ்ந்ததுபோய்
மாபாவியாகவிதி அயனும்விதித்தாரோ
வரிருப்பவைகத்தில் வன்மையுடன்வாழ்ந்தவென்னை
வனமதனில்தவிக்கவிதி அயனும்விதித்தாரோ
பாரிலெந்தன்மருகனையும் பரிகொடுத்தக்காலத்தில்
பரதேசியாகவிதி அயனும்விதித்தாரோ



கீரிவிடுங்குமிழ்நையைப்போல் நிமிஷத்திலுன்றுயிரை
கொடியசிலையால்மடிக்க அயனும்விதித்தாரோ
வீரியனேஅசுரர்குலம் விளங்கவந்தபிராணேசா
விட்டுயென்னைப்பிரியவிதி அயனும்விதித்தாரோ.

பேரண்டி-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

திக்கெலாம்புகழ்மன்னவுன் திருவடிசரணம்போற்றி
பொற்கொடிசெய்தகுற்றம் பொறுத்தாட்சிக்கவேணும்
தர்க்கஞ்செய்திடும்பேரண்டன் தன்னைநீரெழுப்பியெந்தன்
துக்கத்தைத்தீர்க்கவேணுந் துய்யமாதவனேபோற்றி

வசனம்.

சரணஞ்சரணம் மகாராஜனே அடியாளென்ன குற்றஞ்செய்தாலும் தேவரீர்மனம்பொறுத்தெனதுபி[illegible]ராயெழுப்பித்தரவேணுஞ் சுவாமி.

அர்ச்சுனன்-பேரண்டிக்குச்சொல்-விருத்தம்.

தர்விறற்சிலைகரத்தில் தட்டாமற்போனல்பாதம்
மேவியேபணியுங்கள்ளிமெல்லியுன்னிடத்திற்கண்டேன்
பாவிபேரண்டன்றனுவர் பாரினிலெழுந்துவந்தால்
தீவினைவிளைவிப்பரோ திருடிநீயுரைசெய்வாயே

வசனம்.

ஆடிஅடிபெண்ணே பேரண்டி என்னடி வெட்டினால் சிகைகரத்திலேயும், எட்டாவிட்டால் இரங்கிக்காலைப்பிடித்துக்கொள்கிறகள்ளியேயல்லாமல்வேறேயில்லை பேரண்டன் யெழுந்துவந்தால் இன்னதுசண்டையுண்டோ சொல்லடி சொல்லு மாதங்கி.

பேரண்டி-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

அன்னமிட்டவர்க்குத்துரோகமடுத்தாலுமினிற்செய்வாரோ
கன்னில்துஷ்டர்செய்வார்நல்லவர்செய்யாரையா
இன்னமுந்துஜுமுமில்லை யிட்டநன்றிநீக்குமில்லை
மன்னனேமருணமிக்ஷை மடிபிச்சைதந்திடாயே

வசனம்.

கேளும் மகாராஜனே அன்னமிட்டவர்களுக்குத்துரோகம்நல்லவர்கள் செய்யமாட்டார்கள் நன்றிகெட்டவர்கள்செய்வார்களே யல்லாமல் நான்அப்படிசெய்திதில்லை தேவரீர் தயவுவைத்து என்மணவாளனை எழுப்பித்தாருஞ் சுவாமிமுனீஸ்வரரே.

அர்ச்சுனன்சொல்-மட்டுவிருத்தம்.

அஷ்டபோன்டா நலம்பெறவுன்றுயிர்
கஷ்டமில்லாமல் கலைதாயின்று
அஷ்டதிக்கெங்கு மதிர்க்கிடவனத்தில்
இஷ்டமாயெழுந்து யின்வருவாயே.

போண்டன்-உயிர்பெற்றெழுந்து

அருச்சுனனுக்குச்சொல் - போற்றிவிருத்தம்.

தழைத்தக்ரவனத்தில்வந்த தபமொமுனியேபோற்றி
அழைத்திடும்போதேவந்தேன் அடியனைக்காக்கவேணும்
பிழைத்ததன்செயலேயாஞ்செய் பிழைதனைப்பொறுக்கவேணும்
செழித்ததிண்புயனெசெம்பொற் றிருவடிபோற்றிபோற்றி

[illegible]னம்.

சரணஞ் சரணம் ராஜரிஷியே அடியேன்செய்த குற்றமெல்லாம் தாங்கள்திலசென்று மினையாமல்பொறுத்து ரக்ஷிக்கவேணும் கர்த்தனே.

அர்ச்சுனன்-போண்டனுக்குச்சொல்-விருத்தம்.

பொங்கமாயடிபணிந்த பொல்லாதபோண்டாகேள்
இங்கள்குலசக்ரவர்த்தி திகழ்பெருமுனிவரின்னந்
சங்கரனடியர்வந்தால் சரணமென்றடிபணிந்து
பங்கமாய்த்தடுத்திடாமல் பதவமாயனுப்புவாயே.

வசனம்.

அடாவாடா மூட்பெட்டிமகனே, இந்தப்படி மன்டலத்திலேசிவ னடியார்வந்தால் பயபக்தியுடனே அடிபணிந்து அனுப்பிவையும்பிள்ளா ய் இனிநான் தவத்திற்கு நடக்கிறேன்போண்டா.

போண்டன்சொல் - விருத்தம்.

அன்னவேகேளிருந்தன் அர்ச்சுனைப்படிநடப்பேன்
பன்னகுற்றம்யானும் பட்டதுபோதுமையா
விண்ணவர்புகழுகின்ற விளக்கெசிவனைநோக்கி
திண்ணமாய்த்தவத்தைச்செய்ய தேவரீநடந்திடீரே

வசனம்.

கேளுமையா ராஜரிஷியே தேவரீர் இருவர்க்கிறுத் சொன்னபொ ழிப்படிக்கு அடியேன் நடந்துகொள்ளுகிறேன் தாங்கள் கயிலாசபதி யைநோக்கி அகோரமாய்த்தவஞ்செய்யநடவுங்களையாமுனிஸ்ரேஷ்டரே.



பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் கொண்ட போண்டனிடத்தில் அர்ச்சுனமகாராஜ ன் விடைபெற்றுக் காடு மலை வனம் வனந்திரங் களையெல்லாங்கடந் து வடதிசைக் கயிலாயத்துக்கருகில் ஒர்மலையி னடிவாரத்திலிருந்து அகோரமாகியதவஞ்செய்கிறவித மெப்படியென்றால்.

அர்ச்சுனன்சொல்-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி.

விடையாளர - ஜலப் - படையாளர - கங்கைச்
சடையாளா                அனையாளர

அநுபல்லவி.

உடையாள்சிறுமடி - இடையாளிளம்பிடி
நடையாள்வஞ்சகருள்-அடையாமருவிய          (விடை)

சரணங்கள்-

அடிக்கடிசோதனை                பண்ணுதே-எல்லனை
யகலவிட்டமனதி                வெண்ணுதே
தடிக்குமாய்கைக்குள்சும்மாய்                நண்ணுதே-நம்புக்
தமியேன்மனஞ்சினைக்க                வொண்ணுதே
அடிக்குமிவ்வேளையென்னை    ஆதரித்தருள்          கூறும்
அகத்துக்கவலைநீக்கி-யருட்கண்ணுற்சற்றேபாரும் (விடை)

தேவேந்திரன்-கொலுவுக்குவருகிற-பொதுவிருத்தம்.

அரியமாதவத்தோராபோல் அர்ச்சுனன்தன்றவத்தைப்
பிரியமாய்க்கிரிமேல்நின்று பெட்புறச்செய்யும்போது
உரியதேவர்களாலந்த வுளவையுமவன்கருத்து
தெரியவேவேணுமென்று, தேவேந்திரன்வருகின்றனே.

பொது-வசனம்.

அதோதெப்படியென்றால் அர்ச்சுனன் தபஞ்செய்யும் போதுஅவ ன் தகப்பனான தேவேந்திரமகாராஜன் அந்தத்தபசிலையைத்தன்னாலும் பிறராலும் ஆலோசனைசெய்து அறியும்படி தேவேந்திரமகாராஜன் தன் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

தேவேந்திரன்-கொலுவுக்குவருகிற-தரு.

இ-ம்-ஆனந்தபைரவி- ஆதிதாளம்.

பல்லவி.

தேவேந்திரமகாராஜன்வந்தான்
தேவேந்திரமகாராஜன்வந்தான்                இதோ

அநுபல்லவி.

பூவேந்தர்கள்புகழ்ந்து-போற்றுமகாபதி
பொன்னின்முடிசிரசி லுள்ளிதத்துடன் றுன்ன
சொர்ணவயிர்ப்புயத்-தன்னிலிருந்து மின்ன (தேவேந்)

சரணங்கள்.

கரத்திற்செங்கோ லாட் - இருபுறமுந்
கைகூப்பிந்தேவர் நாட்
உரத்தில்ரத்னப்பதக்க வொளிபெருஞ்ஜொலித்திட
உற்றமாதவர்கள் சுற்றிவாழ்த்திசொல்
கற்றமறையவர்கள் பற்றியாக ல் (தேவேந்)
பாவையிந்திராணிகருத்து - மெய்மேலுமகிழ்
பருகப்பருகச் சிரித்து
ஆவலுடனரம்பையூர்வசிமுதலானோர்
ஆடியிசையுடனே பாடியாவருமென்றுய்க்
கூடிப்புளகிதங்கொண்-டாடிவா கன்றுய்ந் (தேவேந்)
பேரிகைபூரிகை அடிக்க-தவளக்குடை
பிறகேசிலர் பிடிக்க
காரியநாரணக் கடவுளடியைக்கண்டு
காட்சிபெறுவிஜன்-அபேட்சைசித்திடவும்
மாட்சிமைபாபொரு-ருட்சிபகர்ந்திடவும் (தேவேந்)

தேவேந்திரன்-கடவுளுக்குப்-போற்றிவிருத்தம்.

எங்கிறுத்தானேதாரு யிருந்துகாப்பவனேபோற்றி
பொங்குமாதவர்களுழைப் போக்கடிப்பவனேபோற்றி
சங்குசக்கரத்தைக்கையிற் றரிப்பவாபோற்றிபோற்றி
எங்களையாட்சித்தாரு மெழில்வண்ணாபோற்றிபோற்றி.

தேவர்கள் - தேவேந்திரனுக்குப்-போற்றிவிருத்தம்.

சுந்தரத்தனிலுகல்ல சொல்லிறுமொப்பில்லாத
இந்திராணியெனுமின்றாரு மிச்சையாய்மெச்சுகின்ற
ஐந்தருநீழல்மேவி யமரரைப்பாதுகாக்கும்
இந்தரனேயுனதுசெம்பொனிணை யடிபோற்றிபோற்றி.

இதுவும்-தேவர்கள்-தேவேந்திரனுக்குப் - போற்றிவிருத்தம்.

எந்நிலத்தோருமெச்சும் இறைவனேபோற்றிபோற்றி
மன்னியகரத்திற்கொண்ட வச்சிராயுதனேபோற்றி



தன்னிகரொருவரில்லாச் சசிமண்வாளாபோற்றி
பொன்னுலகதனையாளும் புரந்தராபோற்றிபோற்றி

பொது-விருத்தம்.

ஊருவசிரம்பைமற்றி லோர்த்தமைநடனஞ்செய்ய
கருடகாந்தருவர்தேவர் கற்றமாதவர்கள்சூழ
அருமையிந்திராணியென்னு மரிவையினுடன்மகிழ்ந்து
சபிரினிலிருந்துயிந்தரன் சாற்றுவான்சாற்றுவானே

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் - அரம்பை - மேனகை - ஊர்வசி- திலோத்தமைமுதலானவர்கள்நடனஞ்செய்யவும்-தேவர்முனிவர்கருடகாந்தருவர்கள் அருகினில்தேவேந்திரன்வீற்றிருந்துசொல்லுகிற விதங்காண்க.

தேவேந்திரன்-சபையோர்களுக்குச்சொல் - விருத்தம்.

மொழியுமிச்சபையிலுள்ள முனிவரேகேளிரேந்தன்
அழகியமைந்தனான அருச்சுனன்சிவனைநோக்கி
வழுவறக்கைலைதன்னில் மகாதவஞ்செய்யுகின்றான்
தழுவுமத்தவஞ்சோதிக்கத் தந்திரமொன்றுசொல்வீர்

வசனம்.

கேளுங்கள் இந்தச்சபையிலுள்ள ரிஷிகளே தேவர்களே என்னுடையகுமாரன் அருச்சுனன் கைலாசபாரிசத்திலே பரமசிவனைநோக்கி உக்கிரமானதபசுசெய்கிறான் அவன்தபோபலனைப்பரி சோதிக்கும்படியாய் ஒருஉபாயத்தைச் சொல்லுங்கள் பார்ப்போம் சபையோர்களே,

தேவர்கள்-தேவேந்திரனுக்குச்சொல் - விருத்தம்.

முனிவர்கள்செய்தவத்தை முழுதுஞ்சோதிக்கவென்றால்
வனிதையர்தம்மைக்கொண்டே மனவலியறியவேணும்
இனியமற்றென்று லாவதில்லையாதலால்வாறு
தனியனுந்தனஞ்சயன்செய் தவத்தைச்சோதிக்கலாமே.

வசனம்.

கேளும் தேவேந்திரமகாராஜனே ரிஷிகளுடைய சித்தமறிய வேணுமானால்ஸ்திரீகளாலே யல்லாமல் வேறொருவிதத்தினாலும் அறியக்கூடாது ஆகையினாலே உன்குமாரனான அர்ச்சுனன்செய்யப்பட்டதபோபலத்தைஸ்திரீகளைக்கொண்டேயறியவேணுந்தேவேந்திர மகாராஜனே.

தேவேந்திரன் - தேவர்களுக்குச்சொல் - விருத்தம்.

சரியினானன்றாய்ச்சொன்னீர் சபாசுமுன்தவத்தைச்செய்த
பெரியவரெல்லாங்காமப் பெண்களின்வசமானார்கள்
பிரியமாயர்ச்சுனன்செய் பெருந்தவந்தனையுமவ்வாறே
தெரிவையர்தம்மைக்கொண்டு சோதனைபண்ணவிருவேனே

வசனம்.

கேளுங்கள் தேவர்களே-சரி-சரி - ஆ - ஆ -சபாசு-நன்றாய்ச்சொன்னீர்கள்-முன்பு-தபத்தைச் செய்தவர்களெல்லாம் -பெண்களுடைய கைவசமானார்களே தவிர வேறில்லை-ஆகையினால்-இதோ ஒருநிமைப்பொழுதிலே அருச்சுனனுடைய தவத்தையும் அப்படியேபரிசோதிப்போம்தேவர்களே.

தேவேந்திரன்-ரம்பை-மேனகை-ஊர்வசி-திலோர்த்தமை.

முதலோர்க்குச்சொல்-விருத்தம்.

பேர்பெறவிளங்குந்தெய்வப் பெண்களேசொல்லக்கேளீர்
ஏர்பெறுமெனதாணைக்கு விலகுவில்விஜயனந்த
சீர்பெறுகைலைதன்னிற் றிருத்தமாய்த்தவஞ்செய்கின்றான்
கேர்பெறச்சென்றவன்ற விலைதனைச்சோதிப்பீரே

வசனம்.

கேளாய்-அரம்பை-ஊர்வசி - மேனகை- திலோர்த்தமை- யென்னும் பெண்களே என்றுமானுன அர்ச்சுனன் கைலாசத்தில் பரமசிவனைநோக்கித் தவஞ்செய்கிறான் நீங்கள்போய் அவன்மனவுறுதியைச் சோதித்துவாருங்கள் பெண்களே.

நடனப்பெண்கள்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

ஒப்புறுசுவர்க்கலோக வும்பர்நாயகனேகேளீர்
செப்பமாயெங்கள்கையிற் சிக்காதபேர்களுண்டோ
அப்படியேயுன்மைந்த னருச்சுனன்றிட்சித்தத்தைத்
தப்பறவேசோதித்துச் சதிருடன்வருவோமே

வசனம்.

கேளுஞ்சுவாமி சுவர்க்காதிபான தேவேந்திரமகாராசனே எப்பேர்ப்பட்ட ரிஷிகளானாலும் எங்கள் கைவசமாகாதபேர்களுண்டோதேவரீருத்தாரப்படிக்கு அந்த அர்ச்சுனராஜன் தபோபலத்தைப்பரிசோதித்து வருகிறோம் சுவாமி.

தேவேந்திரன்-பெண்களுக்குச்சொல்-வசனம்.

ஆனால்அப்படியே சீக்கிரமாகப்போய் பரிசோதித்து வாருங்கள் பெண்களே.



நடனப்பெண்கள்-வருகிற-பொதுவிருத்தம்.

உருவசிமேனகையுயர்திலோர்த்தமை
ஒருமையாமரம்பையென்றோதுமாதர்கள்
தருநிலையருச்சுனன் றவஞ்செய்கின்றிடு
மருவுயர்கைலையில் வந்துதோன்றினார்

நடனப்பெண்கள்வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

ஊர்வசிமேனகை ரம்பைதிலோர்த்தமை
உன்னதமாகவந்தார்

அநுபல்லவி.

சீர்வளரருச்சுனன் செழுந்தவத்தைச் சோதிக்க
சிவனைவணங்கிநின்ற சிந்தைதனைப் பேதிக்க—ஊர்வசி

சரணங்கள்.

| | |
|---|---|
| நாகத்தன்னிலிருந்திடும் | கோவு |
| கலாபமடமயிலனம் | போல |
| வானகமின்னல்கள் மண்ணிலம்வந்த | தென்ன |
| மாந்தளிர்கைகிகர்த்தயடிவுப்ப | னென்ன—ஊர்வசி |
| அன்னப்பேடைகள்போ லருமையுட் | னடந்து |
| ஆரணியங்களுடன் ஆறுமலை | கடந்து |
| சின்னஞ்சிறுகொடிபோலுமிடை | நடக்க |
| சிலைவிசயன்றவத்தைச்சிதைக்கும்படி | தொடங்க—ஊர்வசி |
| பம்பரம்போலிளம்பந்துமுலை | குலுங்க |
| பார்த்தமுனிவர்நெஞ்சம் பதைத்துமிக்கலங்க | |
| அம்புவிழியையோட்டி | ஆசைவலையிற்பூட்டி |
| அருமைப்பதுபாராட்டி அனந்தவிச்சித்ரங்காட்டி—ஊர்வசி | |

அர்ச்சுனன்-தோத்திர-தரு-இ-ம்-பர—தாளம்-திரிபுடை.

பல்லவி.

அரகரா-திரிபுராரீ.

அநுபல்லவி.

| | |
|---|---|
| அரகிராபார்வதி | மணேசா |
| அடியார்வினைதனை யளிக்கும் | சுபாகாராகரா |

சரணங்கள்.

| | |
|---|---|
| ஆதிபரன | சர்பகரா-இரு |
| னகலவந்த | திவாகரா |

சிதளச்சந்திர — சேகரா-உந்தன்
திருவருள்புரியுந்திவ்ய — சாகரா-அரகரா
கருதிபுகழ்ந்திடுங் — நாயகா-கடுஞ்
சுடலையிலில்கடித்த — நாயகா
கருதமெளியவர் — தாயகா-எந்தன்
கவலைபறசெய்கைலை — நாயகா-அரகரா
சமரசகுணசா — காரணா-சைவ
சாம்பிரதாயக — வாரணா
நிமலநித்திய — பூரணா-செஞ்சில்
மினைத்தவரத்தரும் — பூரணா-அரகரா

நடனப்பெண்கள்சொல்-விருத்தம்.

எப்படியென்னசெய்வோ மிவர்தபோபலனைப்பார்த்தால்
கைப்புறமம்முக்குள்ளே வைவசப்படுவதில்லை
தப்புறமிவர்க்கெய்பான் தபசிகளெங்குமில்லை
இப்பொழுதனுப்பிவைத்த யிந்தரனுக்கென்னசொல்வோம்

வசனம்.

கேளுஞ்சகியோர்களே இந்த அர்ச்சுனனுடைய தபோபலனைப்பார்த்தால் நம்முடையமையலாகிய வலைக்குள்ளே வசப்படுகிறது போலிருக்கவில்லை யாரும் அனந்தரிஷிகள் செய்யப்பட்ட தபத்தைப் பார்த்ததில்லை நம்மை அனுப்பிவைத்த தேவேந்திரனுக்கு என்ன சொல்லப் போறோம்பெண்களே.

நடனப்பெண்கள்-விருத்தம்.

கூந்தலைக்கலைப்போம்கொங்கையைத்திறப்போம்
கோதிலா அருவியிற்குளிப்போம்
சந்தனமும்புனுகுந்தனத்தின்மேல்வாரிப்பூசி
நடஞ்சோலைமலர்களைப்புனைவோம்
பாந்தளிசைகள்பாடுவோம்விறியர்
பட்டுவோம்பின்னுபத்தடிப்போம்
சேர்ந்திடமயில்போலாடுவோம்நமது
செய்கையைச்செய்துகாமதிவோம்

ரம்பைசொல்-வசனம்.

ஆனால் கிரியைச் செய்வோம் அது என்னவென்றால் இந்த அர்ச்சுனனுடைய செதிரே காற்றின் வசமாய் நின்று கூந்தலை அவி



ழ்த்து தரிமுடிப்போமா (மேனகைசொல்-வசனம்) ஆ-ஆ-அதுவுமெய்தான்-அந்தப்பரிமாவாடையினாலே அவர்சற்றே கண்ணைத்திறந்துபார்த்தாரேயாமானால் இந்தஸ்தனங் களைச் சற்றே மூடலாம், அதுவுமல்லாமல் இங்கே நடப்பட்டமலை அருவிகளிலே நாம் ஜலக்கிரீடைபண்ணலாம், (அரம்பைசொல்-வசனம்) அப்படியல்ல அவர்கண்ணைமாத்திரந்திறப்பாரேயாமானால் திவ்வியமானசந்தனம் பன்னீர் ஜவ்வாது தன்னியங்களில் பூசலாம், அதுவுமல்லாமல் கலகலென்றுஓடி மல்லிகை-முல்லை புஷ்பங்களைப்பறித்து முடிக்கலாம், அதுவுமல்லாமல் தம்பூரு வீணைகளை யெடுத்துக்கொண்டு ஆனந்தமாய்ப்பாடலாம், அவர்காதிலேகேட்கும்படியாய்க் கிளிகள்போலும், மயில்கள்போலும், நன்றாய்ப்பேசலாம் (திலோத்தமைசொல்-வசனம்) அதுமத்திரமென்ன-பந்தாடலாம், அம்மானையாடலாம், நம்மாலேயான தெல்லாஞ் செய்துபார்ப்போம், (ஊர்வசிசொல்-வசனம்) அப்படியேசெய்வோம் வாருங்கள்.

பெண்கள்சொல்லல்-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வாரும்வாரும்பெண்களே-எல்லோரும்விளையாடுவோம்
வாரும்வாரும்பெண்களே.

ஓடுருநீரிற் — குளிப்போம்-நாம்
ஒருமையாகச்சிரித்து — களிப்போம்
கூந்தலவிழ்த்துநறு — முடிப்போம்- நன்றாய்க்
குலாவிகாமசங்கீதம் — படிப்போம்
சந்தனமுல்லைமேல்வாரிப் — பூசுவோம்-நல்ல
சரசசல்லாபமாகப் — பேசுவோம்
பெடைமயில்கள்போ — லாடுவோம்-நாம்
பிரியமாகவேகூடி — யோடுவோம்
கொங்கைக்குட்த்தைசற்றே — காட்டுவோம்-அவர்
கோதில்மனதிற்காம — மூட்டுவோம்
சேலைதனையவிழ்த்து — வுடுப்போம்
செழித்ததும்போற்சேர்த்து — படுப்போம்
அன்னப்பேடைகள்போல — நடப்போம்-நமது
கூடலொன்றென்றுகாட்டி — கொடிப்போம்

விண்ணைக்கொண்டுசேர்ந்தே மீட்டுவோம்-காமன்
விளைக்குமாரனைத்தகுதி கூட்டுவோம்
காணுமாபரணங்கள் பூணுவோம்-கமது
கலையைநெகிழ்த்திக்கொஞ்சம் காணுவோம் வாரும்

ஊர்வசிசொல்-விருத்தம்.

மாதர்களாட்டலெல்லாம் வகைவகைவேணசெய்தும்
நிதிஸ்ரீவிஜயனங்கள் நிறக்குமாரமற்போனார்
ஆதலால்வனிதைமாரே அங்கஜன்தனையழைத்து
தாதவிம்பாளிதூற்றித் தவத்தினைச்சிதைக்கச்செய்வோம்

வசனம்.

கேளுங் தோழிமார்களே கேளிவிலாசமாய் நம்மாலேயானவிச்சித்திரங்களெல்லாஞ் செய்தோம் அந்த அர்ச்சுனன் கண்ணைத்திறந்துபார்க்கவில்லை ஆகையால் மன்மதனையழைத்து புட்பபாணங்களைப் பிரயோகஞ்செய்யச்சொல்லு அர்ச்சுனன்மனதைச் சோதிக்கவேணும் (அப்படியேசெய்வோம்)

மன்மதன்வருகிற-பொதுவிருத்தம்.

மையலைத்தருமின்னார்கள் மகபதிமொழியாய்த்தங்கள்
கையினிலானமட்டுங் கர்ணமித்துமருச்சுனன்றன்
மெய்மனஞ்சிதைவுறாமல் விடையோன்தேவைநோக்கிப்
பையவேதுதிக்கவீர பராக்கமவேள்விவந்தான்

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால், நடனப்பெண்கள் தங்களுடைய ஆடல் பாடல்முதலிய அபிநயங்களைக்காட்டியும் அர்ச்சுனன்தன்கருத்து சிதையாமல் கடவுளைநோக்கி அதிகவுக்கிரமாகத் தவஞ்செய்யும் போது மன்மதன் வருகிறவிதங்காண்க.

மன்மதன்-வருகிற-தரு-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

மன்மதராஜன்வந்தான்-இதோகவ-மன்மதராஜன்வந்தான்

அநுபல்லவி.

வன்மைபெறுவிஜயன் மனவலியைக் கெடுக்க
வாசமிருந்தசெழு மலர்க்கணையைத் தொடுக்க-மன்ம

சரணங்கள்.

தென்றலின் தேரேறி மாதர்
செழும்பண்ட கொண்டுமீறி



குன்றுவில்லாற்குமுன்னங்குறித்துச் சென்றதுபோலே
குறித்துச்சிந்தைகளித்து கொக்கரித்து-மென்மேலே - மன்.

திங்கள்குடை - பிடித்து - கல்ல
செழுங்கடல்முரசடித்து

பங்கயகருப்புவில்லைப்பாட்டளிநாணி - - யேற்றி
பார்த்தனைக்கண்டவுடன்பனைமலர்தனைத் - தூற்றி மன்,

தாம்புடைவா-ளிறுக்கி - - விஜயனைச்
சாதிக்கமீசைமுறுக்கி

ஏழுலகந்தனிலெனக்கெதிரில்லை - - யென்ன
இமையவரியன்வலி யெவிதல்ல - வென்றுபன்ன மன்,

ஸ்திரீகள்-மன்மதனுக்குச்சொல்-விருத்தம்,

மன்மதவேந்தேகேளாய் மகபதிசொன்னவண்ணம்,
மேன்மைசேர்விஜயன்முன்னே விச்சிநிரம்வெனசெய்தோம்
தன்மனஞ்சிதையவில்லைத் தவநெறிகுலையவில்லை
யன்மைசேருனதுகையின் மலர்கணைதொடுத்திட்டாயே

வசனம்.

கேளாய் மன்மத ராஜேந்திரா தேவேந்திரன் சொன்ன படிசென்று எங்களாலான தந்திரங்களெலாஞ் செய்துபார்த்தோம் அந்த அர்ச்சுனன் கண்ணைத்திறந்துபார்த்ததில்லை கருத்துஞ்சிதைந்ததில்லை இனிமேல்உம்முடைய புட்பபாணங்களைப் பிரயோகஞ்செய்யவேணுமையா.

மன்மதன்-நடனப்பெண்களுக்குச்சொல்-விருத்தம்.

திருவினில்மிகுந்தேயெங்குஞ் சிறப்புற்றபெண்களேகேள்
வுருவினிலொப்பிலானென்றுரைத்திடுமருச்சுனன்பால்
ஒருமைப்போதிற்சென்ற யுறுதியாமவன்றவத்தின்
பருவங்களறிந்ததன்கையின் பாணத்தாற்சிதையச் செய்வேன்

வசனம்.

ஆ-ஆ-பெண்களே அந்த அர்ச்சுனன் அவ்வளவு பலவானானால் இதோநானேபோய் அவன்தவத்தையும் அவனுடைய திறத்தையும்அழியத்தக்கதாகமலர்க்கணை தொடுக்கிறேன் பாருங்கள்பெண்களே.

நடனப்பெண்கள்-மன்மதனுக்குச்சொல்-வசனம்.

அகத்தியம் எந்தவிதமாவது செய்யவேணுஞ்சுவாமி-

மன்மதன்-புட்பபாணம்-பிரயோகம்பண்ணுகிற-தரு.

இ-ம்-உசேனி-தாளம்-ஆதி.

தொடுக்கிறேன்பார்- மலர்க்கணை
விடுகிறேன் பார் - அர்ச்சுனன்மேல் தொடு.

அநுபல்லவி.

அட்டபுலிபோக அர்ச்சுனன்மேல் - கணை தொடு.

சரணங்கள்.

அவிந்தப்புலனுங் - குவிந்ததவமும் -
கவிந்தமனமுந் - தவிக்குஞ்சிதைய தொடு.

மூட்டுக்கணையும் - பாட்டுக்குயிலும்
கூட்டுக்தவமும் - பூட்டுக்குலைய தொடு
புத்திநெறியுஞ் - சித்தவசியும்
இந்தநொடியில் முத்திச்சிதைய தொடு

அர்ச்சுனன்-சொல்-தோத்திரத்-தரு-இ-ம்-ஆகிரி-தாளம்-ஆதி

பல்லவி.

சம்போ-சிவ-சம்போ

அநுபல்லவி.

அம்போருகநேயவடியவர்நேயா - சம்போ.

சரணங்கள்.

சருதிவி லாசர் - சோதிபரகாசா
தருவுமை - நேசா - சகலலோகேசா சம்போ.
மதிநுதல் நேயா - எனைசொல்சகாயா
கதிபணி - தூயா - நமச்சிவாயா சம்போ.
தொழுதமு லோ - நல்கபாலா
மொழியனு கூலா - மூலாதுமூலா சம்போ.

மன்மதன்.நடனப்பெண்களுக்குச்சொல்.விருத்தம்.

முந்நூறுவுலகுதன்னில் மொழியுமென்கணையினாலே
சிந்தையுருகாதவேதேயச் சிதையாதபேர்களில்லை
இந்தவிக்கையன்சிந்தை யின்னிச்சற்றுஞ்செதைவுமில்லை
பைந்தொடிமாரேயிங்கே பகையெனப்போவோம்வாரீர்



வசனம்.

கேளுந்தெய்வப்பெண்களே - மூன்றுலோகத்திலேயுமென்னுடைய புட்பபாணத்திற்கு வசப்படாத பேர்களில்லை - அந்த அர்ச்சுனன் மனதைப்பேதிக்க இனி உங்களாலுமில்லை என்னாலுமில்லை - தேவேந்திரனிடத்துக்குப்போவோம் வாரீர்பெண்களே.

நடனப்பெண்கள்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்

வருமகபதியேபோற்றி வானவர்தலைவாபோற்றி
பரவிநீர்சொன்னவண்ணம் பார்த்தனிடத்திற்சென்று
அருமையாயனந்தங்கோடி யாடல்கள்செய்துபார்த்தோம்
ஒருவராலில்லையந்த வுயர்தவஞ்சிதைக்கத்தானே

வசனம்

கேளும் தேவேந்திர மகாராஜனே தேவரீர் சொற்படிக்கு அர்ச்சுனனிடத்திற்கு நாங்கள்போய் எங்களாலான சாமர்த்தியங்களையெல்லாஞ்செய்து பார்த்தோம் அவருடைய தவத்தைப்பேதிக்கிறதற்கு ஆராலுமாகாதுசுவாமி.

தேவேந்திரன் - நடனப்பெண்களுக்குச்சொல் - விருத்தம்

எக்கினும்கீர்த்திபெற்றும் விண்ணிலாத்தவஞ்செய்வோர்பாற்
சங்கையில்லாமற்சென்று தவத்தினைச்சிதைக்கவிம்முன்
தொங்கைகையத்திறந்துகாட்டுங் கொவ்வைபுண்டரயுங்கொ
மங்கையரெனப்பேர்பெற்று மயக்காமல்வந்திட்டீரே

வசனம்

ஆ ஆ-நடனப்பெண்களே- உங்களுக்குநிகரானபெண்கள் இல்லையென்று கீர்த்திபெற்றவ் தவஞ்செய்பவர்களிடத்தில் நாணமில்லாமற்சென்று அனேகவித கோலாகலஞ்செய்து தவத்தையழிக்கவிழியால்மயக்கவும்- மொழியால் மழிக்கவும் வல்லமையிருந்தும் அந்தவர்ச்சுனனை மயக்காமல்வந்துவிட்டீர்களே இதுதானு பெருமை பெண்களே

தேவர்கள் தேவேந்திரனுக்குச்சொல் - விருத்தம்

நாவிலமரமயக்கதல்ல மொழிவிழியுஞ்சங்கீதத்
தொனிதனிற்குவிதும்நாணத் தோகையுமயக்கக்காமத்
துங்கமிடாச்சமர்த்துமெச்சத் தக்கதன்னடையும்பெற்ற
வனிதையர்வலைப்படாத்தன் வலியழுத்தனுப்பினானே

வசனம்

கேளுந் தேவேந்திரமகாராஜனே இந்த நடனமாதர்களுக்கு உசிதமாகிய மொழியும் மிக்க சுசித்தமாகியவிழியும் சங்கீதத்தில்

குயில்மருட்டும்படைவதும் - ஆடலில்மயில் பிரமிக்கவும் - புணர்ச்சியில்காமம் பற்றிவிடவும் - சர்த்தைப்பெற்ற இந்தமாதர்களுடைய வலையிலகப்படாமல் தன்கையிலிருக்குஞ் சிலையில் இவர்களை மயக்கிஅனுப்பிவிட்டானே அவனல்லவோ தபோநிதி தேவேந்திரமகாராஜனே.

தேவேந்திரன் - தேவர்களுக்குச்சொல். - வசனம்

ஆ-ஆ நன்றாய்ச்சொன்னீர் - நன்றாய்ச்சொன்னீர் தேவர்களே

தேவர்கள் - தேவேந்திரனுக்குச்சொல் - விருத்தம்

வண்டுபோல்விழிகளுடைமொழியும்
மதிநிகர்வதனமும்நறும்பூச்
செண்டுபோல்முலையுந்தாளம்போற்பல்லுந்
திகழிடையுடுக்கையாம்வாழைத்
தண்டுபோற்றொடையுந்தரும்மாதவர்கள்
தவத்தினைச்சிதைத்திடவென்று
—உன்டபண்ணியவார்பத்திபக்கலங்கா
தோட்டிவிட்ட தமிகவரிதே

வசனம்

கேளுஞ்சுவாமீ - பிரபுவான தேவேந்திரமகாராஜனே இந்த நடனமாதர்களுக்கு இராகத்துடன் பாடும் சுரத்தையுடைய குயில்போல் சிறந்தவிழியும் மதுரம்பொருந்திய கற்கண்டை நிகர்த்த நல்லமொழியும் - சந்திரனையொத்த முகமும் வாசனைபொருந்திய காம்பாய்த்த கட்டியுருட்டிய பூச்செண்டுபோல ஸ்தனமும் - முத்தினையொத்த பல்லும் உடுக்கையைப்போன்ற இடையும் - மிருதுவாகிய வாழைத்தண்டுபோன்ற தொடையு - பிரம்மதேவன் படைத்தான் அதனன்றித்துக்கென்றால் மாதவர்களுடைய தவநிலையைக்கலைக்கும்படியாக - அப்படியேசெய்துவந்தார்கள்இப்போது அர்ச்சுனனிடத்திற்குஇவர்கள்போய் ஆடல்பாடல்முதலிய அபிநயங்களைக்காட்டி அனேகதந்திரங்களைச்செய்தும் இவர்கள்வசமாகாமல் தன்வசமாகி இவர்களை அனுப்பிவிட்டது இப்பேர்ப்பட்ட ஸ்திரீகளால் வசியஞ்செய்யத்தக்க மாதவத்தையுடையவனானதால் விஜயனென்றுபேர்கொடுத்தது யிருக்குமென்று நினைக்கிறேன் மகாராஜனே.

தேவேந்திரன் சொல் - வசனம்.

ஆ-ஆ-நல்லஉபாயமாக யுக்திசொன்னீர்கள் - தருந்தரும் நானும் அப்படியேநினைக்கிறேன்.



தேவர்கள் - தேவேந்திரனுக்குச்சொல் - விருத்தம்.

இந்தயின்னார்களுக்கு மிடங்கொடாதனுப்பிவிட்ட
விந்தையாளனுஞ்சிரல்ல வில்லினும்வெற்றிசேர்ந்த
சுந்தர்ப்பன்விட்டவைந்து கணைக்குமஞ்சாமலோட்ட
தந்திரஞ்செய்யவந்த தனஞ்சயன்பெருமையாதோ

வசனம்.

கேளுந்தேவேந்திரமகாராசனே - இந்தநடனமாதர்களை ஓட்டிவிட்டதும்பெரிசல்ல; முன்புசாட்சாத்காரனான சிவனுடையதவத்தையுஞ் சிதைக்கிறேனென்றெழுந்த நிரவீரயாராக்கிரமுள்ளமன்மதன்விட்ட ஐந்துகணைக்கும் அஞ்சாமல்பின்விட்டோட அகோரமாகிய தவஞ்செய்யப்பட்ட அர்ச்சுனனுடைய பெருமை யென்னமோதெரியவில்லை தேவேந்திரமகாராஜனே

தேவேந்திரன் நடனப்பெண்களுக்குச்சொல் - கவி

வாணும்அலிமாரனும் தானுங்குழல்மருவீர்
சனும்விசையனிடம் யானும்போய்வருவேன்

வசனம்.

கேளுந்தெய்வப்பெண்களே - அந்த அர்ச்சுனனிடத்திற்குநானே போய்அவன்தவத்தை அறிந்துவருகிறேன் பாருங்கள் பெண்களே.

தேவேந்திரன் - பிராமணனாக - வருகிற - பொருது விருத்தம்

தெரிவையராலுஞ்சேர்ந்த சித்தசராலுமற்ற
அரியவர்ச்சுனன்கருத்தை அறிந்திடாமல்போனதால்
பெருமைசேர்இந்திரராஜன் பிராமணக்கிழவனாகி
மருவுபஞ்சாங்கக்கையில் வைத்திதோவருகின்றானே

பொருது - வசனம்.

அதோதெப்படியென்றால் - அர்ச்சுனனுடையமனதைச்சோதிக்க தேவேந்திரன்கிழப்பிராமணனாக வருகிறதிக்காண்க

பிராமணன் - வருகிற - தரு - இராகம் புன்னாகவராளி ஆதிதாளம்

பல்லவி

வேதியன்வந்தானே - கிழ - வேதியன்வந்தானே

அநுபல்லவி.

மாநிறம்தனில்வில் வலுமைபடைத்த
ஆதரவாகிய - வர்ச்சுனனருகே வேதி

சரணங்கள்.

நரைத்திரேர்தலை நடிக்கும் - கோலூன்றி
நடத்திடியே முடிக்கும்

வரைத்திடும்பெருமுச் செறிபு முளைப்போடு
எட்டிவெட்டிநடத்திடு மிளப்புளப்போடு வேதியன்
குத்திரும்பனும் பேச்சுந் தள்ளாடிக்
கூட்டிடும் கைவீச்சும்
தத்தியிடறித் தள்ளாடிய நடை போடு
தழுவத்தருவயிடை சரித்திடுமுடை யோடு வேதியன்
கண்கள்மிகவுங் குழிந்து பார்க்க
கர்மமுழுதமொழிந்து
மண்களாசையினி-மருக்ளவிட்டோ மென
மாதவஞ்செய்து வழிபடுவோ மென வேதியன்

வேதியன் - அர்சுனனுக்குச்சொல் விருத்தம்

ஆரடாபிள்ளாய்நீதான் அரன்கயிலாயந்தன்னில்
ஒரவேரணலமுட்டி யொருகாலின்மீதுநின்று
தேருமுன்கருத்திலென்ன நினைந்துநீ தவஞ்செய்கின்றாய்
சேருமுன்னெண்ணமெல்லாஞ் சிக்கிமுறைசெய்வாயே

வசனம்

ஆரடாபிள்ளாய் நீ இந்தகைலாயமலைபருகே பஞ்சாக்ஷிவிட தீர்த்தியிலேஒருகாலிலேநின் றுதவஞ்செய்கிறுயே என்னவேண்டிதவஞ்செய்கிறாய் சொல்லும்பிள்ளாய்.

அர்ச்சுனன்- வேதியனுக்குச் - சொல் - விருத்தம்

வேதியற்காசேநாலு வேதமந்திரத்தின்வித்தே
காதலாய்த்தவஞ்செய்கின்ற காரணமென்னவென்றீர்
ஆதியோட்டந்தமில்லா வரும்பரம்பொருளாய்நின்ற
மாதொருபாகனென்முன் வரவேண்டித்தவஞ்செய்கிறேன்

வசனம்

கேளுமையாவேதியரே - நான்காலகண்ட திரிபுரந்தகனுமையொடுதாரியான பரமசிவன்வரவேணுமென் றுதவஞ்செய்கிறேனையா

வேதியன்-அர்சுனனுக்குச்சொல்- விருத்தம்

நாலுவேதங்களுக்கும் நற்றவமுனிவருக்கும்
சிலவாம்பிரமனுக்குந் தேவர்களுமெட்டா
நீலகண்டனைநீகாண நினைத்ததுமென்றால்
சாலசித்தெனப்பேசேழு சமுத்திரங்கடப்பதாமே

வசனம்

ஆரடாதம்பியெடா அந்தபரமேஸ்வரனைக் காணவேணுமென் று நான்குவேதங்களுந் தேடிக்கொண்டிருக்கிறது - விஷ்ணு மேல்



லாம் அனந்தங்கோடி யுகங்களாய் அந்தபரமசிவனைக் காணுதற்குந் தவஞ்செய்கிறார்கள்-தேவர்களும் அவரைக்காணும் படியாக இன்னமுந் தேடுகிறார்கள்? அப்படியிருக்க நீஅவரைக் காணவேணுமென்று தவஞ்செய்கிறாய் எப்படியிருக்கிறதென்றால்-ஒரு சிற்றெறும்பானது ஏழுகடலையுந்தாண்டி அப்புறம்போகவேணுமென்று போனாற்போலிருக்கிறது- அடபோடாபயித்தியக்கார ஓடிப்போடாம்பா

அர்ச்சுனன்-வேதியனுக்குச்சொல்-விருத்தம்,

சருவசங்காரகாலந்தான்வந்துநேருங்கேனும்
உருவுடல்சிதைந்திட்டாலு முயிர்விடுமளவும்நதப்
பிறையணிசடையோனென்முன் பிரத்தியட்சமாய்வாராமல்
திரமுடன்செய்யாநின்ற செழுந்தவம்நான்விடேனே

வசனம்

கேளுமையாஓய்பிராமணா சர்வசங்காரகாலம்வந்தாலும் என்னுடையதேகஞ்சிதைந்துபோனாலும் பிராணபரியந்தம் அந்தப்பரமேசுரர் என்முன்பாகவாராமல்நான் செய்யப்பட்டஅகோரமானதவத்தைவிடமாட்டேன் நீர்போம்வேதியரே,

வேதியன்அர்ச்சுனனுக்குச் சொல்-விருத்தம்

அத்தனையுறுதியுண்ணி லடைந்திடுவாயாகில்
வித்தகன்விடையிலேறும் விமலனுமுன்முன்வந்து
பத்திநீநினைத்தபாசுபதத்தையுந்தந்து மேலும்
மற்றுநீகேட்கப்பட்ட வரத்தையுங்கொடுப்பார்மைந்தா

வசனம்

கேளும்என்குமாரனே அர்ச்சுனா- நான்தேவேந்திரன்உன்னைசோதிக்கத்தக்கதாகப் பிராமணவேடங்கொண்டுவந்தேன் இப்போதுநீசொன்னவுறுதி உன்னிடத்திலிருக்குமானால் அந்தப்பரமசிவனும்வருவார் நீநினைத்தபாசுபதத்தையுங்கொடுப்பார்மேலும் உனக்குவேண்டியவரங்களையுங்கொடுப்பார் உன்மனதின்படிக்கு நடக்கும்-சுகமாயிரு நான்போய்வருகிறேன் அர்ச்சுனா

அர்ச்சுனன் - வேதியனுக்குச்சொல் - வசனம்

சரணஞ்சரணம் அப்படியேபோய்வாரும் என்பிதாவே

அர்ச்சுனன்- தோத்திர- தரு- இ - ம - உசேனி - மிசரதாளம்

பல்லவி

சிவசங்கராமாமக தேவா
திசமுத்தனிமேசிவ னேவா-ஓ-சிவசங்க

சரணங்கள்

வரிவேல்விழிமாதுமை பாரா
மதிகுடியகோனை தேசா - ஓ சிவசங்கர
சதுர்மறைதேடிய பாதா
சகலாகமநாடிய போதா - ஓ - சிவசங்கர
அடியார்தமையாளுப காசா
அலர்சூடியமாசசம் மாசா - ஓ - சிவசங்கர

பொது - விருத்தம்.

மகபதிபோனபின்பு மகிபவில்விஜயன்செய்யுந்
திகழ்தவப்பெருமையைத்தன் சேடியரால்கேட்டு
அகமகிழ்ந்துமையாள்மிக்க வன்புகூர்ந்தருள்மிகுந்த
புகழ்பெருசிவனைவேண்டிப் போற்றவான் சாற்றவானே.

பொது - வசனம்.

அகோதெப்படியென்றால் தேவேந்திரமகாராஜன் போனபின்பு அர்ச்சுனன்செய்யப்பட்டஅரிதானதவத்தைஉமையவளுடைய பணிவிடைப்பெண்கள்கண்டுஉமையவளுடனே சொல்லஅந்தஉமையவளுந்தன்கணவனானமகாதேவருடனே சொல்லுகிறயிதங்காண்க.

பார்வதி - சிவனுக்குச்சொல் - விருத்தம்

நாதனேபொன்னகிரியாய் நமதுகைலாயந்தன்னில்
ஏதமற்றிருந்ததில்லை யாவனோவொருவன்வந்து
தீதிலாத்தவஞ்செய்கின்ற செயலைநானென்னசொல்வேன்
ஆதலாலவனுக்கிப்போ தனுக்கிரகஞ்செய்குவாயே

வசனம்

கேளும்என்பிராணநாயகரே- நம்முடைய திருக்கைலாயமலையிலேயவனொருவன் ஒருதபசிமகாகடினமான தவஞ்செய்கிறான் - அப்படிப்பட்டதவசுஇதுவரையில் ஒருவருஞ்செய்ததில்லை ஆகையால் அவன்கேட்டவரத்தைச் சீக்கிரமாய் கொடுத்தனுப்பவேணும் சுவாமி

சிவன் - பார்வதிக்குச் சொல் - கொச்சகம்

சோமனுக்குநேர்வதனத் தோகையேநற்றருமனுக்கும்
வீமனுக்குநேரிளையோன் மேருபுயத்தனென்னென்ற
சேமவுலகனைத்த செக்கன்மானுக்குரியோன்
தாமமணிமார்பன் தனஞ்சயன்காண்பெண்மயிலே.



வசனம்.

கேளாய்பார்வதி அங்கே தபஞ்செய்யப்பட்டவன் - ஆரென்றால் பாண்டுபுத்திரனான தருமனுக்கும்- வீமனுக்கும் நேரிளையோன் மேலும்உன்னுடைய தமையனான மகாவிஷ்ணுவுக்கு உயிருக்குயிரானவன் அவர்பேர்அர்ச்சுனன் அவன்தான் இப்படித்தவஞ்செய்கிறான் பெண்ணே;

பார்வதிசிவனுக்குச்சொல் - கொச்சகம்;

நாடவரும்வானவரு நற்றவருமற்றவருந்
தேடரியஞானச்சிவக்கொழுந்தேநீர்கேளீர்
கூடப்பிறந்தவரைக் குந்தியைவிட்டவ்விஜயன்
நீடுற்றவஞ்செய்ய நினைத்ததென்னசொல்வீரே

வசனம்.

தேவாதி தேவர்களுந் தேடுதற்கரிதான மகாதேவா அந்த அர்ச்சுனன் கூடப்பிறந்தவரையும் தாயாகிய குந்திதேவியையும்விட்டுப்பிரிந்து இங்கேவந்துதவஞ்செய்யவேண்டிய காரணமென்ன தெரியச்சொல்லவேணும் சுவாமி.

சிவன் - பார்வதிக்குச்சொல் - விருத்தம்.

வஞ்சகன்திருதராஷ்டன் மகன்செய்யும்வினையத்தாலே
கஞ்சலக்குதமாடி தமக்குள்ளதெல்லாந்தோற்று
பஞ்சமாய்வனத்திற்சார்ந்தார் பகைவரையினிமேல்வெல்ல
மிஞ்சியேயென்கையால் பதாஸ்திரம்வேண்டிவந்தான்

வசனம்

கேளாய் பார்வதி உலகத்திலே திருதராஷ்டிரன் பிள்ளைகளாகிய துரியோதனாதிகள் கபடசூதத்தினாலே சூதாடி தங்களுக்குள்ள சமஸ்தமுந்தோற்று பன்னிரண்டுவருஷம் வனவாசமும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசமும் செய்யும்படியாய்க் காட்டுக்குவந்துவிட்டார்கள் ஆகையினால் அந்தச்சத்துராதிகளைச்செயம்பண்ண என்கையிலிருக்கும்பாசுபதாஸ்திரம்வாங்க இப்படிப்பட்ட தவஞ்செய்கிறான் பெண்ணே.

பார்வதி - சிவனுக்குச் சொல் - விருத்தம்

ஆகையினாலேயந்த வர்ச்சுனன்செய்தவத்தை
ஏகமாய்மனதிலெண்ணி யின்னமுஞ்சோதிக்காதே
வேகமாய்ச்சென்றுகண்டு வேண்டியவரமுந்தந்து
பாகமாய்நின்றபாசு பதாஸ்திரங்கொடுத்திடாயே

வசனம்

கேளும்என்பிராணநாயகரான மகாதேவரே அந்த அர்ச்சுனன் செய்யப்பட்ட தவத்தை இன்னமுஞ் சோதனை செய்யாமல் சீக்கிரமாகப்போய் அவனுக்குவேண்டிய வரமுங்கொடுத்தபாசுபதாஸ்திரமுங்கொடுத்து வாருமையா

சிவன் - பார்வதிக்குச் சொல் - விருத்தம்

பதியிழந்துபோனவனைக்கொல்லதாகப்
  படுதுரியன் மூகாசுரன்தனைவிட்டான்
வதியுமவன்பன்றியுருவெடுத்தேயிந்த
  மலைக்குவந்தானர்ச்சுனனைமாய்ப்பதாக
முதிருமுன்னேநாம் வேடவடிவங்கொண்டு
  மூகாசுரனுயிரைமுடிக்கவேணும்
எதிர்விஜயன்கேட்டவரங்கொடுக்கவேணு
  மெழுந்திராய்பெண்மயிலேயெழுந்திராயே

வசனம்

பாண்டவர்களுமிழந்து காட்டுக்குப்போனபிறகு அவர்களைக் கொல்லும்படியாய் துரியோதனன்மகனென்னப்பட்டவாட்சதனை அனுப்பிவைத்தானே அவன் அர்ச்சுனன் தவஞ்செய்கிறதைக் கேட்டுபன்றியுருவெடுத்து இந்த அர்ச்சுனனைக் கொல்லுகிறதற்கு இந்தமலையில்வந்து பதுங்கியிருக்கிறான் ஆகையினால் நாம்வேடவடிவங்கொண்டு பன்றியாய்வந்த அந்தமூகாசுரனைக் கொன்று அர்ச்சுனன் கேட்ட வரங்களெல்லாங்கொடுக்கவேணும் சீக்கிரமாயெழுந்திரும்பெண்ணே.

பொது - அகவல் - இராகம் - எதுகுலகாம்போதி

நாதனுமீசன் நந்தியைப்பார்த்து
காதல்சேர்தமது கணங்களெல்லாரும்
வேடராய்க்கையில் வில்லம்புகொண்டு
கூடவேவருகக்கூறெனவிடுத்தார்
அப்படிநானே அறிவுள்ளநந்தி
செப்படியாயுள்ள சிவகணந்தன்னை
அன்புடனழைத்து ஆண்டவனருளினைத்
தென்புடனுரைக்கச் சிவகணமெல்லாம்
எக்களிப்பாக வெழுந்தங்கோடி
மிக்கதோர்வேட வேஷங்கொள்ள



பிரியமாயிருந்த பெண்கணமெல்லாம்
உரியவேடச்சி யுருவமேகொண்டார்
சங்கரசம்பு சதாசிவமூர்த்தி
பொங்கமாய்த்தானும் புலித்தோலுடுத்தி
அருமையிற்புலி தலையினிற்கட்டி
திகழ்கொன்றைமலரைச் செவியினிலணிந்து
பல்கணைக்கோர்வை பண்புடனெடுத்து
நிலவியகழுத்தில் நிறையவேயணிந்து
கையில்வில்லம்பும் காலினிற்செருப்பு
மெய்புடன்பூண்டு வேடுவனானார்
தோகைபார்வதியுஞ் சொருகுகொண்டையுமாய்
வாகைசேருண்டு மணிவடம்பூண்டு
புலிநகவணியல் பொருந்தவேபோட்டு
அலங்கிதமையாவாடையுமுடுத்தி
கந்தவேள்குழந்தையைக் கக்கத்திலெடுத்து
வித்தையாய்த்தெய்வ வேடச்சியானாள்
வேதங்களெல்லாம் வீரநாய்களுமாய்
போதவேசூழ்ந்து புடையினில்வரவும்
ஓகைபாய்மூக னுறைவிடந்தேடி
வேகமாய்த்தெய்வ வேடர்வந்தாரே

வேடர்வருகை-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி

வேடர்நாங்களே — தெய்வப்பதி
வேடர்நாங்களே

அநுபல்லவி

நீடும்புகழ்கயிலாய - மலைமீதில் வளர் பெருமைய
சிவநேய - நல்லுபாயமான
நீதத்திலேஞான - போதத்திலேகெட்டி — வேட

சரணங்கள்

முதலாவது - வேடன் - சொல்லல்

நாடும்புலவரைக் — கண்டு-மிக
  நாடிமனமும்வ — நண்டு
தாணித்தலைபுணிக் — கொண்டு - ஒ - ஒ
  நாமென்செய்வதென — விண்டு - உன்
ஞானதீரவியந் — நீதே - அதை.

நாமழிக்கக்கூ டாதே - என
நடைவிசிறி-கிலிகொண்டு - மிக்க
நச்சிட்டபடிசடைக் கூட்டும்
வச்சிடக்கடைவ வாட்டும் வேடர்

உ-வது-வேடன்-சொல்லல்

பல்லுதிறந்து சிரிப்போம்- எல்லை
பகைத்தபேரை யெரிப்போம்
பஞ்சரிடத்திறசு கரிப்போம் - நானன்
பத்தனத்தையு நெரிப்போம்
வெல்லுந்தயானை யுரிப்போம் - ஆனை
மேலுயர்ந்தரிகமாய்த் தரிப்போம்
வெயலிரிப்போம் மனஸ்கரிப்போம்-நல்ல
விமலத்தொழிலது செய்வோம்
சமர்த்திலுனடய மூய்வோம் வேடர்

௩-வது-வேடன் சொல்லல்

நிரைகடலெல்லாம் கோடி-வெகு
நிரவியங்களைத் தேடி
செல்வாய்ப்போமெனை நாடி-அதைச்
செப்புக்குடத்திலில் மூடி
உரமாய்த்தரையிற் புதைத்தது- தாழ
மூன்றுலவரியிலவ் வைத்தும்-வெம்மூண்
அந்தரிசாசை யந்தப்பாசை
சிக்கசிறிதா மிருக்கும்
மூக்கிக்கொன்றும்படி யுருக்கும் வேடர்

௪-வது-வேடன் சொல்லல்

ஆளுக்கொருகோடி நொடிப்போம்-மற
பானக்குச்சற்றேயும் கடிப்போம் - புலி
பாலுற்கைமேற்கை ஸடிப்போம்
காலும்மாலுக்கமா யிடிப்போம்
வேலைக்குவேட்டை யொன்றடிப்போம் நிதம்
வேடிக்கைபார்ப்பில்லப் பெடிப்போம் எங்கள்
வீரத்தைப்புந்தெய சூரத்தைபுஞ்சொல்ல
பிறியவர்யென்ன நீடுங்
சுதூமுகனின்னந் தேடும் வேடர்



௫-வது-வேடன்-சொல்லல்.

புலிக்கொடியுள்ள வீரர் - அக்கினிப்
புரவியேறிய சூரர்
புகழ்பல்லூட்டிள்ள தீரர் - மூத்தமிழ்ப்
புலவர்க்கருளு தாரர்
மிலையெழுப்பது முடைத்தோர் - இந்தச்
சென்னையிற்கீர்த்தி படைத்தோர்
சிரேஷ்டமாமுதலியாளும் பேட்டையில்வாழ்கின்ற
சின்னமில்லாதவர் புகழ்வுறும்
வன்னியமாபோர்கள் மகிழ்வுறும் வேடர்

௬-வது-வேடன்-சொல்லல்.

அவனியேயொரு மலையாய்-இந்த
அண்டசுவரொரு வலையாய்
அறிவிலார்மிக நிலையாய்-அக்கே
அதற்குதாங்களே தலையாய்
தவநில்லாமலே யலக்கி-பொல்லாச்
சனனக்கடலிற் கலக்கி-நாளுந்
தந்திரொந்தேயன்பு பற்றிவந்தேயின்பு
நற்பதத்தைத் தருஞ்
சொற்பதத்தைப் பெறும் வேடர்

௭-வது-வேடன்-சொல்லல்.

சிந்தையில்நன்னெறி யூறி விக்வச்
செனங்களுக்கன்பு கூறி பல
செந்தமிழ்நாக்சுவி லேறி இந்தச்
செகமுள்ளளவும் வீறி
புத்தியில்வுக்லேரை நாடி சிலர்
போற்றும்பிரபந்தங்கள் பாடி மற்றுந்
தொந்தமாகியவுந்தப்பசா சனரும்
தாக்கிப்போட்டுத் தாவேத்
தூக்கிவாட்டுக கானே வேடர்

வேடர்கள் - வேட்டையாடுதெ - தரு - இ - ம்.

புன்னுகவராளி - தாளம் - ஆதி.

பல்லவி.

வலையைக்கட்டடாஐயே ஐயேயிருப்பு
வலையைக்கட்டடாஐயே

அநுபல்லவி.

நிலையாய்மிக்க
நெருக்கிவரும் செல்லாய்
நின்றிவ்வன முற்றிலும் பாடியாய்
சென்றுவருவேன் சுற்றிலும் வலை

சரணங்கள்.

சிங்கமொன்றநோ கோடு பாருக்களைச்
சின்னக்குட்டிகள் தேடு
சங்கையில்லாமல்யானைத் தலங்கள்ளும்புளும்பாகக்
கத்திவருங்களி கூர்ந்து
சித்ரவதைசெய்வோஞ் சேர்ந்து வலை

வேகமாப்புலிகள் மேபுற விளையாட்டல
வேகரடிகளுஞ் சாபுற
போகவொட்டாமல்நாய்கள் புட்டைத்தரித்ததட்டிப்
போனில்மடக்கின்ற கொல்வோம்
வானுலகளவுஞ்செல் வோம் வலைய

முள்ளம்பன்றிகள் துள்ளவே - உட்காரும்வரும்
முடுக்காய்நம்வலைக் குள்ளவே
கள்ளமாபிடித்துக் கசிசமைத்துண்ணவேணும்
எங்குவைத்துப்பாரும் தேடி
இங்குவந்து சேரும் கூடி வலைய

கலைமான்கள்செடி யோரம் பெண்மானைக்கூடிக்
கலங்குதேகம விகாரம்
மலையையெதிர்த்த அன்னேவாடாயிந்தப்புறத்தில்
வையமகிழ்ந்திடச் செய்யும்
கையம்பெடுத்திட லெய்யும் வலைய

ஒயில்முயல் கூட்டத்தைப் பிடிக்கவலை
யுட்புகுந்தநா கேட்டத்தை
மயில்களாடிவரவேவதை செய்யுஞ்சித்ரக்குள்ள
வன்னவன்னமாகக் கூவித்
தின்னவேனமுன்ன மேவி வலைய்

காடையுடன் கவுதாரி நீலிவிரைந்துக்
காட்டைச்சுற்றி வாசாரி



சாடையன்றுங்கடம்பா தனிவேனைத்தடுப்பா
தன்னிற்றாவினி ஓடாது
கன்னிகிருட்டுபுறு பேறாது வலையைத்
வாருசேர்வானம் பாடி - புள்ளினமுதல்
வருகுதேவலையைத் தேடி
ஏகமாய்ப்பக்ஷிணங்கள் - எழுந்தபறந்திடாமல்
இறுக்கியேநாற் புறத்திலும்
சுருக்கிவாமேற் புறத்திலும் வலையைத்

வேடர்கள்சொல் - விருத்தம்,

கானகக்கடம்பாகள்ளா கடுஞ்சித்ரக்குள்ளாகள்ளா
ஏனகத்தடிம்பாவாடா யிங்குநாம்பிடித்ததிந்த
வானகம்பாடியின்னம் வந்தபுள்ளினங்களெல்லாம்
தானகம்போய்விடாமல் தனித்தனிபிடித்திடுவோ

வசனம்.

இபிராக் அன்னே கானகக்கடம்பாக் சித்ரக்குள்ளாக்கள்ளா - ஏனகத்தடிம்பாய்இபிராக் நாம்பிடிக்கபக்ஷிகளெல்லாம்வலையை விட்டுஓடிப்போகாமல் இறுக்கி அதைச் சாய்ப்பிடித்திடுவோம் வாக்களடாய்.

மற்றொருவேடன்சொல் - விருத்தம்

பிடிப்பதற்குள்ளேயுந்தன் பேச்சுங்கைவீச்சும்பார்த்தால்
அடிப்பதாய்த்தோற்றுதெந்தன் அண்ணேகேள்வல்லிடும்பா
நொடிப்பதாம்பக்ஷிணங்கள் நொறுக்கவேசுட்டுத்தின்றுக்
கடிப்பதற்கெந்தன்பல்நாவு களிக்குதப்பாரடண்ணே

வசனம்

இபிராக் அண்ணே வல்லிடும்பாக் நாம்பிடிப்பதற்குள்ளாகவுன்னுடையபேச்சையுங்கையின் வீச்சையும்பார்த்தால் அடிப்பாய் போலக்காணுது- என்னடாக்இபிராக்அண்ணே நொடிப்போதிலே இந்தப்பக்ஷிணங்களைச்சுட்டுத்தின்னுக் கடிப்பதற்கு என்னுடையபல்லும்நாவும் ஊறுதடாக் அண்ணேவ்

மற்றொருவேடன்சொல் - விருத்தம்

எத்திசையேநோக்கினுமில்லை யெந்தாகசாம்பிடிக்கும்
முத்திரிச்சக்அண்ணேகேளாய் முழிக்குமிம்புயலைத்தைச்
கத்திடுக்காடையோடுங் கவுதாரிகாட்டின்யாட்டச்
சித்திரப்புறவைத்தின்னச் சித்தமுங்களிக்குதண்ணே.

வசனம்.

இபிராய் அலங்கோருக்கிரீச்சக் - தம்முடையவலையிலகப்பட்ட முயல்-பன்றி காடை-கவுதாரிமாடப்புறா இதுகளையெல்லாங்கொன் றதின்னுகிறதற்கு மெத்தவும் ஆசையாயிருக்குதடாக் கவில்லிற முடைய அலங்கோய்.

மற்றொருவேடன்சொல் - விருத்தம்

வலையினிற்கட்டுண்டிருக்கும் வன்னவிச்சிக்ரமானின்
தலைபினைத்தூக்கிக்கொம்பாற் றன்றுதலாக்கடம்பைப்
பலனுறகாட்டமானைப் பாயுகின்றதனுல்நீண்ட
மலைதனைப்பிடிக்கிவாராய் வாரிம்பகோல்லுவேனே

வசனம்

இபிராயி தம்பி - அக்கிரீச்சக் - தம்முடைய வலையிலகப்பட்ட அழகுள்ளமான்கள் கொம்பிணுல்குத்தித் தள்ளுகிறதினால் கட்டுலை கன்அதனைப்பாயுது - ஆகையினால் இபிராய் அண்ணைமலைபிடிக்கி இதுகளைக்கையினால் தூக்கி ஆகாயத்திலெறிந்து கொல்லுகிறோம்பா ரடாபண்ணை.

பொது-விருத்தம்

வந்திடும்வேடர்வெள்ளி மலையெலாந்திரிந்தசர்தி
அந்தமாட்வேட்டையாடி அவருடன்வருகும்போது
தந்தாக்கொடியுமூதந் தனவனென்னும்பன்றி
விந்தைபாவேயாடக்கண்டு வேடவர்தூரத்திட்டாரே

கட்டியன்-வசனம்.

அதோதெப்படியென்றால் வேடர்கள் வெள்ளிமலை முழுதும் வேட்டையாடிவரும்போது மூகாசுரனென்றபன்றியைக்கண்டு வேடர்கள் துரத்திவருகிற விதங்காண்க

சுவாமிவேடன்-வேடர்களுக்குச்சொல்-விருத்தம்.

கானகத்தின் திரிந்து கடும்வேட்டையாடிநீங்கள்
மேனியுங்கருத்துமெத்த விடாய்கொண்டீர் போதும்போதும்
வானமுட்புயுத்தாள்கள் மருவிடவேயோர்பன்றித்
தானும்மபோகுதென்றைத் தனுசினால்கொல்வேன்பாரீர்

வசனம்.

கேளுங்கள்வேடர்களே - நீங்கள் இந்தவனமுழுதும் திரிந்து வேட்டையாடி மிகவுங்களைத்துவந்தீர்கள் - இதோ ஆகாயமும் பூமியு ஞ்சேர்ந்தாற் போலத்தக்கதாக ஒருபன்றியானதுபோகுது அதைநா னைகையாணத்தினாற் கொன்றுவருகிறேன் பாருங்கள்வேடர்களே.



வேடர் ஓடிவருதல் - தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

பன்றியிதோபோகுதையே ஒரு
பன்றியிதோபோகுதையே

அநுபல்லவி.

பன்றியிதோபோகுதையே - பதுங்கிபதுங்கிமெய்யே பன்றி

சரணங்கள்

பொக்கென்றெழுந்துபாய்ந்து பாய்ந்துசெடிப்
புறத்திலொதுங்கிச்சாய்ந்து
அக்கினிபோலே காய்ந்து ஓடும்
அருவிசனிலே - தோய்ந்து
செக்கச்சிவந்தகண்கள் - செழுந்தணற்போலுருட்டி
திக்குத்திசைநடுக்க தேவரையும்வெருட்டி
டக்கபாரிசங்கூட்டி பாரக்கொம்புகள்நீட்டி
படுத்துக்கொண்டாட்போல்நீட்டி
பதுங்கிபதுங்கிமாப்புக் காட்டி பன்றியிதோ

பொதுவிருத்தம்.

பன்றியைக்கண்டுபார்த்தன் பகர்தவமழிக்குமென்றே
வென்றியோர்கணையவாங்கி வியன்முகம்பிளக்கவெய்தான்
துன்றியகணையால்முன்னந் தொடர்ந்திடும்வேடர்நாதன்
ஒன்றியோர்கணைபார்பன்றி யுடற்பிளந்திடவெய்தானே

கட்டியன்வசனம்.

அதோதெப்படியென்றால் இப்படியாகவந்தபன்றியை அர்ச்சு னன்கண்டு தவத்துக்கு விக்கினம் வருமென்றுஒருகணையால்பன்றி யின்முகம்பிளக்கவிட்டான். பிறகு வேடர்களுக்குத்தலைவனான சுவா மிவேடன் ஒருகணையினால் அந்தப்பன்றியின் உடல்கிழியும்படியா ய்ச்செய்து அர்ச்சுனனைக்கண்டுசொல்லுகிறவிதங்காண்க

சுவாமிவேடன்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

என்கணைமுன்னோபன்றியெழிமுகம்பிளக்கக்கண்டு
மின்கணையதின்மேல்விட்டுப்பிளந்ததைப்பிளக்கச்செய்தாய்
உன்கணைக்குறிப்புமுற்தனுணர்வையுமெண்ணிப்பார்த்தாற்
பின்கணைப்பேறையித்தைப்பெண்களுஞ்செய்திடாரே

வசனம்.

ஆரடா முகத்திலே மீசையும் கையிலே வில்லும் படைத்தப யலே உன்னைப்போலுஞ் சுத்தவீரனுண்டா என்கணையினாலே அர்

தப்பன்றியினுடையமுகத்தைப்பிளந்தால் பின்றால் நீ அணைபோ(க)வ
ர்கப் பிளந்ததைப்பிளக்கலாமா உன்னுடையவீரத்தையுமில்லா
ண்மையும் உன்னுடைய புத்தியும்பார்த்தால் பெண்ணைகப்பிறந்தவர்
களிடத்திலு மிராது-ஆ-ஆ.

அர்ச்சுனன் வேடனுக்குச்சொல்-விருத்தம்.

தவஞ்செய்புமெற்றனுக்குச் சாருஞ்சொல்முழுமை
தவஞ்செய்புமக்காகார மாகைபார்லோணமிபோங்கள்
நீவஞ்சொல்லிசும்மபுங்கள் நெருப்பெலாங்காட்டவேண்டாம்
பலஞ்சலியல்லம்பார்காற்றிற் பஞ்சுபஞ்சாக்கப்பேரறன்

வசனம்.

ஆரடாவேடப்பயலே மிர்கங்களைக்கொன்றுபிடுங்கித்தின்பது
உங்கள்குலாச்சாரதர்மம் அதுஉங்களுக்குத் தேவையானால் எடுத்து
க்கொண்டுபோங்கள் - அதிகமாய் கெர்வித்து பேசினால் சின்னபி
ன்னமாய்ச்சிந்துசிந்தாய் சில்லுசில்லாய்சக்கைசக்கைபாய்ப்பெ
ருங்காற்றில் இலவம்பஞ்சாக அடிக்கப்போகிறேன் ஓடிப்போடா
வேடா.

வேடன்-அர்ச்சுனனுக்குச்சொல் -விருத்தம்.

வயப்பட்டுவந்தபன்றி வந்தன்னைக்கொல்லுமென்று
பயப்பட்டெனைப்போட்டு பாய்ந்திடச்செய்தரியா
செயப்பட்டவெங்கள்தன்னைச் சிந்தபஞ்சாக்கப்போறாய்
இயற்படவந்தன்திறனி யிதனிலேதெரிந்துபோச்சே

வசனம்.

ஒருபன்றியானது கொல்லுமென்றுபயந்து என்கணையினாலே,
பிளப்புண்டுவந்தபன்றியின்மேல் அம்புதொடுத்த நீதானா இந்தப்பு
வனமெல்லாஞ் செயம்பெற்றவர்களைப்பஞ்சாக்கப் போகிறாய்உன்
னுடையவிவேகமும்வில்லாண்மையும் உன்பவிசும் இதனால்தெரிந்
தது-ஆ-ஆ.

அர்ச்சுனன் வேடனுக்குச் சொல்விருத்தம்.

சாவியதனைமூட்டித் தவஞ்செய்யுமிடத்தில்வந்து
மேவியேயென்னையின்ன மெய்விழுந்தாளாததாயாகல்
தாவிபசனைப்பார்த்தோணத் தடிக்கவேசர்தொடிக்குள்ளாக
ஆவியைவாங்குவேனென் றுசொன்னாலர்ச்சுனன்காண்

வசனம்;

ஆரடாஅடாவேடா நான்யிந்தபஞ்சாக்கினி மத்தியில்நின்று
தவஞ்செய்யுமிடத்தில்வந்து பிதற்றுகிறபடியினாலே பொறுத்தேன்



இல்லாவிட்டால் என்னுடைய ஒரேபாணத்தினால் உன்னுடையபிராண
னைவாங்கிக்கொள்ளுவேன் என்பேசோ அர்ச்சுனனடாவேடா.

வேடன்-அர்ச்சுனனுக்குச்சொல்விருத்தம்.

முன்னமென்குலத்துவேடன் முனைமுகவில்லுக்கஞ்சி
புன்னெருபாற்பான்சொல்லாற் பெருவிரலறுத்துவிட்டாய்
அன்னவர்ச்சுனனீதானா அவனுநீயடாயானால்
என்னிடமகைவனூச்சே யினியுன்னைநான்விடேனே.

வசனம்

அடா அர்ச்சுனா என்னுடைய குலத்திலே ஒருவேடன் வில்லாண்
மைக்கஞ்சி ஒருபிராமணன் சொல்லைக்கேட்டு அந்த வேடனுடைய பெ
ருவிரலை அறுத்தாய் ஆகையால் எனக்கு நீ சத்துரு உன்னையான் கொ
ஞ்சத்திலே விடுவேனென்று யிருக்கிறாய்-ஆ-ஆ-ஆகட்டும்.

அர்ச்சுனன் வேடனுக்குச்சொல்-விருத்தம்.

ஒருதரம்பொருத்தேன்பின்னுமொருதரஞ்சொன்னேன்மேலும்
பொருவாவுனக்கிப்போதுபொல்லாதகாலமேதோ
வெருவியவிராதனுக்கும்வில்லுக்குமிகவுந்தூரம்
ஒருவியவேடாசும்மாவுயிருடனோடிப்போடா,

வசனம்

கேடாகேளடாவேடா ஒருதரம்பொருத்தேன் ஒருதரஞ்சொன்னே
ன் அதையுமெண்ணாமற்பேசுகிறாய் உனக்கு இப்போது ஏதோ பொல்
லாத காலம் போற்கிறதுது வனத்திலே சஞ்சரிக்கப்பட்ட வேடனுக்
கும்வில்வித்தைக்கும் ஆண்மைக்கு வெகுதூரம் ஆனபடியினாலே உயி
ருடனேதப்பிஓடிப்போடா,

வேடன் அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

வல்லிலேபோர்க்களத்திலேயின்வாய்கர
மனத்திலேகாணார்வேகவரம்புகப்பா
வில்லிலேயுங்கைகேவிஜயக்கொண்டு
விசையனென்றுபேர்படைத்தவிறலாபோடா
சொல்லிலேகைச்சண்டைதனிலெய்யம்பு
தொடுப்பதிலேமல்லுயுத்தபத்தொடர்பிலேயேல்
பல்லமரிலுன்சமர்த்துமென்சமர்த்தும்
படிப்படியாயெதிர்த்தொருகைபார்ப்போம்வாடா

வசனம்

கேளடா அடா அர்ச்சுனா, மல்லுயுத்தயத்திலே, சண்டைமுகத்தி
லே, பின்னுக்கிடையாத மனத்திலே, தயிர்சாஸ்திரத்திலே, குறிதப்

பாத்தில் வித்தையிலே, அங்கங்கே விசயங்கொண்ட விசயன் நீதானு அடாபோடா விமலா, ஆகிலும் சண்டையிலும் பாணப்பிரயோகத்திலு ம் மல்லயுத்தத்திலும் உன்னுடைய சமர்த்தையு என்னுடைய திராணி யையும் இருவரும் எதிர்த்து ஒருகைபார்ப்போம்வாடா.

அர்ச்சுனனுக்கும் வேடனுக்கும் வாது கண்ணிகள்

இராகம் பியாகடை - அடதாளம்.

அர்ச்சுனன்சொல் கண்ணி,

பார்ப்பதென்னடா வெங்கன் திராணி
பார்க்கவுன்னாலாமோ — ஒருகு
பாணம்விடுகிறவிதோ - அந்தப்
பாரடா அட — வேடா

வேடன்சொல்-கண்ணி

விட்டகணைபலிக்கயிரண்டு
மேல்விட்டேவிதோபாரடா — உன்
விரிந்தமார்பிரண்டதாரு
பிளந்துவோந்தது — போடா

அர்ச்சுனன்சொல் கண்ணி,
அனேக்குருமன்னரோமுன்னுகணைகள்
தொடுத்தேவிதோபாரடா — தலையில்
தொடுத்தபிணியுமடுத்தசோள்கலைத்
தணிக்கிறேனட — வேடா

வேடன்சொல் கண்ணி,
தணிக்கவித்தழுன்னுகளையும்
தண்டுதுண்டாய்விழ — எதிர்
கருக்காய்முன்னுகளைக்கவிழ்த்தன்
தோற்றப்பயலே — போடா

அர்ச்சுனன்சொல் கண்ணி,
தோற்பதோருமேறுபோர்க்கணையாக்
தொடுத்தேன்தொடுத்தன்வேடா — தலையில்
தலைக்குமுடியுமிலக்குமணியுந்
தணிந்துபோச்சுதே — வேடா

வேடன்சொல் கண்ணி
போச்சுதென்று விடுவிடுயெனகம்மாய்
பூச்சிக்காட்டாத போடா



இல்லாவிட்டால் என்னுடைய ஒரேபாணத்திலேயே உன்னுடையபிரா ணனைவாங்கிகொள்ளுவேன் என்பட்போ அர்ச்சுனனடாவேடா.

வேடன் - அர்ச்சுனனுக்குச்சொல் - விருத்தம்.

மூன்றுமென்குலத்துவேடன் முனைமுகவில்லுக்குள்ளே
பின்னொருபார்ப்பான்சொல்லால் பேருவிரலறுத்துவிட்டாய்
அன்னவர்ச்சுனவீரனு அவலுநீபடாரியானால்
என்னிடம்பகவனுச்சே யினியுன்னைநான்விடேனே

வசனம்.

அடாபயலே அர்ச்சுனனென்னுடைய குலத்திலேயொருவேடன் வில் லாண்மைக்கஞ்சி ஒருபிராமணன்சொல்லைக்கேட்டு அந்தவேடனு டைய பெருவிரலை அறுத்தாய் ஆகையால் எனக்குநீசத்துரு உன்னை நான்கொன்றுசத்திலேவிடுவேனென்றாயிருக்கிறாய் - ஆ - ஆ - ஆகட்டும்.

அர்ச்சுனன்வேடனுக்குச்சொல் - விருத்தம்.

ஒருநாம்பொறுத்தேன்பின்னுமொருநாஞ்சொன்னேன்மேலும்
பொருவாவுனக்கிப்போது பொல்லாதகாலமதோ
வெருவியகிராதனுக்கும் வில்லுக்குமிகத்தாய்
ஒருபவேடாசும்மா வுயிருடனோடிப்போடா.

வசனம்.

அடாகேளடாவேடா ஒருதரம்பொறுத்தேன் ஒருதரஞ்சொன் னேன் அதையுமென்னுமதிக்கிறாய் உனக்குஇப்போதுமேதோ பொல்லாதகாலம்போற்றேன்னு [illegible] சரிக்கப்பட்டவே டனுக்கும் வில்வித்தைக்கும் ஆண்மைக்கும் வெகுதூரம் ஆனபடி யினாலே உயிருடனேதப்பிஓடிப்போடா.

வேடன் - அர்ச்சுனனுக்குச்சொல் - விருத்தம்,

மல்லிலேபோர்க்களத்திலேபின்வாங்கா
மனத்திலேதனுர்வேதவாம்புகப்பா
வில்லிலேயகத்தேவிஜயக்கொண்டு
விஜயனென்றுபேர்படைத்தவிமலாபோடா
சொல்லிலேயகச்சண்டைதனிலேயும்பு
தோடுப்பதிலேமல்லுயுத்தத்தொடரிலேமேல்
பல்லமரிலுஞ்சமர்த்து மென்மார்த்தும்
படிப்படியாயெதிர்த்தொருகைபார்ப்போம்வாடா.

வசனம்.

கேளடாஅடா அர்ச்சுனா மல்லயுத்தத்திலே சண்டைமுகத்தி லே, பின்னுக்கிடாத மனத்திலே, தனுர்சாஸ்திரத்திலே முதி ய

பார்த்தவில்வித்தையிலே, அங்கப்போ விஜயங்கொண்டவிஜயன்தானுஅடபோடாவிழுகா, ஆகிலும்சண்டையிலும் பாணப்பிரயோகத்திலும் மல்லுயுத்தத்திலும் உன்னுடைய சமர்த்தையும்என்னுடைய திராணியையும் இருவரும்எதிர்த்து ஒருக்கபார்ப்போமடா.

அர்ச்சுனனுக்கும் - வேடனுக்கும் - வாது-கண்ணிகள்

இராகம் - பியாகடை - அடதாளம்,

அர்ச்சுனன்சொல் - கண்ணி

பார்ப்பமென்னடா பெந்தன்றிராணி
பார்க்கவுன்னாலாமோ ஒரு
பாணம்விடுகிறேனிதோ - அதைப்
பாரடாஅட வேடா

வேடன்சொல்-கண்ணி.

விட்டகணையை விலக்கியிரண்டு
மேல்விட்டேனிதோபாரடா உன்
விரிந்தமார்புந்திரண்டதோளு
மிகத்துளைத்தது போடா

அர்ச்சுனன்சொல்-கண்ணி.

துணைக்குமுன்னமே மூன்றுகணைகள்
தொடுத்தேனிதோபாரடா தலையில்
தொடுத்தசரிசெயு மடுத்தசோர்கணைத்
துணிக்கிறேனடா வேடா

வேடன்சொல்-கண்ணி.

துணிக்கவிடுத்தமூன்றுகணையுந்
துண்டுதுண்டாய்விழ எதிர்
கருக்காய்மூன்றுகணைகள் விடுத்தேன்
தோற்றுப்பயலே போடா

அர்ச்சுனன்சொல்-கண்ணி.

தோற்றபதேது மேலுமோர்கணையைத்
தொடுத்தேன்தொடுத்தேன்வேடா தலையில்
தலைக்குமுடியுமிலக்குமணியுந்
தணிந்துபோச்சுதே வேடா

வேடன்சொல்-கண்ணி.

போச்சுதென்றால்விட்டுவிடுவேனோ சும்மாப்
புச்சிக்காட்டுறயென்னடா கள்ள



புட்டுகிறேனுன்னைவாட்டுகிறேனென்
புஜபலத்தைநீ பதியடா

அர்ச்சுனன்சொல் - கண்ணி

பலமென்னவுந்தன் குலமென்னசும்மாப்
பேசுகிறாயடவேடா வில்லைப்
பிடிக்கிறேனிதோ அடிக்கிறேன்தப்பிப்
பிழைத்துப்போடா வேடா

வேடன் - அர்ச்சுனனுக்குச்சொல் - விருத்தம்

கல்லாலேயுருட்டிவிட்டதெனத்திரண்ட தோள்வலியால்கையிலேந்தும்- வில்லாலேயென்னையடித்தாய்விடுவேனோயித்தனைமேலுமுன்னை- யல்லாமல்திராணிநீர்த்துகெலிப்போமுதோர்ப்புமறியவேணும் - வல்லாண்மையுனக்கிருந்தால் மல்லுயுத்தஞ் செய்குவோம்வாடா மூடா.

வசனம்

கேளடாஅடா அர்ச்சுனா, கருங்கல்லுக்குச்சமனாயாகியதோள்பலமுடைய உன்னுடைய கையிலிருக்கும் வில்லாலென்னையடித்தாய்ஆகட்டும் நியுத்தாலும் இவ்விருவர்ம்தோர்ப்புங்கெலிப்புமறியவேணும் ஆகையால் மல்லுயுத்தியஞ்செய்வோம்சீக்கிரம்வாடா அர்ச்சுனா

அர்ச்சுனனுக்கும் - வேடனுக்கும்- வாது-, கண்ணி

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்

தலையெங்கேயசையாதிருசற்றே தாக்கிறேன்

வேடன் சொல்லல்

தாக்கடாயிதோ தாக்கிமார்பின வாக்கிறேன்

அர்ச்சுனன் சொல்லல்

தோளெங்கேயுந்ததோள்வலியறான் றனைக்கிறேன்

வேடன் - சொல்லல்

துளையடாவதைத்துளை துளைகப் புடைக்கிறேன்

அர்ச்சுனன் - சொல்லல்

மார்பெங்கேயெந்தன்மார்பாலிடித்துத் தள்ளுறேன்

வேடன்-சொல்லல்

தள்ளடாவுன்னைத் தள்ளிப்பற்றிக் கொல்லுறேன்

அர்ச்சுனன்-சொல்லல்

கையெங்கேயெந்தன்கையாலிறுக்கிப் பிடிக்கிறேன்

வேடன்-சொல்லல்

பிடிபடா பிடித்திறக்கிப் பிடிபோ — பிடிக்கிறேன்

அர்ச்சுனன்-சொல்லல்

காலெக்கேமுந்தக்காலாலே — யடிக்கிறேன்

வேடன்-சொல்லல்

விசோலபெற்றவர்காலால் மடக்கி — ஒடிக்கிறேன்

அர்ச்சுனன்-சொல்லல்

பாதமெக்கேபகைப்பற்றியாரபத்தி — லெறிபுறேன்

வேடன்-சொல்லல்

எறிபடா நீ வெறிபுஞ்செய்ய — பதியுறேன்

அர்ச்சுனன் - வேடனுக்குச் சொல் - விருத்தம்

அல்லடா வேடா வென்னை யமர்க்களத்தலைமட்டுக்

கல்லடா யறிந்தாற்போல கடிகிர் வெறிந்தாய் பேய் பேய்

நில்லடா பயப்படாதே நினையிட்டோ தவரி

எல்லடா கடாக முட்ட வெறிக்கிறேன் துயிர்ப்பாரசய்

வசனம்

அடாவாடா வேடா வென்னைக் கவர்க்கலே சமட்டுக் கல்லில்

எறிந்தா போலே பல்லவோ வெறிந்தாய் - உன்னை வாரி அந்தரத்தில்

கடாகப்போய் முட்டித்தட்டி விழுந்தக்காதான் எறிகிறேன் ஒது

ப்போகாமல் நில்லடா பார்ப்போம்

பொது-விருத்தம்

வில்லாலகப் போய் மீளவந்தெழுந்து வருமுவிதயன்

விசையைப் பார்த்துக்

கில்லலர்பியமகிழ்ந்து வேட்டவடிவங்களைந்து

சாகசியாகப்

புல்லன்று நபாகேந்திரபுப் பிரமன் முதல்தேவர்களும்

பிறகுஞ்சூழத்

தன்னைவெதிர்த்துவரும் பார்த்தன் முனே விடையின்

தோன்றினரே [மிசைத்

கட்டியன் வசனம்

அகோ தெப்படி யென்றால் - ஆகாயபட்டேபோய் முட்டி

மேலிழுந்து மறுபடியும் எதிர்த்துவரும் அர்ச்சுனன் முன் பாகசிவ

பவானருடனே காட்சி கொடுக்கவரப் பரமேஸ்வரர் வரு

கிறார்.



பரமேஸ்வரர் வருகிற - தரு - இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி

பரமேஸ்வரர் வந்தார் — அர்ச்சுனன்னை

பாணத்தடிவையுண்டு காணக்கருத்துட்கொண்டு

பரமேஸ்வரர் வந்தார்

அநுபல்லவி

குமாரன் மருங்கு இலங்க - காளகண்ட மிலங்க

சுருதிகள் வரிசைக்க - கணமாதவர் வணங்க

அரவாபரண — மாட

அருமறைகள் கொண் — டாட

சத்தியுமிதிருடம் சித்தகர் — மகிழ்ச்சி

சத்தியுமவர் பக்கத்தினில் — புகழ்பெற (பரமேஸ்)

சரணங்கள்

செம்பிறையு-நிறைகொன்றைமுடியினிற்

சேர்த்துமிர்கா — சிக்கவே - வேத

நிட்சபர்மறைகளோத - திருத்தமாகச் சொல்லி

துயாணித்துப் — புசிக்கவே

கோதுக்கிளிமொழியை - கொண்டபின் சூர்சன் வந்து

கூடியிசையுடனே - பாடிவரவு — மென்றாய்

ஆடிவரவுக் கொண் - டாடிவரவு — நன்றாய் (பரமேஸ்)

சொல்லரிய சுர்கோடி - சூரியப்பிரபையில் மலர்ந்து

தாமரையிருந்த மணம் — வீசவே - அந்தத்

தொம்மாலவட்டம் - வெண்சாமரையைச்

சுழற்றித்துதி செய்தில — பேசவே

எல்லருங்காட்சி - யீகுவாரி தாரதி

வாவுவரவர் மன - நினைந்த — நடவதி

கணமுறைச்செபசோபனநிறை — நுணதிதி (பரமேஸ்)

நிலமெக்காளமுடன் - செயகண்டிநாகசுரம்

நிவேதித்துதி — வரவே - கூடத்

திருத்தொண்டர்கள் மகிழ்ச்சி - சேருந்தவளச்சங்கை

நிறைந்துநியேன்மை — தரவே

பின்னும் வெண்ணிறமுள்ள - விடையின்மீதிலேறி

வேதகீதவ - நீதிபாத — முறை

காதலாகவும்வி - நேசமாக — நிறை (பரமேஸ்)

அர்ச்சுனன்சொல் - தோத்திர - விருத்தம் - இ - ம்-நீலாம்புரி

பரிதிக்கருகிக்காணும்பயிர்போல் வாடிப்பரதவித்தேன்
கருதிக்கருதி பொருகரியுங் காணுதின்றேன்கண்ணாகவே
கருதிப்பொருளே யருட்கடலே ஆயகடோமணிவிளக்கே
திருவிற்றவிபேன்பெருந்தவமே சிவமேவந்துதோன்றுவாய்

இதுவும் - அர்ச்சுனன் - பரமேஸ்வரனைக்கண்டுசொல்லுகிற

தோத்திர - விருத்தம்

ஆதியேபோற்றிவேதந் தந்தவேபோற்றிஞானச்
சோதியேபோற்றிநாதந் தோற்றமேபோற்றிநல்ல
நீதியேபோற்றியன்பர் நேயமேபோற்றிப்பிரசத்தி
பாதியேபோற்றியென்னையாளுவாய்போற்றிபோற்றி

வசனம்

ஆதிமுதல்வித்தாயமர்ந்த ஐயனேசரணம் வேதத்திற்கு அனுகூலமாயிருந்த ஆண்டவனேசரணம் ஞானத்திற்குஒளியைத்தரும்பரஞ்சோதியேசரணம் நாதாந்தவிதமேசரணம் நீதியுருந்த அடியார்களுக்குத்தஞ்சமாயிருக்கும் கடவுளேசரணம் அடியேனையாளவந்த அநாதிவஸ்துவேசரணஞ்சரணம்ஐயனே

அர்ச்சுனன் தோத்திர அகவல் இ - ம் எதுகுலகாம்போதி

அரகரசிவனே அரவணிபவனே
புரமெரித்தவனே பொருவில்புங்கவனே
விடையேறியிமையில் விமலனேகொன்றைச்
சடையனேவேதந் தலைவனேபரனே
முக்கண்ணற்புதனே முதல்வனேபரனே
தக்கன்செய்வேள்வி தவிர்த்தசங்கரனே
வளங்கெழுகுலம் ராமேருமேருவைத்
தயங்குசாலந் தரித்திடுக்கரனே
இடபவாகனே யின்றமெம்மானே
உமையொருபாகத் துலங்குவைத்தவனே
கறைமிடற்றவனே கயிலைப்பவனே
நறைமலர்ப்பதனே நம்பியேஞானா
வளர்க்குமதியேயம் மதியினைச்சிரசேயன்
இவைக்குமதியேன் சாறுமொய்ம்மதியேன்
பேதையேன்செய்த பிழைபொறுத்தருளிக்
காதலாயென்னைக் காப்பதுகடனே
சோதியேபோற்றிச்சுடரொளிபோற்றி



ஆதியேபோற்றி அநாதியேபோற்றி
போற்றிபோற்றி பொன்னடிபோற்றி

இதுவும் அர்ச்சுனன் - சிவனுக்குச்சொல் - கலி.

தருமராஜனுக்குத்தம்பியானேன்
அருமைசேர்ராமனுக் கன்பனானேன்
அரகரவுமையான் போற்றப்பெற்றனன்
இருநிலத்தென்னவ யியார்பெற்றாரோ

வசனம்.

தருமராஜனுக்குத் தம்பியானேன் ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கு அத்தம்பிரியனானேன் காலகண்டதிரிநேத்திர சடாமகுடதாரியான உம்மைக்கண்டு வாழ்த்திவணங்கத்தக்கதாகப்பெற்றேன் ஆகையால் நான்பெற்றபேறு ஆர்பெற்றார்கள் சர்வலோகேஸ்வரா.

சிவன்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

எரிமனத்துரியன் மூகாசுரனை
யேனமாயனுப்பினனவனும்
மருவுமிம்மலையில் வந்துனைக்கொல்ல
மறைந்திருந்ததையுநானறிந்து
பெருவனவேடவடிவெடுத்தவனைப்
பிளந்தனனுன்னுடனெதிர்த்து
உரியவில்லடியு முதையுநான்பட்டே
யுனக்குநல்வரந்தரவந்தேன்

வசனம்

துரியோதனனுன்னைக்கொல்லும்படியாய் மூகாசுரனை யனுப்பினான் அவன் இந்தக் கைலாசபரிசத்திலே வந்து அடங்கியிருந்தான் அதைநானறிந்து வேடவடிவங்கொண்டு அவனைப்பிளந்தேன் பிறகு உன்னுடனெதிர்த்து நீ வைததெல்லாங்கேட்டுக்கொண்டேன் உன்வில்லாலே அடியும்பட்டேன் உன்காலுதையும்பட்டேன் மேலும் நீ கேட்டவரங்களெல்லாம் கொடுக்கத்தக்கதாய் வந்திருக்கிறேனப்பா அர்ச்சுனா

அர்ச்சுனன்-சிவனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

ஆதியாயந்தமாய்மே லகண்டமாயறிவாய்நின்ற
சோதியுன்மகிமைதன்னைச் சொல்லவல்லவர்களுண்டோ
பேதையின்களைச்செய்குற்றம் பெற்றவர்பொறுக்கவேணும்
ஆதிகாலத்தியேஎன்று மனத்தமுன்செயலேயையா

சிவன் அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

அந்தரமறிவதல்ல ஆண்மையுமன்பும்பெற்று
குந்திசுதற்கிவந்த குருகுலவிஜயாகேளாய்
சந்தவேபுக்கிநோக்கி யிவ்வளவிளைத்தகந்தைச்செய்தாய்
விந்தையாயுனதுமன்றுலே வேண்டியதனைச்செய்வாயே

வசனம்.

குருகுலத்திலே நல்ல அதிகம்-அன்பு நாடுணனையும்பெற்ற அர்ச்சுனா நீ நல்லசெய்வோடே தவத்தின் நியடையிருமூலே என்னோடே சண்டைக்கு வந்தாய் அந்தத்தைதான் மிகவும் மெச்சினேன். இனி உனக்கு வேண்டிய வரங்களைக்கேட்டுக்கொள்ளலாம் அர்ச்சுனா.

அர்ச்சுனன்-சிவனுக்குச்சொல்-விருத்தம்.

அருமறைமுதல்வர்நீர் வரிந்திலாதொன்றுமில்லை
கருமசத்துருக்களாலே யானகந்தவில்வாநின்றேன்
பெருகுபாரதப்போர்தன்னில் பேதையரடங்கக்கொள்ள
பரமனேயெனக்குப்பாசு பதாஸ்திரந்தருவாயே.

வசனம்.

அண்டபுவன கர்த்தர்வாவாயிருக்கப்பட்ட எம்பெருமானே உமக்குத்தெரியாத தொன்றுமில்லை துரியோதனாதிகளாலே நாடுநகரிமுதல் ஆசையிழந்து வனவாசஞ்செய்துக்கொண்டிருக்கிறோம் இனிமேல் பாரதயுத்தத்திலே சத்துருக்களை வெல்லாஞ் செயம்பண்ணத்தக்கதாக தேவரீர் பாசுபதாஸ்திரத்தை அனுக்கிரகஞ்செய்யவேணுஞ் சுவாமி,

சிவன்-அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரங்கொடுக்கிற விருத்தம்.

தில்லியந்தாவிஜயா இன்று நீ பெண்ணைப்பணிந்துகேட்ட
மல்லிந்தமந்திரந்தா மகாபாசுபதமிந்தா
வில்லிந்தாஜயமிந்தா வெற்றிபெறுவாயென்று
சொல்லிந்தாநீபுறப்படின் றுனைவரும்யாழ்ப்புவீரே

பார்வதி அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

அன்புள்ளமகனேநல்ல அர்ச்சுனாகேளாய்நீ என்
உன்பெருத்தவத்தினாலே புராபிகமேற்றேனப்பா
இன்பமாய்ச்சொல்லுகிறேன் வெற்றியுண்டாகுமால்
அன்பதீபுறப்படு னுவருவாய்நீவாழி



விஷ்ணு பிரம்மா-தேவேந்திரன்- இவர்கள்வருகிற
பொது-விருத்தம்

கயிலையில்விஜயனுக்குக் காட்சிதந்தவனினைத்து
எயில்பாசுபதாஸ்திரந்தரைமீந்தவசக்காண்பதற்கு
புயல்நிகர்மேனியானும் பூவயன்தேவர்கோனும்
ஒப்பிலுடன்சேர்ந்தொன்றாக வந்திதோவருகின்றாரே.

வசனம்,

அகோதெப்படியென்றால்-பரமசிவன் அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரங் கொடுத்ததைகேள்விப்பட்டு - விஷ்ணுவும்- பிரம்மதேவனும் தேவேந்திரனும் வருகிறவிதங்காண்க.

ராகம்-தரு இம் தோடி—ஆதிதாளம்.

பல்லவி,

நாரணனுஞ்சதுர் நாரணனும்வெள்ளை
வாரணனும்வந்தார்

அநுபல்லவி.

காரணசங்கரர்சுருளும்விஜயனுக்குக்
காட்சிதந்ததின்றருட்சிகண்டுகொண்டு நாரண

சரணங்கள்.

அமரர்முனிவர்புகட் ஞ்ழ சொல்
அஷ்டதிக்குப்பாலகரடியில்வந்து தாழ
விமலநாரதரிசை பாட புகழ்
விளக்குந்தும்புருதன்று மினிய கானங்கூட
கலையயில்கந்தருவர்கொண் டாட தெய்வ
கன்னியர்மயில்போலின் ஞட
திமிர்தனைபொருக்கும்-மணப்பிரபைகள் மிக்க
மழுநூற்றிட விரித்து வெகுமொய்ப்பொடுஜொலிக்க
திகழுமகுடபத்தி-யருகில்நிக திச்சென்ன
மிகவுமொளிவிளங்க-விஜயன்கண்டு துன்று நாரண

அர்ச்சுனன்-விஷ்ணுவுக்குச்சொல்-போற்றிவிருத்தம்.

கிரிதனைகுடையாய்க்கொண்ட கீர்த்திபாபோற்றிபோற்றி
கரிமுறையபயந்தீர்த்தகாரணப்பொருளேபோற்றி
திருவினைமார்பில்வைத்த தீர்முகுந்தாபோற்றி
பரியுடனேவையாட்கொண்ட பதாப்புயம்போற்றிபோற்றி

விஷ்ணு-அர்ச்சுனனுக்குச்சொல்-வாழிவிருத்தம்.

மல்லுமையிலெனில்லாத வரத்தினிலேவாய்மையுற்ற
சொல்லிலெடிக்கிரையற்ற துரையிலேதீரையிலேநல்
இல்லிலேயியல்பிலேதீ யிசையிலேதிசையடைந்த
வில்லிலேவலுமையுள்ள விஜயனேவாழிவாழி

அர்ச்சுனன்-பிரமனுக்குச்சொல்-போற்றி-விருத்தம்.

நாதவெண்கமலமேவுஞ் சரஸ்வதிநாயகாவீழ்
காதலாயிகைல்லிதன்றுனுங் காருமூர்த்தியனேபோற்றி
நிலைமைத்தியமேலாக நினைவிருந்தபிரஷ்டிக்கும்
நாதனேகொப்பாம்பியய தனியேபொற்பாதம்போற்றி

பிரமன்-அர்ச்சுனனுக்குச்சொல்-வாழி-விருத்தம்

புத்திரியில்மிகுந்தாவாழி புகழினிற்சிறந்தாய்வாழி
பத்தியிலுயர்ந்தாய்வாழிபராக்கிரமவிஜயாவாழி
குத்தியயில்லாதோய்குல் குந்திதன்மைந்தாவாழி
வத்திசையிலினுக்கேத்தி யிலருபார்த்தாவாழி

அர்ச்சுனன்-தேவேந்திரனுக்குச்சொல்-போற்றிவிருத்தம்

அண்டர்களரசேபோற்றி அயிராணிமகிபாபோற்றி
புண்டரிகனைச்சம்மாரப் புரத்தனையனுமெச்சிக்
கொண்டிடத்துக்குமேலாக் கோனிரிதலுருனைக்
கண்டுரும்பிகழ்பிராவே கழலிணைபோற்றிபோற்றி

தேவேந்திரன்-அர்ச்சுனனுக்குச்சொல்-வாழிவிருத்தம்

காளையேவாழிவெற்றி காண்டீபப்புலியேவாழி
வாளரசர்க்கொணைய்கு மகிழ்நூலக்கொழுந்தேவாழி
வேலினும்படையின்மிக்க விசயனேவாழியண்ட
கோளுமர்கடந்தவீரா கொற்றவெண்மைந்தாவாழி

சிவன்-விஷ்ணு-பிரமன்-மூவரும்-அர்ச்சுனக்குச்சொல்-வசனம்

அப்பா அர்ச்சுனா இனிமேல் உங்களுக்குபாதொருதுன்பமும்வாராதுசுகமாயிருப்பீர்கள்எங்களுக்குஞ் சேவைகொடுக்கவேணும் அர்ச்சுனா

அர்ச்சுனன் மூவர்களுக்குஞ்சொல் வசனம்

சரணஞ் சரணம் அப்படியே போய்வரலாஞ் சுவாமி

---

# தெய்வலோகசரித்திரம்

பொதுவிருத்தம்.

மங்கைபாகனுமகிழ்ந்தேவிஜயனுக்கு
மடாசுபதங்கொடுத்துக் கயிலைசேர்ந்தார்
சங்குசக்கரத்தோனும்பரனுந்தங்கள்
தங்களிருப்பிடத்தினைப்போய்ச்சார்ந்தாரிப்பால்
அங்கயினில்வச்சிராயுதத்தைக்கொண்ட
ஆயிரங்கண்தந்தையுடன் தெய்வலோக
மங்களமாய்ச்சேர்ந்தானும்பேடிரூபம்
வந்தனும்சென்றதும்வழுத்துவாமே

கட்டியன்சொல் - வசனம்.

அகோதெப்படியென்றால் அர்ச்சுனனுக்குப் பரமசிவனானவர் திருவுளங் கனிந்து தன்னிடத்திலிருக்கும்பாசுபதாஸ்திரத்தைக்கொடுத்து ஆசீர்வதித்துக்கயிலையங்கிரிக்குச்சென்றார் விஷ்ணுவும்-பிரம்மதேவனும்ஆசீர்வதித்து அவரவர்களுடைய இருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள்- இப்பால்அர்ச்சுனன் தன்தந்தையாகிய இந்திரனோடுதெய்வலோகம்போனதும் ஊர்வசியால்பேடிரூபம்ஆனதும்-மறுபடியும்தான்நினைக்கும்போது வரும்படியாகக் கேட்டுக் கொண்டதும் வருமாறுகாண்க.

தேவேந்திரன்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

கந்தனுமதனுமங்கண்டு களிக்கவேயழகைப்பெற்றாய்
சந்திரசேகரனிடத்திற் றனிப்பாசுபதமும்பெற்றாய்
உந்திபூத்தவன்றனன்பு மோங்கயனருளும்பெற்றாய்
மைந்தனேயுன்போலிந்த வையமீதெவர்பெற்றாரே

வசனம்.

கேளாய்அர்ச்சுனா சுப்பிரமணியனும்-மன்மதனுங்கண்டு சுகிக்க அழகைப்பெற்றாய்-பரமசிவனிடத்தில் பாசுபதாஸ்திரமும் பெற்றாய்-விஷ்ணுவினுடைய திருவருளும்பிரமதேவனுடையதிருவருளும்பெற்றாய்-ஆகையால்உன்னைப்போற்கீர்த்திஇந்தப் பாகடாட்சமும்பெற்றாய்-ஆகையால்உன்னைப்போற்கீர்த்திஇந்தப் பூமியில்ஆர்பெற்றார்களப்பா அர்ச்சுனா.

அர்ச்சுனன்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

பெற்றதும்நினதுசீரே பிரபலவியாசர்தன்னால்
கற்றதும்நினதுசீரே கடவுளரடியைக்கண்கள்

பெற்றதும்பினதுமே வறுமிலிறடக்கப்போற
மற்றதும்பினதுமே மைந்தருலாவனுன்டோ

வசனம்

கேளும்பிதாவே-பாசுபதாஸ்திரங்கிடைத்ததும் முன்னே வியாசரிடத்தில் மந்திரம்பெற்றுக் கொண்டதும்-சாட்சாத்பரமசிவனையும் பிரமதேவனையும் கண்டு அவர்கள் ஆசீர்வாதமும் கிடைத்ததும் உம்முடையசெயல்தான்-இனிமேல் நடக்கப்போகிற யாவும் தேவரீர்திருவருட்கடாட்சமேயல்லாமல் வேறொருவருமுண்டோ பிதாவே

தேவேந்திரன் - தேவர்களுக்குச்சொல் - விருத்தம்

பிரியமாயுருகிருக்கு பேதாபேதத்தைக்கூறும்
உரியதேவர்களேயிந்த வர்க்கமெல்லாஞ்சொல்லும்
அரியபோர்ச்சொல்லுஞ்சான்றோர்க்கடைக்கப்பார்த்தால்விட்
பிரிவேயாமனமுயல்லேப் பெருநாள்செயமேசொல்லீர் [பீர்]

வசனம்

எந்நேரமும் இடைவிடாமல் வைகுண்டத்திலிருந்து நல்லமனமுடையவர்களே என்றுசொல்லும் தேவர்களே இந்த உத்தமனாகிய அர்ச்சுனனுடையசொல்லையும் பெரியோர்களுக்கு இவனுடைய குணநலமடைந்ததையும்பார்த்தால் இவனைவிட்டுப்பிரியமனது வரவில்லை இதுவும் எவ்வாறு சொல்லுங்கள் தேவர்களே

தேவர்கள்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்

சொல்லுவதெல்லைவந்த சூரபாண்டவர்க்கு
வில்லுமம்புங்கொடுத்த விநோதத்தைப்பார்க்குறாமும்
செல்லுவதம்ச்சாரங்கள் திருமகனுனக்காகும்
கல்லுநேர்தோளாயுன் மூர்க்கமைத்துக்கொண்டேகுவோமே

வசனம்

கேளும் தேவேந்திரமகாராஜனே நாங்கள் என்னசொல்லுகிறது அந்தபரமசிவன் இவருக்குப் பாசுபதாஸ்திரங் கொடுத்த வேடிக்கையைநாம்பார்த்திருந்தும் போகிறது நியாயமல்ல மேலும் தேவரீருக்கு மைந்தனுமாயிருந்தால் இவனை நாமுடையாகவைக்கவே கம்அழைத்துக்கொண்டுபோய் சிறந்திருக்கும் செய்யவேண்டியது மகாவுத்தமம் மகாராஜனே

இதுவும் - தேவர்கள் - தேவேந்திரனுக்குச்சொல் - விருத்தம்

ஆயிரம்பேர்மெல்லம்பும் அம்பலத்தாடுகின்ற
நாயனுங்கொடுத்தால் மற்றவரும்வாழ்த்தினர்திருவே



நாடிட்டுக்கொடுபோய்வாசம் நல்லரியணையிருத்தி
பூமியிலில்லாநால்வை போகஞ்செய்தலைப்பலமே

வசனம்

கேளுந்தேவேந்திரமகாராஜனே பெம்மான்-பரமசிவன் பாசுபதாஸ்திரங்கொடுத்ததிருக்கும் விஷ்ணு பிரமாமுதலானவர்கள் ஆசீர்வாதஞ்செய்ததிருக்கும் நாமும்இவருக்கு ஒருபெருமை செய்யவேணும் அதென்னெனில் நம்முடைய பொன்னுலகத்திற்கு இவரை இட்டுக்கொண்டுபோய் சிங்காசனத்தில் உட்காரவைத்து ஆடல்பாடல்முதலாகிய கேளிக்கைகளைச்செய்வித்து அநேகவைபவத்துடன் அனுப்பவேணுந்தேவேந்திரமகாராஜனே.

தேவேந்திரன் - தேவர்களுக்குச்சொல் - கவி.

தருமிஷ்டிங்கள் - சாந்தியமொழிகள்
விஸ்தாரவந்த-விதமாகச்செய்வோம்

வசனம்,

கேளுந்தேவர்களே நீங்கள்சொல்லியதுசரிதான் அப்படியே செய்யலாந்தேவர்களே.

தேவேந்திரன்- அர்ச்சுனனுக்குச்சொல்- விருத்தம்.

இலனோருநாளுனக்குப் பிரியானமேனமாகில்லாத
கோலனேயாருமெச்சிக் கொண்டாடுங்குணத்திருமாவி
சாலனேதெய்வலோகந் தன்னைநீபார்க்கவேத்தன்
பாலனேதடைசொல்லாமற் பரிவுடன்வருகுவாயே

வசனம்.

ஞானத்திலுஞ்சிறந்ததும்-பரிசுத்தமானம் பொருந்தியும்-அதிகசுந்தரமுமுள்ள அர்ச்சுனாபொன்னுலக விசித்திரமையும்பார்க்கஎன்னுடன் கூடநீவரவேணும்அர்ச்சுனா,

அர்ச்சுனன்- தேவேந்திரனுக்குச்சொல்- விருத்தம்.

நாயினுங்கடையேனுகநாரியிலொருவனாக
வேயிருந்துழலுகின்ற வேளையினுதவியாக
மாயிருஞாலம்போற்றுமகிபநீயழைக்கச்சேர்வேன்
வாயினாற்றடைசொல்வேனோ வருகிறேன்போற்றிபோற்றி

வசனம்.

கேளும் பிதாவேஇந்தப்பூமியிலே அநேகவருத்தப்பட்டுமேயும் நாயேனைத் தாங்களொருபொருளாயெண்ணி அழைத்தால்த

ந்தையின் திருவாக்குக்குத் தடைசொல்வேனோ அப்படியே வருகி றேன் தேவரீரே.

பொது வெண்பா.

சந்தரஞ்சேர் நீர்தயிலர் குஞ்சரச்சலோசனிபதி
வமந்தியக்கரபாலனைத் தி மணிரதத்திலேற்றி
பந்தமுதற்செல்லுமைவழியில் பரிபடலுடனதியிலுள்ள
விந்தைகளெல்லாம் பெயர்த்து விளம்புவான் விஜயனுக்கே.

கட்டியக்சொல் - வசனம்

அகோ தெப்படியென்றால்- அர்ச்சுனன் தேவேந்திரன் மு னம்பேலேத்திச் சாரதியாகிய மாதலியைப் பெச்சரிக்க ஆகந் தேவ நடத்திக்கொண்டுபோகையில் அந்தலோகத்தி லரிசையங்களையு ம் மற்றுமிக்கிருவுள்ள விநோதங்களையும் அர்ச்சுனனுக்குச் சொல்லிக் கொண்டு போகிற விதங்காண்க.

தேவேந்திரன்- அர்ச்சுனனுக்குச்சொல்லுகிற- கண்ணிகள்

இராகம்-கல்யாணி-மிசாதாளம்.

காவனச்சடவுள்வாழும் கயிலயக்கிரியிதனைக் காண்டிடாய் அன்பு கொண்டிடாய்
ஆயனைகள் தரிசெய்யும் ஆண்டவன் வைகுந்தத் தமதுறைப்போர்-பதத்தையும்
பத்தியாயன்பர்கள் நின்று பரவிமணிசூடின்ற பரமேசுவரன் - மேன்மையம்
வித்தகனைகண்டறிந்து விளம்பவெந்தனாலோமோ மேகமாய் மாதலியுந் சாதமாம்
தேசின்பரிக்கோத் தாயோடித் தேசகாலமாச்சுதென்று செப்பிடவே மனம் ஒப்பிடவே
கோரருபமுள்ளவரிக்குக் கொற்றவன்வடமேயபுரம் கோவுறும் அதிபதியும் ஒன்றும்
காற்றுக்கேட்டிடமனக்கலங்கேற்றயிக்குதென்ன காரணம் முன்வினைதீரரணம்
செகித்திடவுமையதென்னுடனைக்கச் செப்பிறார்பார் மிலை பற் பலவே
பாலோகட்டுவந்தோம் பாயகாருத்தெய்வலோகம் பாராய் உற்றுச் சேராய்



ஆலயஞ்சோலைகளும் அந்தணர்கள் வீட்டிதலம் காசமும் பலஸிங்காசமும்
மாயையெழித்திட்டவித்த மாதவர்கள் வீற்றிருக்கு மடமும்- அவர்கள் கனநிடமும்
தேயமுள்ளதேவர்களின் சீனகமமனையிருக்கும் நீதமும் கட்டின்வி-ஞேநமும்

பொதுவிருத்தம்

மாநிலம்புகழ்பெற்றோர்க்கு மன்னனுக்கிவ்வாறேதிந் தேனவிர்சுவர்க்கலோகத்தினை வளம்வந்துயின்று ஏனைவாசமேதிரமதிருவிழிப்போக்கத்தேவர் கோனுமன்னவனுக்கூடிக் கொலுவினில்மேவினரே

தெய்வலோகக்கட்டியன் சொல்வசனம்

அகோ தெப்படியென்றால் - இப்படியாக விண்ணுலக இயமு றுகியதேவேந்திரனும் மண்ணுலகயிந்திரனாகிய அர்ச்சுனனும்க தி லவேந்தர்முப்பத்துமுக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்ணாயிரமா னிவர்கள்- கின்னர- கிம்புருடர்- கருடர் காந்தருவர் சித்தர்வித்தியா தரர் மேனகை ரம்பை-ஊர்வசி- திலோத்தமை இவர்கள் மகிழ ஒ ளியில் சிறுத்தபெரியமுத்துக்களைப்பெற்ற சங்கநிதி- பதுமநிதிகற் பகவிருட்சம் விளங்கியிருக்கின்ற நவரத்தினசிங்காசனத்தில் இருவ ருவரும் வீற்றிருக்கிறவிதங்காண்க

கொலுவிலிருக்கிற - தரு இராகம் - நாதநாமக்கிரியை - அடதாளம்

பல்லவி.

கொலுவிருந்தனனே
கொலுவிருந்தனனே. இந்திரனே

அநுபல்லவி.

பலபலமணிகளைப் பதித்தெழுந்திருந்ததிமே
பாக்கசிம்மாசனத் - தாங்கவேயர்ச்சுனன் (கொலு.)

சரணங்கள்.

அண்டர்கள்- தாமு - அத்திட்வசுக்க ளானவர்- சூழ
தண்டுமண்டலங்கை கொண்டவர்களும்
அண்டிவாழிகள் சொல்லித் தண்டிகையிட்டிறங்கி
அவர்களு மேவ - உல்லாசங்கொண் டருகினிற் றுவ

அதிசயமிதுவெனத் துதிசெயிந்திராணி
பதிமனமகிழ்உறைப் புதனையபாகவிஜயன் (கொது)
மின்னார் - கூட - எழிமிருந்த
மெய்புருடர் பாட
கன்னெறிகருடகாந் - தருவர்சித்தர்வித்தியர்
நர்முரவரனவர்க - ளொருபுறத்தொருக்கியே
பெயமென்று - சமேத்தி - இந்திரசவன்
றனக்கருப்பு - கழ்ச்சி
தந்திடவேண்டுமென்று - செந்தெயெரிமேலெவண்ணி
வந்தயபக்லோலம்பொழி - நிடுமிக்கீசயன் (கொது)
வேதங்கள் - கூற - சேயிரேந
வேடிக்கை - மீர
காதமனதுயேவுறு - நாதருமங்கிடநன்
விதவிநோதமனோ - நிதமெய்திடவந்த
அந்தமி - முழக்க - செயபேரிதொந
சொப்மேள - வழக்க
சுந்திவௌருங்கச்சேனை பற்றிவறவும்விட
சொற்றவன்புகழ்க்குற - முற்றுங்கேட்டருச்சுனன் (கொது)

பொது-விருத்தம்;

மணிவிலைச்சனந்திவ்வாறு மருவியேக்காலந்தன்னில்
அணிகொள்ளும்வில்மார்த்தாண்ட னுடலினைக்கண்ணுற்றுவிட்ட
அணியுள்ளதேவதூதர் சுருக்கினிற்சென்றேயிந்திராய்
கனிகைக்கயர்புலோமிசைக்கு களிப்புடன்சொல்லுவாரே

வசனம்

அக்கோதெப்படியென்றால் இந்திராஜனும் அர்ச்சுனனும்கொலுவிருக்கும்போது அர்ச்சுனனுடையஒளியையும் பலபராக்கிரமத்தையும்பார்த்ததேவதூதர்கள் இந்திரன்மனைவியாகிய புலோமிசைக்குப்போய்ச்சொல்லுகிறவிதங்காண்க.

தூதுவர் இந்திராணிக்குச்சொல்லுகிற - விருத்தம்.

தேவநாயகன்மகிழ்ந்து செப்பிக்குமணியேபோற்றி
ஆவலாக்கயிலைசென்று அன்னவர்வருகும்போது
புவலோகனத்தேரிற்பொற்புறவைத்துக்கொண்டு
இவிராமாய்வந்தோர் சிங்காசனமிருக்கின்றரே

வசனம்

சாணக்குசணந்தாயே எங்களாண்டவராகிய தேவேந்திரமகாரா



ஜனனவர் கைலயங்கிரிக்குப்போய்வரும்போது யாரோ ஒருமானிடனைத் தேரில்மீதுவைத்துக்கொண்டுவந்து இருவரும் ஒருசிங்காசனத்திலுட்கார்ந்திருக்கிறார்கள்தாயே.

இந்திராணி-தூதுவர்களுக்குச்சொல் விருத்தம்.

தூதரேகேளுமென்தன் றோன்றலாரழைத்துவந்த
புதல்வனாற்பேரும் பொருந்தியவிடமுமெய்யிற்
போதவேயுற்றதிரும் புஜபலவீரமேன்மை
சதலாம்விசாரித்திரா பெத்தனுக்குரைசெய்வீரே

வசனம்,

கேளுங்கள்தூதர்களே-என்னுடைய நாயகர் அழைத்துவந்த மானிடன்பேரும் அவனூரும்இருப்பிடமும் சௌரியபராக்கிரமமூலியமும் விசாரித்தீர்களா சொல்லுங்கள்தூதர்களே

தூதுவர் இந்திராணிக்குச்சொல் அகவல்- இ-ம்-எதுருகுலகாம்போதி

அம்மணிகேளாய் அன்புடனுங்கள்
செம்மையாய்க்கேட்ட சேதியைச்சொல்வோம்
அவனதுதிருப்பெயர் அர்ச்சுனனாம்
சிவன்கையிலுற்ற திகழ்பாசுபதத்தைப்
பெற்றவனும்உன் பிராணநாயகர்க்
குற்றதேகத்தி லொளியிலையுருக்கி
வார்த்ததுபோல வடிவமும்பொருந்தி
பார்ப்பவர்க்கொன்றாய்ப் பவனிவந்தோன்
தேவர்மிசையிற் சிறந்தவனும்
நாலுலோக நம்மிலடக்க
தபத்துறு கிருஷ்ணர்தன்னுடன்பிறந்த
சுபத்திரைக்கணவனும் தூயோன்மைத்துனனும்
திரிபுவனமுமோர் செஷவத்தினிலழிக்க
வரமதைப்பெற்ற மகாதீரனென்று
சொல்லுவதன்றித் துரையிந்திரபுயன்
செல்வப்புத்திரனெனச் செப்பினோம்மா

இந்திராணி-தூதுவருக்குச்சொல்-கொச்சகம்

நெடுநாளாய்க்கண்டறிந்த நேசம்போலவனுடைய
வடிவையுபுஜபலவீர வல்லமையுஞ்சொல்லியபின்
முடிவில்மன்னன்சேயெனவு மொழிந்ததனுலியான்பாக்க
கதிவில்வருமோ வீக்கள் வனகசபைபோச்சேர்வீர்

வசனம்

சேனாபதிகளாதிகளே நீங்கள் தேவேந்திரனை அர்ச்சுனனுடைய பழமைபெருமைகளால் அவனுடைய அரிய பெரிய வீரர் மகிமையைச் சொல்லக்கடவீர்கள் நானுடைய தேவாசுரருக்கும் புத்திரனான அர்ச்சுனனின் புகழ்பால் நானும்அவனைப்பார்க்க இதோ வருகிறேன் நீங்கள் சொல்லியபோயச்சேருங்கள் தாதிகள்

தாதி இந்திராணிக்குச்சொல் வசனம்

சாமி சரணம் அப்படியே போய் வருகிறோம் அம்மா

இந்திராணி சேடிகளுக்குச்சொல் விருத்தம்

பரிவுடனுனைமெய்நாயகத் தீங்கிலுள்ளோயானகு
பெரியமாப்பிள்ளையர்ச்சுனனைப் பெண்களே சொல்லக்கேளீர்
அருமையாமெத்தனமைந்த னையிவனிருக்கின்றாரும்
திருமுப்பார்க்கவேண்டும் விரைவாய்க்கொண்டுவாரீர்

வசனம்

சேனைக்காரப்பிரசிதமான நம்முடையகுமாரனுகிய அர்ச்சுனன்கொண்டுவந்திருக்கிறாரும் அவனைப்போய்ப்பார்க்கவேண்டும் ஆகையால் என்னுடைய முத்துப்பல்லாக்கைகொண்டுவாருங்கள்பெண்களே

தாதிகள் இந்திராணிக்குச்சொல் கவி

சொல்லிமுன்னார் அம்மையடிகளிரும்
வல்லியோடிடையணிமுத்துச்
பல்லக்கையெடுத்துப் பரிவுடன்வந்தோம்
வல்லிபோய்வந்து விரைவாயே

இந்திராணி கொலுவில்வந்ததைக்கண்டு

அர்ச்சுனன்சொல்போற்றி விருத்தம்

அன்னையேபோற்றிபோற்றி அருந்தவஞ்செய்தவிழிதானை
கன்னியேபோற்றிபோற்றிக் கனகஞ்சேர்திருத்தாள்போற்றி
மன்னியதவர்க்கரசே அரையிலுங்கிடையேபோற்றி
வனையாட்கொள்வந்தயின்றவியே போற்றிபோற்றி

இந்திராணி- அர்ச்சுனனுக்கும்- சொல்-வாழி விருத்தம்

சொன்னவில்லவன்வாழி சுந்தரபுத்திரனேவாழி
வன்னியுமைமைந்தனாய் வெற்றியின் பார்த்தனேவாழி
கண்ணேக்கனிக்கனையுந்த சாமியேவாழிவாழி
அவ்வடர்ச்சனம்பெறுமைந்த அர்ச்சுனாவாழிவாழி

பொது விருத்தம்

இப்படியதிந்திராணி பெருமுனமைந்தனைக்கண்டு



வப்புதிவாழ்விடு மருவியவர்சபையோர்யாரும்
செப்புமுமன்னமுலையிடு திகழ்ச்சபைசேர்ந்தபின்பு
ஒப்புறுநடனமாதர்க்கோதுவானிந்திரன்றனே

கட்டியக்காரன்சொல்-வசனம்

அசோதெப்படியென்றால்இந்திராணியானவள் அர்ச்சுனனைக் கண்டு பலவாழிசொல்லிப்போனபின்பு இந்திரன்முதலியயாவரும்அர்ச்சுனனோடு போஜனமருந்தி-சந்தனகந்தம் கஸ்தூரிகளணிந்துதாம்பூலந்தரித்துச் சபைக்குவந்து சேர்ந்தபின்பு தேவேந்திரன்நடனமாதர்களுக்குச் சொல்லுகிறவிதம்காண்க.

இந்திரன்-நடனபெண்களுக்குச்சொல்-விருத்தம்.

கயலைப்போல்விழியுங்கருங்குயிலைப்போர்ச்சொல்லும்
பயலைப்போலையுடைந்தீர் பொருந்துமின்றுரைகேளீர்
இயலிசைமேனதானம் எத்தவேனதியிற்சேர்த்து
நயமுறும்விஜயன்காண நடனங்கள்செய்குவீரே

வசனம்.

மீனைப்போல்விழியுங் கருங்குயிலுக்குச்சமதையானசொல்லும், மேகதைப்போற்குழந்த கூந்தலும்பொருந்திய நடனமாதர்களே கேளுங்கள் நம்முடையமைந்தனும்இச்சபையிலிருக்கிறபட்டயாவரும் ஆச்சரியப்படும்படியாக வாத்தியம்பாடியும்ஒன்றாய்ச்சேர்ந்துநடனஞ்செய்யவேண்டும்பெண்களே.

நடனப்பெண்கள்- இந்திரனுக்குச்சொல் - சொச்சம்.

கன்றுவென்றதுமொருங்கண்டோரியப்புறவும்
மன்னுவகோர்மெச்சிடவும் மணிமுடிபார்த்தனுமகிழ்விச்
நன்னுறவேகொண்டிடமிருங்களையுநயனும்
பண்ணுறவேசேர்த்துப் பரதநடஞ்செய்குவோமே

வசனம்

சர்ணஞ் சரணஞ் பொன்னுலகத்தரசேநாங்கள்சொல்லியபிரகாரம்யாவருங்களிப்படையவும், அர்ச்சுனமகாராசன் வியப்படையவும் பரதநாட்டியஞ்செய்கிறோம்ஸ்வாமி

பெண்கள்-நடனஞ்செய்தல்-தரு-இ ம-ஸ்வரம்-ஆதிதாளம்.

பல்லவி,

இந்தநல்லகாலம்-வாலின்னஞ்சாயம்

அநுபல்லவி.

மதுவாரளிவிழியே மருவுமினிமொழியே　　　　இவ
நிறைந்திடுமே　　　　பூரித்தன்று　　　　யாம

சிறந்தவிடையா ளோடே-சேர்ந்தெழிலாய்க் கூ இதா
மெத்தவும் வகடி-மெலிந்தும் போட
சுத்திவாரதே நாடி-துரையேக்கொண்டாடி இதா
கைதனை நீட்டிக்-கனநயக் காட்டி
வமயிழு போட்டி- வருவாய்கள் ளூட்டி இது

ஊர்வசி மற்றப்பெண்களுக்குச்சொல்- விருத்தம்

ஆடியுட்பயனென்றில்லை அரியதோரிசையைக்கூட்டிப்
பாடியும்பயனொன்றில்லை பரிவுடனீங்களெல்லாம்
கூடியேபாடினால்நாம் சோர்வையாயாடிமாலைச்
சூடியமன்னர்சித்தை சுகமுறச்செய்குவேனே

வசனம்

கேளுங்கள்அம்மா-நீங்கள் இப்போது ஆடும் ஆட்டத்திலும் பாடும்பதத்திலும் யாதொருபலனுமில்லை ஆசையால் நீங்கள்என்பின்னால்நின்றுபாடிவருவீர்களானால் நானாடுகிறேன் அந்த ஆட்டத்தில் யாவரும்என்முன்பாகவாடிவீழ்வார்கள்பாருங்களம்மா.

நடனப் பெண்கள் ஊர்வசிக்குச் சொல் வசனம்

ஆனால் அப்படியே செய்வாயம்மா

ஊர்வசிநிர்த்தனஞ்செய்கிற-தரு-இ-ப்-சங்கராபரணம் மிஸ்ரதாளம்

பல்லவி

தாளமேளமொன்றாய்க் கூட்டடிவிணை
தன்னைபெருந்தாநன்றாய் மீட்டடி

அநுபல்லவி

வேலையெரித்த வேமலருக்கண்ணோய்
வியப்புற்றிட சரிசமபதநிச
லயபற்றிட தநியிதுபாவச தாள

சரணங்கள்

சுற்றியிருக்கின்ற ராசரும்-அநேக
ரவலவிருக்குமீசனே சேரும்
நநிவருவதா-பெருந்துசெய்தோலகமே
ரதத்துத் - திமி -திமிதவெம்தரி
வித்துச்சில - குருள்வரசொலசரி தாளு
ஐக்கணைக்கிழவனும் வருகிறு-எனக்
குரனமதிதனைத் தருகிறுன்
செக்கையினிஸ்வின்லைச்-சேர்ந்தவருமனைச்
சித்தம் பிரமை - கொண்டிடவேகன
தத்திமி தகதிமி - ததிங்கணத்தோமென தாள



சிரக்கம்பம்விஜயனும் பண்ண - மற்றத்
தேவருஞ்சபாசென்றே யெண்ண
வரத்திலுயர்ந்ததவ மாதவருப்புகழ
மணிசதங்கைகள் - கலகலென்றிட
அணியுமணிபணி - சலசலென்றிட தாள

இந்திரன்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

மாசிலாமணியேயிந்த மடவாளைசனிலிருக்கும்
பூசிதமானயெம்தன் புத்ரனேயிந்தமாது
விசியசைநொடிப்பும் விருகழல்செயதும்நின்று
வாசமாய்நடனஞ்செய்த வகையைடமுரைசெய்வாயே

வசனம்.

கேளும் எனதருமைக்குமாரனே நமதுசபையில்இந்த ஊர்வசிநின்று நடனஞ்செய்த நொடிப்பும் கண்சமிக்ஞையும் பாடலும் எப்படியிருக்கின்றது சொல்லும் அர்ச்சுனா.

அர்ச்சுனன்-தேவேந்திரனுக்குச்சொல்-விருத்தம்.

வேந்தனேபோற்றியிந்தமின்னிடையாளுக்கீடாய்ப்
பாந்தமாயாடுவாரும் பண்புடன்பாடுவாரும்
வந்தியதைநொடிப்பும் இருநுண்ணின்நடைநடிப்புந்
சாந்தமாயிருப்பின்னு ஜகத்திலுமில்லைதானே

வசனம்.

சரணஞ் சரணம்பிதாவே. இந்தநடனமாதுக்கிணையாக பாடுவாரும் பாவநாட்டிய பாடுவாருங்கைபேர்ந்த விசேலதொடிப் பாரும் இருகண்ணுங்கம் பரம்போலக்குமர்றவாரும் இந்தவுலகிலுமில்லை மற்றபெற்றவுலகிலுமில்லை மகாராஜனே.

தேவேந்திரன்-அர்ச்சுனனுக்கும்-தேவர்களுக்கும் சொல்விருத்தம்,

ஒவ்வுமிவன்மைதானீ புகழ்ந்ததால் மெய்மகிழ்ந்தேன்
செவ்வையாயருகிருக்கும் தேவரேசொல்லக்கேளீர்
நிவ்யமாய்நடனஞ்செய்த திருவருமாதர்கேட்கும்
எவ்விதபரிசுத்தந்து யின்புறவனுப்புவாயே

வசனம்,

கேளுஞ்சமர்த்தனே - நீசொன்னதுசரிதான் சபாஷ்மெய்மகிழ்ந்தேன்- அருகிலிருக்குந்தேவர்களே இந்தநடனமாதர்களுக்குவேண்டிய ஆடைவாபரண முதலாகியதும் கொடுத்துக் சந்தோஷமாக அனுப்புவீர்கள். தேவர்களே,

தேவர்கள்தேவேந்திரனுக்குச்சொல் வசனம்,

அப்படியேகொடுத்தனுப்பிவைக்கிறோம் மகாராசனே

தேவேந்திரன்சபையோருக்குச்சொல்- விருத்தம்.

பாணுயுடமைந்தசந்திரன்பாங்குடனிக்கும்வேளே
யானதால்முனிவரேயிப்புறஞ்சுரம்மேவீர்
தனியிலவளவளரைமிருப்பிடஞ்செலுநாளோ
கானமாய்கொளுங்கூட்டிக் குடித்திவர்விருமீரே

வசனம்;

சனத்திராதிமுனிவர்களே-தேவர்களே-சூரியன்மறைந்தாசந்திரனுதிக்கிற சமயமாகையால் அவனவன்இருப்பிடஞ்சேர்ந்து நாளையுதயத்தில் காலுக்குவரும்படியாய்ச் செலவுபெற்றுக்கொள்ளுங்கள் சபையோர்களே.

சபையோர்கள்சொல்-வசனம்,

அப்படியேபோய்வருகிறோம் தேவேந்திர மகாராசனே

பொது - கொச்சகம்.

கொலுவிலுள்ளோர்போனபின்பு கோதிலெழிலாயிந்திரன்
வலுமையுள்ள விசயனோடு வல்மாளிகைவீட்டடைந்து
சவிபவனனையுஞ் சாதநோயினடைபின்பு
இவ்விடமின்காவலர்க்கிந்திரனுஞ்சொல்வானே

கட்டியன்சொல்-வசனம்,

அகோதெப்படியென்றால் சபையிலுள்ளோர் யாவரும்அவரவர் இருப்பிடம் போய்ச்சேர அர்ச்சுனனைத்தேவேந்திரன்தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துவந்து அநுபவன்டையின்பின்விட்டில் ஏவலாளிகளுக்குத் தேவேந்திரன் சொல்லுகிறவிதங்காண்க

தேவேந்திரன்-வீட்டின்ஏவலாளிகளுக்குச்சொல - விருத்தம்,

ஏவலாளிகளே கேளீர் இணையிலாதெந்தன் மைந்தன்
ஆவலாய்நித்திரைசெய்யக் அரண்மனையரையிலோர்நல்ல
நேராயச்சோதித்துத் திருப்பள்ளிக்குமேற்றிப்
புனிதசப்பிரமஞ்சம் போட்டிடல்றருவீரே

வசனம்,

ஆடா அடாஆசாரவாசல்ஏவலாளிகளே நம்முடைய குமாரன் அர்ச்சுனன் சயனித்துக் கொள்ளும் படியாக ஒரு அரமனையலங்கரித்து ரத்னாப் லஸ்தர் சேட்டில் வால்சேட்டில் முதலானதும் திருப்பள்ளிக்கு தரிச்சப்பிரமஞ்சத்தைப் பூவிலும் சிங்காரித்துக்கொடுப்பீர்கள் ஏவலாளிகளே,

ஏவலாளிகள் இந்திரனுக்குச்சொல்-கவி,

அண்ணலேதாங்க-ளனைத்திரும்படியே
உல்லமைச்செய்துமஞ்ச நுக்கமிடப்போம்



வசனம்

சாமிசரணம் அப்படியேசெய்துக் கொடுக்கிறோம்போய் நலகத்தாமே

பொது- விருத்தம்

விட்டிலேச்சிங்காரிக்க விசயனும்படுத்துநித்திரை
வாட்டமில்லாமற்செய்ய மங்கையூர்வசியுமுன்னம்
ஆட்டத்தில்விசயன்பேலே ஆசைகொண்டதனைத்தீர்க்க
நாட்டமிக்காலமென்றே நயக்கொண்டுவருகின்றாளே

கட்டியன்சொல் வசனம்

அகோசெப்படியென்றால் இந்தவிதமாக அர்ச்சுனன்சப்ரமஞ்சத்தின்மேல்சயனித்துக் கொண்டிருக்கையில் ஊர்வசியானவள்முன்னாலே சபையில் அர்ச்சுனனுடைய அழகைக்கண்டு ஆசைகொண்டு இதுதருணமல்லவென்று விடுதியிற்சென்றவளதைப்பட்டு இரவுவருகிறவளாக்கும்காத்துக்கொண்டிருந்து-அர்ச்சுனனிடத்தில் வருகிறவிதங்காண்க

ஊர்வசிவருகிற-ஒரடி-கரு- இ-ம்- பந்துவராவளி- ராகம்- ஆதி

பல்லவி

உச்சிதஅன்னநடைபையொத்த விச்சித்திரமுள்ள
ஊர்வசியிதோவந்தாள் உவமைமுன்
ஊர்வசி யிதோவந்தாள்

அநுபல்லவி

பச்சைப்பசுங்கிளிபோற் பகருமொழியுடைய
பாவையர்களுங்கண்டு ஆவல்கொண்டேயிடைய
பத்தரைமாற்றுப் பசும்பொனிறத்தினை
யுற்றபாஞ்சித சித்திரபதுமைபோல்
பத்திலாதவெழி முற்றவள்மென்மேல்
பெற்றவேங்கலை கற்றவர்ச்சுனன்பால் (உச்சித)

சரணங்கள்.

சிக்கறச்சிவிங்கிர்த்துச்-சேர்த்திறுக்கியகொண்டைத்
திகழ்வனப்பூவின் வாசமும் சந்
திரனும்நாணத்தக்க சிறுபிறைபோன்றநெற்
றியிவிட்டபோட்டிங்கிர காசமும்
பக்குவமென்றேஅயிலைப் - பகருவார்கள்விழிகுப்
பாக்கோஇவள்விழிபி னேசமும நாசிப்
பற்றியென்றேபற்றனை - பகருவார்களதொப்
பாமோஇவள்பல்லின் வாசமும்

சர்க்கரைப்போன்றமொழி தனைக்கேட்கத்தேவருந்
தவத்திலிருந்தவருஞ் சந்தோஷமடைந்திட
சந்தன்புனுகு- கதம்ப கஸ்தூரிகள்

நடவி விருப்பொத் - குடமெனுங் கொங்கைகள்

தைச்சிறக்கிபமுத்தக். கைச்சடைக்குழல்கவிழம்
தனைக்கடித்தடிக்கடி- அர்ச்சுனனையெல்லனி
கருணைதருணமிது- சரணஞ்சரணமென
தத்திபெத்தி யுத்திசொல்லி நத்திப்பற்றி முத்திப்புல்லி
தாவவுக்குயில்கின்னைக். கூவவுங்காமமீறி
மேவவுமருவிட-. ஆவல்கொண்டேபுகழ்
சக்கையில்செக்கையின்-தங்கியவளாகளி
லக்கிடவுப்புகழ்- தங்கிட்டுவிற
திங்கள்தனைக்குடை மங்களமாய்கொளும்
ஐக்கியக்ராஜன்- இக்கெனைபிகம
யங்கிடவேசெய்திடி- டுங்கலங்கங்கனை
புங்கன்டனைசெய-ங்கலைருடனெந்தன்
தனஞ்செபமுற்றிட- தனஞ்செயனெனவந்த
மனங்களிப்புற்றிட-கனநயமுடனமைந்த (உச்சிதம்)

ஊர்வசி - அர்ச்சுனன் - பள்ளியறைக்குட்சென்று.

சொல்லுகிற - கொச்சகம்

மன்னுமொளிசேர்சப்ர மஞ்சமதிலெனையணைந்து
நன்பயமதாயிருந்து நான்கொடுக்குங்காமர்சந்
தன்னைப்பருகித்தாம் பூலநுகர்ந்திரவைத்
தன்னியொழித்தால்வேறு துணையெனக்காரென்கோவே

வசனம்

கேளும்மகானுபாவா இப்பேர்ப்பட்ட சப்ரமஞ்சத்தில் என்னையணைந்து நான்கொடுக்குங்காமரசமாகிய தேனையுண்டு தாம்பூலந்தரித்துபகைவருகிடஞ்சபாணனை நெருங்க வொட்டாம லோட்டிஇந்த இரவையொழிக்காமல் சயனத்திருந்தால் எனக்கார்துணையுண்மையிடமன்னவனே.

இதுவும் - ஊர்வசிசொல் - சிங்காரபத்தியம்-இ-ம்,கண்டசு

நீநிசேர்தனதனை நிதானபுருடனே
நீபெருந்தென்னவலை நீக்கிடாயோ
பாதகன்றஞ்சமா பாவிமன்மதன்விடும்
பாணத்தின்மெலியாது பார்த்திடாயோ
காதல்மென்மேலாய்ச் சருங்குயிற்டாவிலித்



சந்திடுமோசையைக் கவிழ்த்திடாயோ
வேதனையெய்திநோ விசுறித்தென்றல்
வேளையிற்சேர்த்தென்ன விட்டிடாயோ

செல்லுந்தோறுநீ திகழும்ர்வங்
கோல்முற்றுடுதே குறிக்கவமோ
லீலைகள்செய்பவான் பிள்ளையலவோ
காலதாமதஞ்செய்யாதெ செய்யாதெகமலநயன

ஊர்வசிசொல்- மோகந்- தரு- இ- ம்- செஞ்சுருட்டி- தாளம்- ஆதி

பல்லவி

துரையேயின்னமென் மீறில் வர்மமா - இந்த
தோகைபடும்வார்த்தையுங்னைவிட்டு வீண்போகுமா

அநுபல்லவி

வரையைநிகர்நிலதோளனேபுவி-மன்னர்வணங்குமாளனேபாவி
மாரன்வாசையைத் தீர்க்காயா - உந்தன்
மனம்வைத்துக்கடைக்கண் பார்க்காயா - ஆ - ஆ
வஞ்சகமேயிது - தஞ்ச மென்மீறு
கொஞ்சமிரக்கங்கொள் - ஞ்சரணிட்டேனு - (துரையே)

சரணங்கள்

மாமரக்குயில் வர்துவந்தருகிற கூவ - திகழ்
மதியுந்தணல்போலமங்கைமேல் மூள்புமேவ
நேமமுடனேநோக்கிடுந்தனைத் தாவ - நான்
நினைத்தவந்தனை நிவர்த்திசெய் - மானுபாவ
நாடேபுவிமாடனேபுகழ் - சோமனேநிகர நேமனே இந்த
தையலாள்முகத்தை நோக்காயா - உந்தன்
தனத்தைப்பிடித்தப்பாணத் தாக்காயா - ஓ - ஓ
சாபாணுக்கிரக - சாமாத்திய கன்ய -
பூபாலனக்கெழிந் பொருந்துமாபுண்ய - (துரையே)

கட்டியணைத்துக்காலொடுசொல்லை மாட்டி - கற்
கண்டுமொழிசங்கரும்பெருகப்பா ராட்டி
பொட்டுநாகலஞ்சி புரிந்திடவேகன் = மூ:டி
பொருந்திப்பொருந்திபரிந்திடச்செய் - நாட்டி
எட்டிசைதனிதுயிலருங்கீர்த்தி - மட்டிலாதகொண்ட மங்கையற
டிரு.

இறைவனை இரவுக்குத் தீம்யா - என்னை
எமென்றுகேளாமலிருப்பது வம்மயா - ஓ - ஓ
இத்தரையிலாரும் உற்றதுரைத்து முன்
சித்தமிரங்காது மெத்தனமையாமோ வேல் - (துரையே)

மதுஜவிகவுருப்படியில்ல தொடேர்து - எந்த
வகையிலுந்தேர்ந்த வல்லவனெனப்பே ரெடுத்து
இசைமிகும்பெறு மின்பமெலப்பதைக்கொடுத்து நீ
இயற்றிறவடிக்கேவல்செய்வேன் பண்டகத்து
மதியில்லவரானவருனை - மருட்டுதினைமாயநாரா ஆ - ஆ
வஞ்சிநெஞ்ச மமிழவொருசொல் சொல்லலாகாரா - வஞ்சிகள்
மகிழுமத்தை மலர்த்திசெய்யவகைசெய்யப்போகாதா - ஓ - ஓ
மலரம்பனிட்ட மிதிவோ - யெல் குலத்
தலைவர்முன்செய்த - சதிவோவையம் புகழ் - (துரையே)

பொது - விருத்தம்.

மாதுவூர்வசியுமிந்த வகைசொல்லிக்காமமேல்கொண்டு
காதலிதுமன்றவாடுங் காலயில்வேவனியொத்த
நீசனுந்திடுக்கிட்டேதல் நிதநிரைவிட்டெழுந்து
போர்வேதாயியென்று போற்றுவான்சாந்தவேனே

கட்டியன்சொல் - வசனம்.

அகோதெய்ப்படியென்றால் ஊர்வசியானவள் இவ்வாறுகாமத்திற்கட்டுண்டுவாடித் தவிக்குங்காலத்தில் அர்ச்சுனன் நித்திரைதெளிந்தெழுந்து சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து சொல்லுகிறவிதங்காண்க

அர்ச்சுனன் - ஊர்வசிக்குச்சொல்போற்றி - விருத்தம்,

மின்னல்போலிடையும் நல்லமேனியுங்கொண்டாய்போற்றி
கன்னலார்சொல்லுக்கேற்ற கனமுமுடையாய்போற்றி
நன்னிலையுடையவெல்லோர் நாயகமணியேபோற்றி
என்னிடம்வந்தகாரியமெடுத்துச்சொல்தாயேபோற்றி

வசனம்

வானத்திற்பிரகாசிக்கும் மின்னலைப்போன்றஇடையும் கற்கண்டையொத்தசொல்லும் பொருந்தியவளே எனது மூதாதையாகிய ஆயுதலைவர்க்கு மனைவியாகிய அம்மணி நீ என்னிடம்நின்றுஇந்த அர்த்தராத்திரியில்வந்தகாரியமென்னசொல்லுவாய் அம்மணி



ஊர்வசி - பிரலாபப்படுகிற - கண்ணிகள் - இ - ம் - காம்போதி ஆதிதாளம்

காதல்கொண்டேயிவனைக் கலந்தணைந்திடவேண்டிக்
கருதிவந்தேனே பாவி தெய்வமே
மாதேயென்றுசொல்லாமல் மாதாவே யென்றானே
மாயமோஇது பாவி தெய்வமே
பகற்காலமெல்லாம்வாடி ராக்காலம்வருமட்டும்
பார்த்துவந்தேனே பாவி தெய்வமே
நிகர்க்குமோஇவன்சொன்னது நீதியோவென்றுருகி
நிற்கவைத்தாயோ பாவி தெய்வமே
எந்நாள்சொன்னதெல்லாம் சித்ரக்கதையாச்சே
யென்னதான்செய்வேன் பாவி தெய்வமே
சந்திரியவன்மேல்நானும்வைத்த ஆசைகளெல்லாம்
நடுக்கடல்தீபம ஆச்சே தெய்வமே
கல்லகிற்கண்டதுமுதல் கலக்கநினைத்தநாற்றிர்
கரைத்தபுளிய ஆச்சே தெய்வமே
என்னினைப்பெல்லாமரம் எதிரொடிந்துவிழுந்
திட்டசெய்கைய ஆச்சே தெய்வமே

அர்ச்சுனன் ஊர்வசிக்குச் சொல் - விருத்தம்

தெய்வமேயென்றுசொல்லிச் சிந்தையில்நினைத்திப்போது
செய்வதுமென்னவென்று திகைத்தென்மேற்காமங்கொண்டு
வைவது முறையோவின்ற மாதாவுக்கிணைநீவீணைப்
கைநொடிப்பாவப்பாவங் கட்டிக்கொள்ளாதேபோபோ

வசனம்

கேளாய்தாயே தெய்வத்தைநினைத்துச்சிந்தையுருகி இனியென்னசெய்வதென்றுயோசித்து என்மீதிற்காதல்கொண்டு வீணாகத்திட்டுவதுநீதியா நீஎன்னைப்பெற்றமாதாவுக்குச்சமமையாச்சுதே வீணாகக் கைநொடித்துப்பழிபாவத்தைக்கட்டிக்கொள்ளாதே அம்மணி.

ஊர்வசி - அர்ச்சுனனுக்குச்சொல் - விருத்தம்

பாவத்தின்பலனைக்கண்ட பராக்ரமவானியென்று
அவர்கோலும்பார்த்தேற்று அணைந்திடவந்தயிந்தப்
பூவையைத்தள்ளிவிட்டால் புண்ணியம்வேறுண்டோமோ
காவலர்க்கடேபெந்தன் கணவனேசொலுவீரே

வசனம்

பாவத்தின்பலனையாராய்ந்த பராக்ரமவீரனியென்று கேள்விப்பட்டு அதிக ஆவலாய் உன்னுடன்கூடி இன்பமடையவந்தயெய்

னைத்தவ்விவிட்டால்இதைவிடபுண்ணியம்வேறேயுண்டோ சொல்லு மினங்கிளாவரஸுயா.

அர்ச்சுனன் - ஊர்வசிக்குச்சொல் - விருத்தம்

புகலுவேன்றுவேகேளாய்ப் பொருந்திவாயப்பாவின்
தனமைபைத்தாலிவட்டுத் தன்மனையாளையன்றி
மனையிசேர்வேறோர்மாதை மருவிடக்கூடாதென்று
இகலிலாவேதசாஸ்திர மியம்புகின்றதிதிடாயே

வசனம்

கேளும்பாவைகாம்பாவின்றுதருமையான தருமக்கும் தாலி கட்டினமனையாளையன்றிவேறொருமாதர்களைச்சேரக்கூடாதென்று சொல்லியவேதசாஸ்திரத்தைநீகேள்விப்பட்டதில்லையோதாயே.

ஊர்வசி - அர்ச்சுனனுக்குச்சொல் - விருத்தம்

சாத்திரங்கற்றறிந்த தவத்தினைவெல்லாவர்காமம்
பூதமடைவையரைச்சேரம் புலம்பிவேதவிதிகேளார்கள்
நேத்திரத்தர்லேசுவமும் நீதலையுருடனென்று
சாத்திரக்கொண்டவந்தால் சுகமெனாசிநீக்கலாமோ

வசனம்

சாஸ்திரத்தை ஆராய்ந்த தவத்தில்வல்லவர்களெல்லாம் காமம் பொருந்தியமாதர்களைச்சேரவேண்டுமென்றுவிதிக்கிறார்கள் அதை நம்முடையகண்ணில் பிரத்தியட்சமாகக்கண்டிருக்கிறேம் ஆகையால் நீஎவ்வர்ணமானபுருடனென்றுமனம்புரிந்தவத்தால் சுகத்தைச் சொல்லிநீக்கிவிடுவது தருமமானதல்லவே.

அர்ச்சுனன் - ஊர்வசிக்குச்சொல் - விருத்தம்

நீக்கிடவென்றுலாமோ நிலையற்றமைந்தருக்கே
பாக்கியவதியேவிண்ணுப்புதியென்மேல்மையல்பாகே
நோக்குமுன்கிருபையாலே நாலணவெம்தற்சொன்னேன்
யோக்கியவதியேபுராணபையதாட்போற்றிச்சொல்வாய்

வசனம்

கேளாயம்மணிஉன்காதல்நீக்கவல்லவனு - நீபெற்றதப்பிள்ளை யாக்குதே விண்ணாளம்மேல்பதியவவர்திடாதே நன்னுடையகிரு பாகடாக்ஷத்தினுல் நாவின்முறைமையக்கிச்சொன்னேன் யோக்கிய ப்பொருந்தியஅம்மணி சரணஞ்சரணம்போய்வரலாத்தாயே

ஊர்வசி - அர்ச்சுனனுக்குச்சொல் - விருத்தம்

கொஞ்சமிக்கமும்மில்லாச்சித்தனுகி
கூடாதென்றேயுறைத்தகோதைக்கண்டதுல்
எஞ்சலில்லாதவச்செருக்கோபராக்கிரமத்தின்



இயல்போவுன்னழகினுக்குயிணையிலாத
வஞ்சியென்றேமறுத்துவிட்டாய்நன்றுகட்டும்
வரன்விஜயாவுந்தனக்குப்பக்கம்வந்து
மிஞ்சிடவும்பேடியுருவாகவுந்தான்
வெகுகாலமிருந்தேன்பெற்றுக் கொள்விரைவிற் செல்வேன்

வசனம்.

எள்ளளவும்இரக்கமில்லாத கடினமனதோடு கூடிமருவக்கூடாதென்றுசொன்னது உன்றுடையதவச்செருக்கோ-அல்லதுபரா க்கிரமத்தின் ஆண்மையோ-மேலும் உன்னழகுக்கு ஒப்புமையல்ல வென்றேமறுத்துவிட்டாய் ஆகட்டும் நீஎன்னைப்பங்கப்படுத்தினை யேஇதோஉன்னைக்கந்திறகுப் பக்கம்வருவதாகப் பேடிரூபமாய்ச் சாபமிட்டேன்பெற்றுக்கொள்-நான்போய்வருகிறேன்.

பொது - விருத்தம்,

நடனமாதருக்குமேலாம்நங்கையூர்வசியுங்காமக்
காடலினில்மூழ்கிவாடிக்கருஞ்சினமடைந்துசாபம்
இடவருச்சுனன்மெய்யுந்தவெயதில்மாறிப்பேடிரூபம்
உடனேவரவிஜயன்வாடியுளமேலிந்தோடலானே

கட்டியன்சொல் வசனம்.

அச்சரஸைப்படி யென்றுல்தெய்வ ரம்பையருக்கு மேலான ஊர்வசிகாமங்கடலில் மூழ்கித்திராததினுல் கோபத்தைக்கொண்டு அர் ச்சுனனுக்குச்சாபங்கொடுக்க அதனால் அர்ச்சுனன் உளமெலிந்து பி ரலாபிக்கிற விதங்காண்க,

அர்ச்சுனன் பிரலாபிக்கிறதேவார விருத்தம்,

அலைகடல்சயனித்தோனும் அடியவர்மிடியையோட்ட
மலைதனைக்குடையாய்க்கொண்ட வைகுந்தநாதா நின்றன்
நிலையுடன் மறந்தெந்நாளும் நேசிக்குஞ்சிறியேன்முன்செய்
கலையெழுத்தோவென்றுன்னிரதக்களுந்தவினையோகாணேன்

வசனம்.

அலைகடலினித்சயனித்து அடியவர்வினைகளைத் தவிர்க்கும்படி யாய்க்கோவர்த்தனகிரியைக் குடையாகக்கொண்டவைகுந்தநாத- உம்முடைய உபயசரணுரவிந்தங்களை எந்நாளும் அறிந்துசணங்கு ம்படியாகியசிறியனுக்குச் சாபங்கிடைத்ததனைத் தலைவிதியோ அ ல்லதுமுன்செய்ததவுதுவினையோ அறிகிலேன் அரிஹரி.

அர்ச்சுனன் - புலம்புகிற கண்ணிகள் - இ-ப் - ரவசோஸ் - பீசுராஜம்;

ஐயோஆச்சுதா னபசாருசெய்தேனே
அதனுல்வந்ததிதுவோ அறியேனே

மைப்பல்கொண்டேயென்னை மருவவந்தயிந்த
மதியின்றழிதன் றின்னைக் குறியேனே
அத்தோடிம்பர் இந்திரன் தழுவியழைத்தமர்ந்த
[illegible] யிருந்தேச்செய்த விதிதானோ
சித்தையுட்கொடி [illegible] யாடவாவென்று
விரும்பியிங்கழைத்ததும் விதிதானோ
[illegible] மறுத்திடக்கூடாதென்றால்
வாக்கிக்கப்பெல்லாம் [illegible]
[illegible] தேதேசமும்
[illegible] விட்போமே
[illegible] பாசுபதாஸ்திரம்
வாங்கினதுயிதற்கு தானோ
பேடியுருவாய் [illegible] வயிற்றினில்
பிள்ளையிருந்தவர் தேறேன்

அர்ச்சுனன்-பிரலாபப்பட்டுச் சொல்லுகிற தோணுப்பதம்

மாதேயென்னசெய்வதினி மாறாத்துயரமுற்றோமோ
காலேவாடித்திரைகடலிற் கவிழ்ந்ததுமீளாமரக்கலத்தைப்
போலேயகிருமெளியேனைப் பாத்தாக்குமுன்னருளி
மேலேவந்தக்காதுன்பம் [illegible]

வசனம்.

அரி அரி-இவிஎன்னசெய்வேன் [illegible] யரமுற்ற [illegible] கடலில் கவிழ்ந்த மரக்கலத்தைப்போல் [illegible] அடியேனை பாதுகாக்கும் [illegible] இந்தசாபம் பெற்று பேடியுரு [illegible] அரி அரியா [illegible] வேறொரு துணையுமில்லை [illegible]

பொது - கொச்சகம்.

தக்கவிருதுவாடித் தவிக்குமருச்சுனனுக்
[illegible] போலப்
[illegible]
[illegible] தவனே

வசனம்

அக்காலத்திலேயப்படியேயன்றால் அர்ச்சுனன் பேடியுருவமாகி [illegible] கொண்டு [illegible] அவனுடையபிதாவாகியதேவேந்திர மகராஜன் தன் [illegible] கொண்டு வந்து சொல்லு [illegible]



தேவேந்திரன் - யட்சகதூதனுக்குச்சொல் - விருத்தம்.

வளமிகுமரமாதுவில் நானும் வலிவுடனுலாயிக்கொண்டு
உளவிளையுண்மையாக வோதும்யட்சகனே நீயுந்
தளமுறுமனைக்குச்சென்றே தனயனர்ச்சுனனையானும்
டளமுற்றழைத்தேனென்று புகன்று நீயழைத்து வாராய்

வசனம்

கேளும்யட்சகதூதனே - நம்முடைய அறமனைக்குச் சென்று நானழைத்தேனென்று சொல்லி என்குமாரனாகிய அர்ச்சுனனை அழைத்துவருவாய்தூதனே

யட்சகதூதன் - தேவேந்திரனுக்குச் சொல் கவி.

வினவியநண்ணிம் - முனஞ்சென்றந்தத்
தனஞ்செயனைக்கூவிக்-கனம்பொருவேன்

யட்சகதூதன்-அர்ச்சுனனுக்குச்சொல்-கவி

அண்ணலேயும்மைப்-அழைகாராயிரம்
கண்ணனுஞ்சொல்லுக்-கழைத்தலர்வருவீர்

யட்சகதூதனுக்கு-அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

ஓதுவேனிரவிருக்கேயூர்வசிவந்தென்மீதிற்
காதல்கொண்டழைத்தாள்சேரக்காரணமல்லவென்றேன்
மாதுடன்சபித்துப்பேடிமயமாக்கிவிட்டுச்சென்றாள்
ஆதலால்வரவொண்ணாதென்றவர்க்குநீபோய்ச்சொல்வாயே

வசனம்.

கேளாய்தூதவனே-இராத்திரிஊர்வசியானவள் என்மீதில்காதல்கொண்டு இங்கேவந்து என்னைமருவும்படியழைத்தாள் நான்கூடாதென்று மறுத்தேன் அவள்கோபங்கொண்டு என்னைப்பேடிரூபமாகச்சபித்து விட்டுப்போனாள் ஆகையால்நான் எப்படிவருவேன்நீ போய்ச்சொல்லுவாய்தூதவனே.

யட்சகதூதன் அர்ச்சுனனுக்குச்சொல்-வசனம்

அப்படியாயிதோ-ஒருநொடியிற் சொல்லுகிறேன் மகாராசனே.

யட்சகதூதன்தேவேந்திரனுக்குச் சொல்-விருத்தம்.

போட்டைத்திட்டேனையாபொற்பாரூர்வசியுங்காத
லாயவாலிகன்மேவியணைந்திடசொன்னளாம்நீ
தாயவாவென்றேதரட்சணப்பேடிரூபம்
ஏயவேசபித்தாளாம் நானெப்படிவருவேனென்றார்

வசனம்

சாணஞ்சாணம்ஜயனே தாங்கள்சொல்லியபிரகாரம் அர்ச்சுனமகாராசனைப்போயழைத்தேன் - அவரிடத்தில் இராத்திரி ஊர்வசி

ஆவல்கொண்டுவந்து மலரணையில்மகிழ்ச்சியாய் மருவும்படிக்குக் கேட்டாளாம் நீராயல்லவாவென்றுசொன்னாராம்அதற்கு அவ்வூர்வசி கோபங்கொண்டு அவரைபேடிரூபமாகச் சபித்துவிட்டுப் போனாளாம் ஆகையால்அர்ச்சுனருக்குத் தவசுக்கடாதென்று உங்களுக்குச் சிந்தையிடச்சொன்னேன் மகாரதரே.

தேவேந்திரன்சொல் - விருத்தம்.

இதுவநான்முன்புசெய்தவெறுந்தவம்நானுமோவத்தி
மறிதுதற்குந்தியென்னுமாதுசெய்குமரனிப்போது
புதுமையென்கிச்சுனன்செய்பொல்லாததாமாயினனைப்
புதுமையேசொல்லுவதுமுன்செய்லோகம்பதுமாமே,

வசனம்.

ஹரிஹரி இதுவும் நான்முன்புசெய்ததவக்குறைபோல அல்லது திரியர்த்தியர்த்தும்பின் குந்தியென்றியும்அர்ச்சுனன்செய்த தகாதவ ஊர்வசியோ இன்னம்வெகுதேடு இந்தக்காரணத்துக்கு என்னசெய்வேன்கர்த்தனே.

தேவேந்திரன் - அர்ச்சுனனுக்காகவிசனப்படுகிற

ஓரடி - தரு - இராகம்நீலாம்புரி - ஆதிதாளம்

அரிஅரி - இதற்குத் தானே
அர்ச்சுனன்கொண்டுவந்த பேடுநூ

அலக்கிடத்தானில்லா - மேலையினின்றுயிக்கொளும்
கலவனையிருவொரு - மலையெனவந்ததைச்
சற்றும்நீரியிதோ - சாவைசொல்லையா

சாதகமாகிய - பாதக ஊர்வசி
காதல்கொண்டபின்பு - வாசகமடைந்திருல்
சாபமிட்டனளென்று சாரலைச்சொன்னதிநால்

தத்தளித்திடவுடல் - புத்தியுமாறுதே
பெற்றவளுக்கிடிந்தசபியேவதியுறு
சக்கடமாய்ச்செய்து - தனஞ்சயனுக்குமனஸ்தி

தாபமுமெக்கேட - கோபமுங்கொளவென்ன
பாவஞ்செய்தேனோ - கேவலக்கேட்பவர்
தாய்களும்தகைப்பாரோ - தாழ்வதிநால்நேருமே

சத்தியமோயி - நித்திடமோசொலத்
சித்தமுமுருகுதே - அத்தனேயென்னசெய்வேன்
சிறுமதினைத்தவந்த - தமூவில்லாதூர்வசியின்

தன்மையும்அவள்குண - வன்மையுங்குறித்திடா
நன்மையேவில்லையென - நம்பநக்கொண்டதிக்குமி



சந்தோஷிக்கொண்டாலல்லோ - தருமம்நிலைநிற்குமே
தாசிகள்மேலகெட்ட - வேசியென்றேயெங்கும்
பேசிபேயாவரும் - எடுத்துச்சரியாச்
சாபங்கொடுத்தவனைச் சபையினிற்சேர்க்கலாமோ
சாமியேயெழிற்காம் - நேமியைவைத்தநாயக
பூமியையளந்திடும் - வாமனேதுணையார் அரிஅரி

தேவர்கள் - தேவேந்திரனுக்குச்சொல் - விருத்தம்

வாடியேதவித்துவீணாய் வருத்தமுற்றுவதென்ன
நாடியேயர்ச்சுனன்பால் நண்ணியம்மாதராலுற்ற
பேடிரூபத்தைநீக்கிப் பிரியமாய்முன்போலாகக்
கூடியகாரியத்தைக் குறைவறச்செய்தல்நன்றே

இதுவும் - தேவர்கள்சொல் - விருத்தம்

குறைவுவந்துற்றதாக்க கூறியேவிசனங்கொண்டு
நிறைவுறுமனதிற்சற்றும் நினைத்திடவேண்டாமையா
முறையிலாமைபல்கொண்ட மூர்க்கவூர்வசியினாலே
அறைபுஞ்சாபந்தனைத்தீர்ப்ப தழகுநன்றாய்த்துயாரீர்

வசனம்.

கேளுந்தேவேந்திரமகாராஜனே தேவரீர்விருதாவில் மனஸ்தாபப்படவேண்டாம் அர்ச்சுனனிடத்திற்குநாமெல்லோரும்போய்அந்த முறைமையில்லாதவூர்வசி இட்டசாபத்தை அவளாலேயேதீர்ப்பது மிகவும்நன்றாயிருக்கின்றதுயோசித்துப்பாரும் மகாராஜனே.

தேவேந்திரன் - தேவர்களுக்குச்சொல் - விருத்தம்

பாருமென்றுரைத்தீரந்தப் படியினைத்தேவரெல்லாரும்
சேருமருச்சுனன்பாற் சேர்ந்தவனுக்களித்த
காருகுழலினாளைக் கனம்பெறவழைத்துச்சாபந்
தீருதற்குபாயந்தன்னைத் தேடுவோமெழுந்துவாரீர்

வசனம்

கேளுந்தேவர்களே உங்கள் சொற்பிரகாரம்நானுஞ் சம்மதமானேன் - நாமெல்லோரும் அர்ச்சுனனிடஞ்சென்றுஅவனுக்குச் சாபங்கொடுத்த ஊர்வசியை மேன்மையாக அழைத்து அவளாலே யேநிவர்த்திசெய்யவேணும்வாருந்தேவர்களே.

தேவர்கள் - தேவேந்திரனுக்குச்சொல் - கவி

எந்நிலமும்புகழும் பொன்னுலகத்தரசே
நின்னிடசொற்படியே நன்னயமாய்வருவோம்

அர்ச்சுனனிடம்போருப்போது- தேவேந்திரன் சொல்

சன்னிகம்- இ- ம்-காப்போதி அடதாளம்.

மணிபாசுரம்விட்டுவாருங்களர்ச்சுனனைப் — பார்க்க - அந்த
மங்கையூர்வசிபால்வந்தசபந்தனைத் — திரக்க
கனிகையபலமெரத்துக்காத்தல்பதத்தினை — நாடித் - தறி
காதலுடன்செய்யுங்கலியர்க்கெதிருல் — கூடி
வந்திடுவீர்களென்னமைந்தல்மாந்தனைத் — தேற்றி - நல்ல
மார்க்கம்புரியஉங்கள்காக்கேசகர்யந்தான் — போற்றி
இந்துறுகலானேத்தத்தம்மாயிட்சனை — அழைத்து - அவன்
இஷ்டத்திற்றினைநதைதக்கேட்டுருளோ தருவோர்கல்முகத்து
எதுவுந்தெரிக்கச்செய்யலென்றெண்ணியிருப்பவ ஞச்சே - சொல்லா
யிடரிடிபோல்வந்த வெய்தின்றெனக்குத்தான்பேச்சே
புதுமோகக்கொண்டார்ளேபத்ரமென்னவும் — பாராமல்- விட்டுள்
புகுந்துபேரிட்டுச்சாபம்புகன்றதும்போமோநேராமல்
ஈசனிடம்பெற்றுபெற்ற எதிறபாசு பதத்தின்மேல் ஆசையோ - அன்றி
எதிரிலினியிலாளென்றிருப்பதினிம் — பேராசையோ
வாசமானவெந்தக்கமைந்தவென்றுசொல்லாத — தாலோ - அந்த
மங்கையுனதிலென்ணிவந்ததும்மந்திறதி — ரூலோ

பொது:கொச்சகம்,

சீரிருந்தயிந்திரனுந் திசைத்தாயிரக்கண்ணில்
நிர்கனுப்பப்பரிசனமும் திரைந்திடவந்தேயிருப்பன்
நேர்நின்றுபார்க்கவவன் தின்னைபல்லாதென்கெல்று
ஆர்துணைவெல்தேயிலாருசி யபயமிட்டுச்சொல்வானே

கட்டியன்சொல்-வசனம்

அகோசெப்படியென்றால் தேவேந்திரமகாராஜனானவன் அப்ஸ ரங்கனைகளிலும் நிர்சனுட்டும்படியாய் தன்னுடைய பரிசனங்களு டனேஅர்ச்சுனனிடத்திலவர் தேவேந்திரனைப்பார்த்து உம்மையன் பிளைக்குஇவ்விட்டத்தில் தனையொருவருண்டோ வென்றுசொல்லி வியசனப்படுகிறவிதங்காண்க.

அர்ச்சுனன் - தேவேந்திரனிடத்திற் சொல்லி புலம்புகிற- தரு

இராகம் - ஆகிரி - அடதாளம்

பல்லவி

ஐயனே பாராய் - எனக்குவந்த
அவதியைத்தீராய்

அநுபல்லவி

தையலாளூர்வசி - தனித்திருக்கு — வந்ததும்
சாபங்கொடுத்ததுப்பிர - தாபக்கொடுத்ததும் — ஐயனே



சரணங்கள்

சுந்தரமாகவேசோடித்த — மஞ்சத்தில்
துயின்றநாராயணனைத்-துதித்துமே — நெஞ்சத்தில்
மந்த்ரஞ்செபித்து-மகிழுஞ் — சமயத்தில்
வந்தவிதியைச்சொல்வேன்-எந்தமதியில் — வெல்வேன் (ஐய)
அதிககாதல்கொண்டு-அணையும்படியா — யென்னை
அழைத்தாள்கூடாதென்றே- அறைந்தேன் - கதைதன்னை — காரியம்
இதுவோவும்வீரியம் -என்னகான் — பேசி(ஐய)
என்றுபலவாபேசிநின்றலருவாய்ப் — இல்லையோ
பத்தனைச்சொல்லியுநெஞ்சிர்க்குமனத் — தொல்லையோ
இதுவும்நான்முன்செய்த- இழிவான — மென்று
பித்தகோகேட்டி...படியாவா
பின்னுக்கிடைந் ...மாது- என்னசெய்வேனப்போது ஐய)

தேவேந்திரன் - அர்சுனனுக்குத்- தேறுதலைச்சொல் - விதந்தும்

கலைபோக்காரியமானவந் தளர்ந்திடாமனதனுக
மலைபோலநிற்குநீயும் மனஸ்தாபப்படுவதாமோ
நிலைகலங்காதேயந்த நரிலையானைக்கொண்டே
அலையிலாமுன்போலுன்னை யாக்குவேனஞ்சவேண்டாம்

வசனம்

கேளாய்என்னமுடைகுமாரனான அர்ச்சுனா நலப்போருக்கா கியமானவுஞ் சித்தம்பிரமிக்காமல் மலைபோ லெதிர்த்துமற்போ திடும்வல்லவனானநீயும்இதற்காகமனஸ்தாபப்படலாமா இதோ அந் தவூர்வசியை அழைப்பித்து அவளாலேயே முன்போல எவ்வர்ன மாகச்செய்கிறேன்பயப்படாதேஅப்பா அர்ச்சுனா.

இந்திரன்- தூதவருக்குச்சொல்- விருத்தம்

சொன்னவெதிரில்நின்று சாற்றுந்தூதவனேகேளாய்
விரைவினில்நீயுங்கள்சென்று வேலினையனையகண்ணாற்
சரசங்கள்மிகவேசெய்யத் தக்கவூர்வசியைநானும்
பரிவுடனழைத்தேனென்று பகர்ந்துடனழைத்துவாராய்

வசனம்

கேளாய்தூதனேநீஅதிசீக்கிரமாகச் சென்றூர்வசியை நான ழைத்தேனென்றுபிரியமாகச்சொல்லிஅழைத்துவருவாய் தூதனே

தூதன் - இந்திரனுக்குச்சொல் - கவி

தேவரீர்சொன்ன - திருமொழிப்படியே
தேவமாயழைத் - திதோவருகுவனே

வசனம்

சரணஞ் சரணம் அப்படியே அழைத்துவருகிறேனையா

நாதன் - ஊர்வசிக்குச்சொல் - விருத்தம்

சசிமணவாளன்மெச்சுந் தங்காப்சபையில்நின்ற
சசிகாமுடனேயாமிரு சுந்தரத்தினையிலாஊர்
வசிபேதாய்பன்னவாழ 'மன்னக்கதிரைக்காபுன்னே
தனிவிலாதவமுந்துக்கொண்டு தம்பட்டைச்சொல்லுறே

[வசனம்]கேளாய் ஊர்வசி நம்முடைய இந்திர புபதியானவர் உன்னை அதிசீக்கிரமாய் அழைத்துவர சொன்னார் வருவாய்ஊர்வசி

ஊர்வசி - நாதனுக்குச்சொல் - கவி

அன்னமலர்மொழிக்கு-அட்டியேன்றன்போ
வன்னமாளிகைக்கு-வருகிறனேபா

ஊர்வசி - தேவேந்திரனுக்குச்சொல்போற்றி - விருத்தம்

புசழ்பெருந்தாரும்வாழ்த்தப் பொலிந்தசக்கிரமாகம்
பசுருட்சத்தையாளும் பராக்ரமவானேபோற்றி
இகமொழிற்கறதானும் எழிற்கொலு மடப்பிரிஞ்ச
மகிழ்வுடனவனக்கு வழைத்தவர்ச்சொல்வீர்போற்றி

வசனம்

சரணஞ் சரணம் சுவர்க்கலோகாதிபதியாகிய தேவேந்திரபூபதியே-இந்தாள்வரைக்கும்அடியாளைக்கொலுவுக்கு வரும்படியாய்ச் செய்வீர்-இன்றையதினம்திருமாளிகைக்கு அழைத்ததைத் தெரியும்படியாய் அருளிச்செய்யவேண்டும்சுவாமி.

பொது - விருத்தம்

நாயனமுற்றவளாய்க்கிடும் நயனங்கள்நாட்டங்கொள்ள
கோமளமாய்முகமுமாசக் கோமான்றன்புயிறைஞ்ச
சேணாசனந்திரும்பித் தேவர்கள்முகத்தைப்பார்க்க
புனலிமுசலையானுக்குப்புகலுவார்தருந்தானே

கட்டியன்சொல் - வசனம்

அசோதைப்படியென்றுஊர்வசியானவள்மனதிலேஅச்சமாய்கண்கலங்கிநோக்கவும் முகம்கோணலாகவும்விந்த தேவேந்திரராசனேவைக்க இந்திரமகாராஜன் ஊர்வசியைப் பாராமல் தேவர்களைப்பார்க்கத்தேவர்கள் ஊர்வசிக்குச்சொல்லுகிற விதங்காண்க

தேவர்கள் - ஊர்வசிக்குச்சொல் - விருத்தம்

செய்யவள்மகிழ்கொள்ளத்திருவினிற்சிறந்தோர்முந்
தையலேகேளாய்காமந் தயக்கெறிதாதுக்கோபஞ்
செய்யவொன்றுமையென்ற சிறப்பினைகேட்டிருந்தும்
மையவேவிஜயனுக்குப் பகர்ந்திடலாமோசாயம்



வசனம்,

கேளாய் அதிரூபசித்திரவிசித்திரமுள்ள ஊர்வசியேதனக்குள்ளடங்காமல் காமத்தலைக்கேறினாலும்கோபங்கொள்ளக் கூடாதென்ற கூறியபழமொழியைக்கேள்விப்பட்டிருந்தும் அர்ச்சுனனுக்குச் சாபங்கொடுக்கலாமோ சொல்லாய் ஊர்வசியே.

ஊர்வசி - தேவர்களுக்குச்சொல் - விருத்தம்,

சாற்றுவேன்கேளீர் காமச் சாகரந்தனிலேமூழ்கி
ஆற்றிடவேண்டுமென்று அரிவையாளானாலும்
போற்றிவந்தவோர்ஆணும் புணர்ந்திடவேண்டுமென்று
சாற்றிரச்சொன்னதோர்த்துந் தனந்தயன்றடுக்கலாமோ

வசனம்,

கேளுங்கள்தேவர்களே காமக்கடலில்மூழ்கி பருவமேல்மையல்கொண்டு அணைந்துவிப்பாயென்றாலும்ஸ்திரீகள்யாராகிலும்வருவார்களானால் அவர்களைத்தழுவவேண்டுமென்று சாஸ்திரங்கள் சொல்லியதைப்பார்த்திருந்தும் அப்படியே நடவாமல் அர்ச்சுனமகாராசன் தடுக்கலாமோ தேவர்களே.

தேவேந்திரன் - தேவர்களுக்குச்சொல் விருத்தம்.

மெய்யிதவ்வர்முறைக்கு விதமாறுகேளீர்
வையகத்தரசனென்றன் மகனாய்வாழிசைந்துச்செய்ய
ஐயமுற்றதமூர்வசை யார்பெண்டாச்சேபாவம்வந்
தய்யுமெனறநிருலென்றே மோகமுதென்னுரைத்திற்றுனே

வசனம்.

கேளுந் தேவர்களே இவள் சொன்னதிவள் முறைமைக்குச்சரிதான் ஆனாலும்என்குமாரன் அர்ச்சுனன்அப்படி நடந்திடக்கூடாதென்றசொல்லியது அவனுடைய மூர்சதையின்மனேவியாச்சே அவளைச்சேர்ந்தால் பாவம்புண்டாமேயென்று நினைத்தாற்போலவன் இருந்திருப்பான்றன்றது தேவர்களே,

தேவர்கள் ஊர்வசிக்குச்சொல் - விருத்தம்,

மன்னவனுர்வேண்டுதலாயிக்குவந்தார்
வந்தவிடத்தனிலேயவருக்கோர்துன்பம்
அன்னிமோகினிலமக்கும்தம்மையாளுந்
துரைக்குவந்தயிழிவனவேசொல்வரியாரும்
கண்ணியேபொறுக்கருளியிட்டசாபம்
கழித்திடவும்மனமுமெலக்கருத்திர்பார்த்தன்
பன்னிருக்காலயில்வாழும்மாற்றசாபம்
வராமலிருக்கவுநீபகர்ந்திடாயே

வசனம்.

கேளாய் ஊர்வசியே நம்முடைய அரசனுர் வேண்டுகோட்பற்றி அர்ச்சுனமகாராஜன் இவ்விடம் வந்தநாள் அப்படியவர் ஒருவருக்கு ஒருநாள் வந்தால் எந்தக்குறைவானாலு நம்முடைய அரசனுக்கும் நமக்கும் வந்ததாகப் பாவநாந் சொல்வார்கள் ஆகையால் அந்த மகாமேரு ஆக்ஞைபெற்றருளி கொடுக்கப்பெடிருப் பேந்தப் போராடாக்கவும் அர்ச்சுனன் எப்போதும் வெண்ணில் மென்றுதிர் காக்கின்றுள்ளே அப்போதுவரவும் மற்றக்காலமில்லாமலிருக்கவும் மகாசபைக்கேற்ற தருணுவாய் ஊர்வசி

ஊர்வசி-தேவர்களுக்குச்சொல்-விருத்தம்.

கட்டமாய் நீங்கள் சொன்ன தன்மையைப்பார்த்தனுக்கு
இட்டுநிம்பெடிருப்பவைவு நினைக்குவேவந்
தொட்டமற்றக்காலந் தொடராமலிருக்கவுஞ்சீர்
பட்டிடவுங்களித்த பார்த்தனம்பிகைபெற்றாளே

(வசனம்) கேளுங்கள் தேவர்களே - நீங்கள் சொல்லிய பிரகாரம் அர்ச்சுனமகாராஜனுக்கு நான் கொடுத்த பேடிருபம் நீங்கவும் மறுபடியும் தானெப்போது வேண்டுமென்று நினைக்கின்றுனோ அந்தக்காலத்தில் வந்துபொருந்தவும் மற்றக்காலத்தில் வாராமலிருக்கவும் மகாகளிப்புடன் மறுபடியும் வரங்கொடுத்தேன் தேவர்களே.

பொது-வெண்பா.

பேடியுருமாறியே அர்ச்சுனனுஞ்
சோதிசேர்நவமணிசேர்த் துலங்கியணைக்கண்டவிந்திரன்
போதமனமகிழ்ந்தப் போதேவெதிரிற்றிருந்
கோதையூர்வசிதன்னைக் கொண்டாடிச்சொல்வானே

கட்டியக்காரன்-வசனம்.

அகோ கேட்டுயென்றும்-அர்ச்சுனமகாராஜன் பேடியுருவம் நீங்கி மோசந்நவமணியைப்போலப்-பிரகாசித்திருப்பதைப்பார்த்து தேவேந்திரமகாராஜன் மனமகிழ்ந்து ஊர்வசியைப் பலவிதமாய்ப் புகழ்ந்து சொல்லுகிறவிதங்காண்க,

தேவேந்திரன்-ஊர்வசிக்குச்சொல்வாழி-விருத்தம்.

அளிபெறும்விழியாளே கரும் அன்னமேவாமாபார்
களிநிகர்மேனியாளே சொர்ணமேவாழிசெம்பொன்
ஒளிநிகர்மொழியுருளே தேமேவாழிசெம்பொன்
ஒளிநிகர்கொலுவில்நாளை புதயத்தில்வருவாய்வாழி

(வசனம்) வாழிவாழியூர்வசியே நீ நாளையதினம் உதயகாலையில் கொலுவில்வந்து சேரவேண்டியது போய்வருவாய் ஊர்வசியே



ஊர்வசி-தேவேந்திரனுக்குச்சொல்வசனம்.

சரணஞ்சரணம் அப்படியே தேவரீருத்தாரப்படி வந்துசேருகிறேன் மகாராஜனே.

தேவேந்திரன்-மனக்குவந்திருந்த- யாவருக்குஞ்சொல்-விருத்தம்.

முப்பத்துமூன்றுகோடி முனிவரோ தேவரேசீர்
செப்புதற்கரியதான சேனைகள்கேளீர்நீங்கள்
ஒப்புடன்சென்றுநாளையுதயத்தில்கொலுவினுக்கு
வட்புறவன்னமுன்வெந்தெலாஞ்சேருவீரே

வசனம்.

கேளுங்கள் தேவர் முனிவர்கருடகாந்தருவ சித்தவித்தியாதரர்களே இவ்விருக்கப்பட்ட சேனைகளே நீங்கள்யாவரும் இன்றுமனைக்குச்சென்று நாளையுதயத்திற்குக் கொலுவுக்கு வர வேண்டியது போய்வாருங்கள் தேவர்களே,

தேவர்கள்-தேவேந்திரனுக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணம் எங்களாண்டவனுகிய தேவேந்திர மகாராசனே-தங்கள் திருவாக்கின்படியே நாங்கள் எங்கள் ஆலமனைக்குப் போய் வருகிறேமையா.

முனிவர்கள்-தேவேந்திரனுக்குச்சொல்-வசனம்.

ஆசிர்வாதம்ஆசிர்வாதம்போய்வருகிறோம் தேவேந்திரமகாராசனே

தேவேந்திரன்-முனிவருக்குச்சொல்-வசனம்,

சரணஞ்சரணம் போய்வரலாஞ்சுவாமிகளே.

பொது-விருத்தம்

அந்தமுனகருடகாந்தருவர்சித்யாதரர்கள்
அரவர்முதலில்லமேகி
ஆர்ந்திருளொழித்துகாலக்கடனியற்றியே
அருகணைவயொடமுதமுண்டு
கந்தமிகுசடையில்வந்திடவுமிந்திரனுடன்
காணையுங்கொலுமேவியே
கனவுமகனையும்மௌனவுயகளையுங்
கருநிறந்துறிபுரிந்து
சந்தமிகுமாவ்பணிந்தமையர்பாற்செல்கவிடை
தாவெனப் பரிசளித்துத்
தாளமேளங்கள்பலபூரிபேரிகைதட்டி
தாய்கள்கொடுவழிவிடுக்கப்
பத்தமிகுதன்றமைபரிடம்வந்திறைஞ்சிதம்
பாசுபதம்பெற்றவிதமும்
பரித்திந்திரலோகமளவுஞ்சென்றவந்ததும்
பகர்ந்துவாழ்ந்[illegible]ம்மரோ
அர்ச்சுன - மூற்றிற்று

வாழி- விருத்தம்.

நிலிகொண்டதருமனுந் தம்பிமார்களுங்வருந் திரௌப தான்வாழியே-இயற்றந்திபாக பகுடிதிசிருனந் தேவர் ஏ ரும்வாழியே-கனிகொண்டமாதவரும் வேதவேதியர்களுங் கண நாவலர்வாழியே-கத்துக்கடர்ச்சூழ்ந்தபாரிலுள்ளோர்களுங் கரு பெற்றேவாழியே! துணிகொண்டதிருநின்றவூரில்வாழ் வேளாள ராசபாபதிவாழியே- அறிபெற்றமாதவதிவாசவச்சக்கூடஞ் சக ந்தநிகம் வாழியே - அணிகொண்டவர்ச்சனன் தபசை வெழு வெழுத்ததனிலமுராய்புரிந்தே - ஆர்க்குமுதவியாக வச்சிட்டதே விருத்தநீதகசுப்பராயாழியே,

மங்களம்

விருத்தம்

முத்தியைத்தருமூவருக்கும் முனிவர்க்குமம்மாதர்க்கும்
பத்திமைத்தருக்கலைக்கும் பாண்டவர்திரௌபதிக்கும்
புத்திமைத்தரும்புவுக்கும் புகழ்பெருஞ்சபாபதிக்கும்
சத்தியகோவிந்தனுக்குந் நவிமங்களஞ்சொல்வோமே.

இராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி

மங்களம்-மங்களம் நித்தியஜெய
மங்களம்-மங்களம்

அநுபல்லவி

மங்கள மேவிய சக்குரசக்காயர்ரினை
அங்கபற்றுவிய- செங்கண்மாலுக்கும் மங்களம்

சரணங்கள்.

சகலதேவருக்கும்- புகழ்கொண்முனிமா ருக்கும்
அகிலலோகருக்கும்- இகமிக்மறைக ளுக்கும் மங்க

சித்தமகிழ்வாய்ப்- படித்தபேர்க ளுக்கும்
புத்தியதனில்வைத்- தர்த்தங்கேட்ப வர்க்கும் மங்க

திருநின்றவூரில்வாழ்-சுபாஞ்சபாபதி க்கும்
தருமனுத்திரைப்-பெருக்கோயிற்த னுக்கும். மங்க

முற்றும்.